www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි Puthiya Poomi

சுற்று 17 டிசம்பர் - ஜனவரி 2010 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 128





## யார் வந்தால் என்ன

ஜனவரி 26 ஆம் திகதி நாட்டிற்கு முக்கியமான நாளாம். இலங்கை மக்களுக்கு ஜனநாயகத்தினை மீள உறுதி செய்வதற்காக "மாற்று" அரசியல் தலைமை தெரிவு செய்வதற்கான நாளாம். அதாவது இன்னொரு ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் தினமே அதுவாகும்.

இலங்கையென்ன லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றா? இங்கு ஜனாதிபதி தேர்தல் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் ஏகாதிபத்தியத்திற்கு சார்பானவராகவும், மற்றவர் ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவராகவும் மக்களின் சார்பானவராகவும் இருக்கின்றாரா? மக்கள் ஏகாதிபத்தியத்திற்கு சார்பானவரை நிராகரித்து மக்களுக்கு சார்பானவரை தெரிவு செய்வதற்கு இருவரில் ஒருவர் அவ்வாறிருக்கிறாரா?

பிரேசில், பொலிவியா, நிக்கரகுவா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளில் அண்மைக்காலமாக நடைபெற்ற தேர்தல்கள் எல்லாமே முக்கியமானவையாக இருந்தன. ஏனெனில் அங்கு அமெரிக்க ஏகாதிபதியத்திற்கு எதிரானவர்களை மக்கள் தேர்தல்களில் தெரிவு செய்துள்ளனர். அங்கு அமெரிக்காவின் பொம்மை ஆட்சிகள் நடைபெற இடமளிக்கவில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற நிகழ்ச்சி நிரலை இலங்கையில் அரசியல் ரீதியாக தலைமை கொடுத்து முன்னெடுத்த மஹிந்த ராஜபக்ஷவும், ராணுவ ரீதியாக தலைமை கொடுத்த சரத் பொன்சேக்காவும் பிரிந்து நின்று நாட்டின் தலைமையை கையில் எடுக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்றனர். சீனா, பாக்கிஸ்தான், வியட்னாம் ஆகிய நாடுகளிடமிருந்து வெளிப்படையாக இராணுவ உதவிகளை பெற்றுக்கொண்ட போதும் இந்திய மேலாதிக்க சக்தியானது யுத்தத்தை நடாத்தி ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அழிவதற்கு காரணமானார்கள். யுத்த அழிவுகளுடன் சர்வதேச நிதி நிறுவனங்கள், ஏகாதிபத்தியநாடுகள் போன்றவற்றின் நவகாலனித்துவ பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கை முற்றாக மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய சக்திகளை எதிர்ப்பது போல் அவ்வப்போது சில சொற்களை உச்சரித்தாலும் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவை பயன்படுத்துவதாகக்கூறிக் கொண்டு இந்திய மேலாதிக்க வலையில் வீழ்ந்துள்ளார். அந்த வலை அமெரிக்க ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்குரியதாகும்.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜெனரல் பொன்சேகா நேரடியாக அமெரிக்க ஏகாதிபத்திய அக்கறைகளுக்கு உட்பட்டவர் என்பதைச் சொல்லித் தெரியத் தேவை இல்லை. இவர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என இலங்கை மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் இன்னொருவரை விட நல்லவர் என்பதற்கான அளவு கோல் என்ன?

நவகாலனித்துவ பிடி இலங்கையின் பொருளாதார விடயங்களில் மட்டுமன்றி அரசியல் விடயங்களிலும் ஆழமாக இறுகியுள்ளது. பர்மா, தாயலாந்து போன்ற நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு விருப்பமில்லாத தலைமைகள் ஆட்சிக்கு வந்தபோதும் நெருக்கடிகளினூடாக அங்கு ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆப்கானிஸ்தானில், ஈராக்கில் பொம்மைகளை ஆட்சியில் அமர்த்துவதை ஏகாதிபத்தியம் அதன் விருப்பமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் வித்தியாசமான சூழ்நிலையில் இரண்டு பிரதான வேட்பாளர்களையும் ஏகாதிபத்தியமே ஆசீர்வதிக்கிறது. அதாவது வேட்பாளர்கள் நிறுத்தும் தெரிவை கூட இலங்கையருக்கு (முதலாளித்துவத்திற்கு) கொடுக்காமல் வெளிச் சக்திகளே தீர்மானித்துள்ளன.

தங்களுடைய நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க கூடிய இரண்டு பேரே இங்கு பிரதான வேட்பாளர்களாக இருப்பது வெளிநாட்டுச் சக்திகளுக்கு மகிழ்ச்சி. மஹிந்தவிற்கு ஏற்ற போட்டியாளராக சரத்பொன்சேக்காவை நிறுத்துவதை நியாயப்படுத்த அரசியல் தலைமையில் மாற்றம் வேண்டும் என்ற கருத்தை மேற்கத்தய ஊடகங்களே தொடக்கி வைத்தன. இதிலும் நவகாலனித்துவ ஊடக ஆதிக்கமே இருந்துள்ளது.

2ம் பக்கம் →

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துரோகத்தனமான முடிவு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சரத் பொன்சேகாவை நிபந்தனையற்ற வகையில் ஆதரிக்க எடுத்த முடிவு தமிழ்த் தேசிய இனத்திற்கு இழைக்கப்பட்ட மிகப் பெரும் அரசியல் துரோகமாகும். இது காலத்திற்குக் காலம் தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டாளர்களான தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து முன்னெடுத்து வந்த தவறானதும் அழிவு தருவதும் துரோகம் இழைப்பதுமான முடிவுகளின் தொடர்ச்சியே ஆகும்.

தமிழர்களின் தேசியம் சுயநிர்ணயம் தன்னாட்சி என்பவற்றைப் பெறுவதற்கு தொடர்ந்தும் போராடுவது என்ற தீர்மானத்தை தமிழரசுக் கட்சியின் மாநாடு என்று கூறப்பட்ட கூட்டத்தில் நிறைவேற்றியதாக ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பின்பே சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு ஏகமனதாக எடுத்துக் கொண்டது. ஆனால் அதற்கு முன்பு தமிழ்க் காங்கிரஸ் கட்சி தேர்தலைப் பகிஷ்கரிப்பது என முடிவு செய்திருந்தது. அப்படியானால் எப்படி ஏகமனதாக்கியது என்று புரியவில்லை. இன்று வரை எடுத்த முடிவை தமிழ்க் காங்கிரஸ் வாபஸ் பெற்றுக் கொள்ள வில்லை; அதே வேளை கூட்டமைப்பு சரத்தை ஆதரிப்பதாக முடிவு வெளியிட்ட ஊடக அறிக்கையின் போது தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூடவே வீற்றியிருந்தார். அதன் அர்த்தம் தான் என்ன?

இவை மட்டுமல்ல. தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த பா. உறுப்பினர்களான சிறிகாந்தா, சிவாஜிலிங்கம், கஜேந்திரன் அண்மையில் விடுவிக்கப்பட்ட கனகரத்தினம் என்போர் மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் உள்ளனர். இவ்வாறான சூழலில் எப்படி ஏகமனதாக முடிவு செய்துள்ளதாகத் தமிழ் மக்களை ஏமாற்ற முடியும்.

சம்மந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் முடிவு தமிழ்த் தேசியவாத மேட்டுக்குடிகளின் விருப்பின் பேரில் அந்நிய சக்திகளின் அரவணைப்புடன் எடுக்கப்பட்டதேயாகும். அந்த முடிவுக்கும் நொந்து நொடிந்து வாழவகையற்று நிற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசமும் மேட்டுக் குடி உயர் வர்க்கத் தமிழர்களின் உள்ளார்ந்த விருப்பமே கூட்டமைப்பின் முடிவாகும். அமெரிக்க ஆசீர்வாதம் மட்டுமன்றி அங்கும் மேற்குலகிலும் வாழும் மேட்டுக் குடித் தமிழர்களின் விருப்பமும் அது வேயாகும். ஆனால் இத்தகையவர் களின் கடந்த காலமுடிவுகள் தான் தமிழர்களுக்குத் தூக்கு கயிறாகியது. அதிலிருந்து எவ்வித பாடமும் படிக்காத தமிழ்க் குறுந்தேசியவாதப் பிற்போக்குத் தலைமையான த.தே. கூட்டமைப்பு மீண்டும் அதே பாதையில் தூக்கு கயிற்றைத் தமிழ் மக்கள் மீது எறிந்து நிற்கிறது.

கடந்த காலத்தின் பட்டறிவுடன் இப்போது த.கூ. எடுத்துள்ள முடிவையும் இணைத்துப்பார்த்து தமிழ் மக்கள் தூர நோக்குடைய அரசியல் முடிவுக்கு வர இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிந்தித்து செயலாற்ற வேண்டும். தமிழ்த் தலைமைகள் எதற்கும் தனித்துவமான துணிவுள்ள முடிவை எடுக்க முடிய வில்லை என்பதை உணர்ந்து தமிழ் மக்கள் சரியான துணிவான தமது முடிவை இத் தேர்தலில் வெளிப்படுத்த வேண்டும். அண்மையில் யாழ் மாநகர சபைத் தேர்தலின் போது நடந்து கொண்டது போன்ற நிராகரிப்பையும் அதற்குமப்பால் வாக்குச் சீட்டை செல்லுப்படியற்றதாக்கி தமது வெறுப்பு எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதே சரியான செயலாக அமைய முடியும். அதுவே த.கூட்டமைப்புக்கு முகத்தில் வழும் அடியாகும்



www.padippakam.com    நன்றி - நூலகத்திட்டம்





# நமது தோழர்களை தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பது ஏன்?

சிறைக்கைதிகள் மனிதர்களே என்வாசகம் மூன்று மொழிளிலும் வெலிக்கடைச் சிறைமதில்களில் இருப்பதை வீதியால் செல்வோர் நாளாந்தம் காண்கிறார்கள். ஆனால் சிறைச்சாலைகளில் சிறைச்கைதிகள் அதுவும் விசாரணை இன்றிப் பல வருடங்களாக இருந்து வரும் மனிதத்தன்மை அற்ற விடயம் இப்போது இரகசியம் அல்ல. அண்மையில் தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணைக்கு நிறுத்த வேண்டும் என தலைநகரிலும் நாட்டின் ஏனைய சிறைகளிலும் கைதிகள் உண்ணாவிரதமிருந்தனர். அது சாகும் வரை உண்ணாவிர மாகி சிலர் வைத்தியசாலைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு நீதி வழங்குவதில் ஏன் இழுத்தடிக்கப்படுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு அறுநூறு அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுவதாக செய்திகள் கசிய விடப்பட்டன. அது அரசியல் நோக்கம் உடைய செய்தியேயாகும். இரண்டு வாரத்தில் அநேக கைதிகள் விடப்படுவார்கள் என்றும் பரப்புரை செய்யப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவைத் தொடர்ந்தும் மலையகத்தில் கட்சி மாறிவரும் போக்கில் அதிகரிப்பு ஏற்பட்டதாலும் அரசியல் கைதிகளின் விடுபிப்பு கிடப்பில் போடப்பட்டுள்ளது என்றே காண வேண்டியுள்ளது.

எனவே நீண்ட வருடங்களாக விசாரணை இன்றி சிறைவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுவிப்பில் அரசியல் ஆதாயம் தேடும் குறுகிய நிலைப்பாட்டை விடுத்து நீதி நியாயத்தின் பேரால் விடுதலை அல்லது விசாரணை உடன் வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துக்கின்றோம். இத்தகைய அரசியல் கைதிகளில் புதிய ஜனநாயகக் கட்சியின் மூன்று தோழர்களான ஆர். ஜெயசீலன், எஸ்.சுகேசனன், நீ.பிரதீபன் ஆகியோர் உள்ளடங்குவர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

## யார் வந்தால் என்ன

1ம் பக்க தொடர்ச்சி

இரண்டு வேட்பாளர்களாய் மேற்கு நாடுகளில் போன்ற ஊழலற்ற, மோசடியற்ற நல்லாட்சி பற்றியும், அபிவிருத்திப் பற்றியும் பிரசாரம் செய்கின்றனர். தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை மறுப்பதிலும், அடக்கப்படும் தேசிய இனங்களின் அரசியல் தீர்வை மறுப்பதிலும் போட்டிப்போட்டுக் கொண்டு பிரசாரம் செய்கின்றனர்.

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி மற்றும் சரத்பொன்சேக்காவை ஆதரிக்கும் கட்சிகள் அனைத்தும் "மாற்றம்" தேவையென்றே கூறுகின்றனர். இதுவும் இரவல் கருத்தே. இருவரும் வாக்குறுதிகளை குவித்துள்ளனர். இவை பொருளாதார வாக்குறுதிகள். அவற்றை நிறைவேற்ற முடியாது என்று மக்களுக்குத் தெரியும்.

மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் மனித உரிமைகள் இயல்பு வாழ்க்கை என்பன இராணுவ மயமாக்கலினால் (கைது. கடத்தல், காணாமல் போதல்) பறிக்கப் பட்டன. ஊடக – கருத்துச் சுதந்திரம் அடக்கப்பட்ட நிலை தொடரும் சூழலில் பயப்பீதிக்குப் பழக்கப்பட்ட நிலையில் தான் இவ் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறு கிறது. இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்யக் கூடியதாக இருந்தும் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த அறிவிப்பதற்கு காரணம் வெளிநாட்டு சக்தி களின் ஆலோசனை அல்லது அழுத்தமாகும். இராணுவ சதி நடக்கலாம் என்று அவர் எச்சரிக்கப்பட்டு தேர்தலை நடத்தும் படி கேட்கப்பட்டதாகத் தெரிகிறது. இன்று தேர்தல் நடைபெறும் சூழ்நிலையே குழப்பமாகவே இருக்கிறது. அரிசி கூட கிடைக்காத சந்தர்ப்பத்தையே மக்களுக்கு வழங்கியிருக்கும் இந்த ஆட்சி முறையில் யார் வென்றால் தான் என்ன? தேர்தல் காலங்களில் கண்துடைப்பாக பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும் சூழலை ஆட்சியாளர்கள் ஏற்படுத்துவதுண்டு. ஆனால் தற்போது விலை கொடுத்து வாங்கவும் கடைகளில் அரசி இல்லை. அந்தளவிற்கு மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. வேலை பெறமுடியாத நிலை மட்டுமல்ல வேலை இழக்கும் நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. யுத்த அவலத்திலிருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. மஹிந்த ர்ாஜபக்ஷ 4 வருட ங்கள் ஆட்சி செய்துள்ளார். மஹிந்த சிந்தனை என்று அழைக்கப்படும் அவரது பழைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளில் 94 சதவீதம் உண்மைக்கு புறம்பானது என்பது தெரிந்ததே. சரத் பொன்சேக்காவும் வாக்குறுதிகளை அள்ளி இறைத்துள்ளார். அவை நடைமுறைப்படுத்த முடியாதவை என்பது தெரிந்ததே இருவரின் ஆதரவாளர்களும் இங்கு கூறப்பட்ட விடயங்களை மறுப்பதாக இல்லை. ஆனால் பொன்சேக்காவை ஆதரிப்போர் அரசியல் தலைமைத்துவ மாற்றம் வேண்டுமென்கின்றனர். ஒருவருக்கு பதிலாக இன்னொருவர் என்பது மாற்றமல்ல பதிலீடே ஆகும்.

மஹிந்தவை ஆதரிப்போர் அரசியல் ராணுவ மயமாக்கப்படக்கூடாது என்கின்றனர். ராணுவத்தைப் பூரணமாக ராணுவமயமாக்கியது ராஜபக்ஷவே. அவரின் விதைப்பே சரத் பொன்சேக்கா. ராஜபக்ஷ தாய் வித்தென்றால் சரத் பொன்சேக்கா சேய் வித்து.

ராஜபக்ஷ வெற்றிபெற்றால் அவரின் பாசிச ஆட்சி புதிய வடிவங்களில் தொடரும். போன்சேக்கா வென்றால் பாசிசத்தின் வீரியமான வித்தாகவே இருப்பார். ஆகவே இப்படியானவர்களிடையே தெரிவென்று இருக்கிறதா? அது தேவையா?

தேர்தல்கள் மக்களை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லாது. சமூகநீதியை நிலைநாட்ட முன்னேற்றகரமான வாழ்வை அமைக்க, மக்களின் அடிப்படை சமூக மாற்றத்திற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அவை பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்களாகவே இருக்க முடியும் அவற்றை மறித்து திசை திருப்பும் தேர்தல்களில் யார் வென்றாலும் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. இருவரில் யார் வென்றால் தான் என்ன?

5ம் பக்க தொடர்ச்சி

பிற்போக்காளர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எவ்வித தன்மானத் தயக்கமும் இன்றி கரம் கோர்த்து நிற்பது வர்க்க நிலைப்பாட்டின் காரணமாக வேயாகும். அது மட்டுமன்றி இந் நிலைப்பாடு பற்றி புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள் மத்தியில் தமிழ்த்தேசியம் தமிழீழம் எனப் புயல் கிளப்பிய சீமான்களும் சீமாட்டிகளும் என்ன கூறப்போகிறார்கள்.

ஆனால் ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது தமிழ்த்தேசிய இனத்தின் மத்தியில் ஏகப் பெரும்பான்மையாக இருந்து வரும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் உழைக்கும் மக்கள் சார்பாக எந்தவொரு தமிழ்த்தேசியவாதக் கட்சியோ குழுக்களோ இல்லை என்பதாகும். சிவாஜிலிங்கம் என்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த சுயே ட்சை வேட்பாளர் கூட மறைமுக நிகழ்ச்சி நிர லில் வாக்குகளை பிரிக்கும் உள்நோக்குடனே யே நிறுத்தப்பட்டுள்ளாரே தவிர ஒரு உறுதி யான முற்போக்கு தேசியவாத நிலைப் பாட்டில் அல்ல.

எனவே தமிழ்த்தேசிவாதப் பழைமைவாத சக்திகளும் அவர்களின் பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய இனத்தை பின் நோக்கி இழுத்துச் சென்று கடந்த நூற்றாண்டின் நடுக் கூற்றில் நிறுத்தவே முன்நிற்கிறார்கள். தமிழ் மக்கள் தான் இதற்கு உரிய விடையளிக்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் இளம் தலைமுறையினர் மாற்று அரசியல் பற்றி சிந்திக்க வேண்டும்.

## புதிய பூமி சந்தா சேருங்கள் – நிதி உதவி தாருங்கள்!

புதிய பூமி தொடர்ந்து வெளிவருவதற்கு வாசகர்கள் நண்பர்கள் ஆதரவாளர்களிடமிருந்து சந்தா மற்றும் நிதி உதவினை நாடி நிற்கிறது. மாற்று அரசியல் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் புதிய பூமியின் கருத்துக்களும் கண்ணோட்டமும் அவசியம் என்பதால் அதனைத் தொடர்ந்து வெளிவர ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறோம்.

சந்தா ஒரு வருடம் - 400 ரூபா, ஆறு மாதங்கள் - 200 ரூபா (தபாற் செலவு உட்பட)

**வெளிநாடுகள்**

ஐரோப்பா - 30 ஈரோ அமெரிக்க நாடுகள் - 40 டொலர் ஏனைய நாடுகள் - 25 டொலர் வங்கி மூலம் அனுப்புவோர் **K. Senthivel V.Mahendran Commercial Bank Grandpass Branch A/C No 1570018335 Colombo.** என்பதற்கு அனுப்பவும். தபால் நிலையம் மூலம் அனுப்புவோர் **K. Senthivel** என்ற பெயரில் **Grandpass** தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பவும். புதிய பூமியின் தொடர் வரவிற்கு தங்களின் மேலதிக நிதி உதவி பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம். நன்றி.

**The Manager Puthiya Poomi**
**47, 3rd floor. C. C.S. M Complex, Colombo- 11 Sri Lank.**

# நாளும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## பாவ மன்னிப்பு

சரத் பொன்சேகா செய்த சிறிய தவறுகளை எல்லாம் கணக்கில் எடுக்கக் கூடாதென்று மனோ கணேசன் முடிவு செய்து விட்டார். அச் செய்தி டெல்லி மிரரில் ''மனோ கணேசன் சரத் பொன்சேகாவை மன்னித்து விட்டார்.'' என்ற தலைப்புடன் வெளியானது. சரத் பொன்சேகாவால் மனோ கணேசனுக்கு என்ன கேடு நடந்தது? எனவே அவருக்கு மன்னிக்க ஒன்றுமில்லை. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவை மன்னிப்பார்களா என்ற கேள்விக்கு என்ன பதில்? யார் சார்பாக மனோ கணேசன் தனது முடிவுகளை எழுதுகிறார். யாரையைக் கேட்டு யூ.என்.பியுடன் கூட்டுச் சேருகிறார்?

தோட்டத தொழிலாளர்களின் கண்களில் மிளகாய் பொடியைத் தூவிய ஒருவருக்கு சரத் பொன்சேகாவை ஆதரிக்க காரணம் தேடுவது என்ன பெரிய காரியம்? தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டியோரின் பட்டியலில் மனோ கணேசனின் பெயரும் அல்லவா உள்ளது என்று அவருக்கு தெரிய வேண்டும்.

## அமெரிக்க ஆதரவின் அழகு

அமெரிக்கா கேட்டுக் கொண்டால் விடுதலைப் புலி ஆதரவுப் பிரமுகர் உருத்திரகுமாரன் பற்றிய தகவல்களை வழங்க ஆயத்தம் என்று இலங்கை அரசாங்கம் சொல்லுகிற அளவுக்கு இலங்கை அமெரிக்க உறவு மாறிவிட்டது. சில வாரங்கள் முன்பு தான் அமெரிக்கா இலங்கை அரசாங்கம் பிரமுகர்கள் பற்றி மனித உரிமைமீறல் தொடர்பான தகவல் தேடுவதாக நமக்குச் சொல்லப்பட்டது. இப்போது உறவில் புதிய பக்கம் ஒன்று திருப்பப் பட்டதாக ரொபேட் பிளேக் சொல்லிவிட்டார். அமெரிக்காவின் வாலைப் பிடித்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமைக்கக் கிளம்பிய உருத்திரகுமாரன் என்ன சொல்லுவார்? அவருடைய மேட்டுக்குடிக் கூட்டா ளிகள் என்ன சொல்லுவார்கள்? உருத்திரகுமாரனை அமெரிக்க அரசாங்கம் கைது செய்யாதவரை, வெற்றிவெற்றியென்று வீரமுழக்கம் இடுவார்கள் என்று நம்பலாம்.

## ட்ரொட்ஸ்கியச் சோடி

சமசமாஜக் கட்சியின் பாரம்பரியம், தமது சுயலாபம் கருதி இடதுசாரி ஐக்கியத்தை ஏற்படுத்தி, ஏற்படுத்திய வேகத்திலேயே சுயலாபத்திற்காக அதைக் குழப்புவதுமாக இருந்து வந்துள்ளது. சமசமாஜக் கட்சிக் குடும்பத்தில் ஏற்பட்ட எண்ணற்ற பிளவுகளில் தனிநபர்வாதத்தின் பங்கு மிக முக்கியமானது.

எப்போதெல்லாம் இடதுசாரி அல்லது முற்போக்கு ஐக்கியம் தேவையோ அப்போதெல்லாம் எந்தவிதமான ஒற்றுமைக்கும் வாய்ப்பில்லாமல் குழப்பி அடிப்பதில் தமது ஆசான்களையே மிஞ்சியவர்களாக விக்கிரமபாகுவும் சிறிதுங்கவும் தம்மை அடையாளம் காட்டியுள்ளார்கள். இதுவரை ஏற்படுத்திய ஒவ்வொரு கூட்டணியையும் தங்களது தன்முனைப்பிற்குத் தீனியாக்கச் சிறிதும் தயங்காத இருவரும் இம் முறை பரந்துபட்ட ஒரு கூட்டணியொன்று தேவையான தருணத்தில் அதற்கு வாய்ப்பு இல்லாமலே செய்கிற விதமாகத் தம்மை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துக் கொண்டுள்ளனர்.

தாங்களும் உருப்படமாட்டோம் பிறரையும் உருப்பட விடமாட்டோம் என்பதில் தான் இவர்கள் உறுதியாக உள்ளர்கள். பிலிப்புக்கும் என்.எம்.முக்கும் கொல்வினுக்கும் எற்ற வாரிசுகள் தான்!

## பொதுவான கொள்கை

தமிழர் கூட்டணிகள் எப்படியானவையாக இருந்தாலும் பிடுங்குப்பாடுகள் மட்டும் அதன் ஒரு முக்கியமான அம்சமாயிருக்கும். ஆளுக்கு ஒரு பக்கம் இழுபடுவதற்குக் கொள்கை அடிப்படையிலான வேறுபாடுகள் என்றுமே இருந்ததில்லை. ஆனால் சுயலாபமும் அந்நிய எசமானர்களது ஏவுதலும் சுரண்டும் வர்க்க நலனுமே அவர்களை வழிநடத்தி வந்துள்ளது. ஒரு பொது வேட்பாளர் பற்றி முடிவுக்கு வர இயலாமல் தடுமாறுவதற்கும் தமிழர் தேசிய முன்னணியின் உடைவுக்கே வழி செய்யுமளவுக்கு ஜனாதிபதி தேர்தல் பற்றிய கருத்து முரண்பாடுகளும் இருக்குமானால் இவர்கட்கு பொதுவாக இருந்து வந்தது என்ன? புலிகள் பற்றிய பயம் மட்டும் தானே!

## வசதியான உண்மைகள்

சரணடைந்த விடுதலை புலித் தலைவர்களைக் கொல்லுமாறு ஆணையிட்டவர் கோத்தபாய என்று கோள் சொல்லுகிற சரத் பொன்சேகா அதை ஏன் இப்போது சொல்ல வேண்டும்? தேர்தலில் நிற்காவிட்டால் எப்போதாவது சொல்லத்தான் முன் வந்திருப்பாரா?

## இரகசியத் திட்டங்கள்

திட்டமிட்டுள்ள அதிகாரப் பகிர்வு பற்றிய ஒரு ஆவணத்தை மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ளதாக தமிழருக்கு சொல்லப்படுகிறது. ராஜபச்ஷ ஏன் அதை இந்த நாட்டு மக்களிடம் சமர்ப்பிக்க மாட்டார்?

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சியின் நிலைப்பாடு

## வாக்குச் சீட்டை செல்லுபடியற்றதாக்க வேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் மக்கள் வாக்களிக்காது வாக்குச் சீட்டைச் செல்லுபடியபற்றதாக்க வேண்டும். அதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வாதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான வெகுஜன எதிர்ப் பியக்கத்தை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் முப்பத்தொரு வருடமாக இருந்துவரும் தனிநபர் சர்வாதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான தமது வெறுப்புணர்வையும் எதிர்ப்பையும் மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தைப் புதிய ஜனநாயகக் கட்சியின் மத்திய குழு ஏகமனதாக நிறைவேற்றியது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடு பற்றிய விவாதங்களுக்கு பின்பே மேற்படி தீர்மானத்தை கட்சி மத்திய குழு ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டது. இத்தீர்மானம் பற்றி கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்ப தாவது,

கடந்த 31 வருட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் இந் நாடும் மக்களும் பல்வேறு நிலைகளில் துன்ப துயரங்களையும் அநீதிகளையும் அழிவு களையும் அனுபவித்து வந்துள்ளனர். மூன்று தசாப்த கால பேரினவாத முதலாளித்துவ யுத்தத்திற்கும் அதன் காரண மான தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட போராட் டங்களுக்கும் காரணமாக அமைந்தவற்றில் இவ் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது முதலிடம் வகித்து வந்துள்ளது. யுத்தத்தை ஆரம்பித்து வைத்தவர் மறைந்தவர் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிப தியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனர். 30 வருடங்களுக்கு பின்பு தமிழ் மக்களின் இரத்த வெள்ளத்தில் யுத்தத்தை முடித்து வெற்றி விழா கொண்டாடி நிற்பவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. அவர் தரும் யுத்த ஆணை களை யுத்த களத்தில் நடைமுறைப்படுத்தியவர் இராணுவ ஜெனரலான சரத் பொன்சேகா. ஜனாதிபதி ராஜபக்ஷவும் ஜெனரல் பொன்சேகாவும் இணைந்தே இறுதி யுத்தத்தை முன்னெடுத்தனர். இவர்கள் இருவரும் இன்று ஒருவரையொருவர் எதிர்த்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டாலும் இருவருமே இந்நாட்டின் உழைக்கும் மக்களினதும் தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ் மக்களி னதும் பொது எதிரிகளாகவே உள்ளனர். இருவருமே தேசிய இனப்பிரச்சினைக்கு மனப்பூர்வமான தீர்வை வழங் கத் தயார் இல்லாத பேரினவாத முதலாளித்துவ நிலை ப்பாடு கொண்டவர்களாகவே உள்ளனர். இவர்களில் ஒருவர் நல்லவர் எனத் தேர்ந் தெடுத்து மக்கள் வாக்களிப் பது அரசியல் விவேக மற்ற செயல்மட்டுமன்றி தமது தலை களுக்குத் தாமே மீண்டும் மண் அள்ளிப் போடுவதாகவே அமையும். இரண்டு பேரினவா தக் கட்சிகளின் சார்பாக நிற் கும் இவ்விரு பிரதான வேட்பா ளர்களுக்கும் அடக்கப்பட்டு வரும் தமிழ் முஸ்லிம் மலை யக மக்கள் எவ்வாறு வாக்க ளிக்க முடியும் என்ற கேள்வியையே எமது புதிய



### பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் அறிக்கை

ஜனநா யகக் கட்சி கேட்கின்றது. அதற்கு அப்பாலான கட்சிகளுக்கு வாக்களிப்பது அர்த்தமற்றதொன்று என்ப துடன் நிறை வேற்று ஜனாதிபதி முறைமைக்கு எதிரான மக்களின் எதிர்ப்பை திசைதிருப்ப மறைமுகமாக பிரதான வேட்பா ளர்களுக்கு உதவுவதாகவும் அமையக் கூடிய தாகும். மேலும் அவ்வறிக்கையில் இவ் ஜனாதிபதித் தேர்த லில் பிரதான இரண்டு பேரினவாதக் கட்சி வேட்பாளர்களு க்கும் எதிராகத் தமிழ் முஸ்லிம் மலையகக் கட்சிகளும் இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து தனி யொரு வேட்பாளரை நிறுத்தி 50 வீதத்தை பெறமுடியாதா நிலைமை ஏற்படுத்தியிருந் தால் இன்றைய ஜனாதிபதி முறைமைக்கு ஒரு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி அதில் மாற்றம் கொண்டுவர நிர்ப்பந்தித்தி ருக்க முடியும். மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வையும் தமது வெகுஜன பலத்தையும் கட்டியெழுப்பியிருக்க முடிந்திரு க்கும். இதனையே எமது கட்சி முன்வை த்தது. ஆனால் அதனைக் கவனத்தில் கொள்ளாது பிரதான வேட்பாளர்களில் ஒருவரை தேர்ந்தெடுக்க முன்னிற்கும் சிறுபா ன்மைக் கட்சிகள் தத்தமது பதவிகளுக்கும் எதிர்கால சுயநல அரசியலுக்குமாக மக் களுக்கு மிகப் பெரும் துரோகத்தையே செய்து நிற்கிறார்கள். இது கடந்தகாலங்க ளின் தொடர்ச்சியேயாகும். 30 வருட யுத்தத்தில் சுமார் இரண்டரை லட்சத்திற்கு மேலான தமிழ் மக்கள் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரம் கோடி சொத்துக்கள் அழிவு ற்றுள்ளன. பல இலட்சம் மக்கள் இடம்பெ யர்ந்து அகதிகளாகினர். யுத்த இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பேரழிவுகளதும் அவலங்களினதும் துயர நிலைகள் இன்னும் மாறவில்லை. இந் நிலை யில் இக் கொடிய யுத்தத்திற்கும் மக்களது அன்றாட வாழ்வுப் பிரச்சினைகளுக்கும் கார ணமாக அமைந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கும் அழிவுகளை ஏற்ப டுத்திய இரு பிரதான வேட்பாளர்களுக்கும் மக்கள் எந்தக் கையால் வாக்களிக்க முடி யும். இராணுவ வெற்றியைக் காட்டி வாக் குகள் பெற நிற்கும் சிங்கள மக்களில் சுமார் ஒன்றரை இலட்சம் பேரை ஏற்கனவே பலியெடுத்து இரத்த வெள்ளத்தில் மூழ்கடி த்த ஆட்சிமுறையும் இதே சர்வாதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே யாகும். எனவே இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமையையும் அதன் கொடூரமான அதி காரங்களையும் பதவிக்கு வரும் எவரும் வெறும் தேர்தல் வாக்குறுதிக்காக மனமுவ ந்து கைவிட்டு மக்களுக்கு ஜனநாயகத்தை கொண்டு வருவார்கள் என்பது வெறும் பகற் கனவேயாகும். எனவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் அம் முறைமைக்கு எதிரான தமது வெறுப்பையும் எதிர்ப்பையும் மக்கள் காட்டுவதற்கு வாக்குச் சீட்டை செல்லுபடியற்றதாக்கிக் கொள்வதே உரிய வழிமுறையாகும். அதன் மூலம் மக்கள் தமது பலத்தையும் வெகுஜனப் போராட்டத் திசையையும் வெளிக்காட்டக் கூடிய சந்தர்ப்பமாகும் என்பதே எமது கட்சியின் வேண்டுகோளாகும்.

18-12-2009

## ஆணைக்குழுக்களும் ஆணைச் செலவுகளும்

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் மக்கள் மத்தியிலும், நாடாளுமன்றத்திலும் பேசப்படுகின்ற போதெல் லாம் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2005க்குப் பின் எட்டு ஆணைக்குழுக்களை ஏற்படுத்தியதன் மூலம் இதற்காக சுமார் 6 கோடி 31 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட் டுள்ளது. இதுவரை விசாரணை முடிந்தபின் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா அல்லது அறிக்கையில் வெளியான தகவல்கள் தான் என்ன என்பது பலருக்குத் தெரியாது.

<u>முதலாவது ஆணைக்குழு</u>
உயர் பெறுமதி மிக்க ஆயுதக் கொள்வனவு சம்பந்தப்பட்டது. 2008 டிசம்பர் 8ம் திகதி வரையான செலவு 1 கோடி 31 இலட்சம்.

<u>இரண்டாவது ஆணைக்குழு</u>
கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவு சம்பந்தப்பட்டது. இறுதி அறிக்கை சமர்ப்பிக் கப்பட்ட நிலையில் அதற்கான செலவு 1 கோடி 17 இலட்சம்.

<u>மூன்றாவது ஆணைக்குழு</u>
கிறிஸ்மஸ் தினத்தன்று 2006இல் கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் கொலை தொடர்பானது. இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. செலவு 21 இலட்சம் 26 ஆயிரம்.

<u>நான்காவது ஆணைக்குழு</u>
காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் ஜனவரி 2006 தொடக்கம் 2006 செம்ரெம்பர் வரைக் காலப்பகுதி. இதன் இறுதி அறிக்கையும் சமர்ப்பிக் கப்பட்டது. அதற்கான செலவு 4 இலட்சம் 33 ஆயிரம்.

<u>ஐந்தாவது ஆணைக்குழு</u>
அரச, பாதுகாப்புப் படை யினரின் மனித உரிமை மீறல் பற்றியது. இவ்விசாரணை முடிவுறவில்லை. இதுவரை செலவு 66 இலட்சம் 41 ஆயிரம்.

<u>ஆறாவது ஆணைக்குழு</u>
கடத்தல், காணாமற் போதல், அடையாளங் காணப்படாத உடல்கள், நாடுதழுவிய கொலைகள், விசாரணை, முடிவடைந்துள்ளது. 2008 டிசம்பர் 8ம் திகதி வரை செலவு 62 இலட்சத்து 13 ஆயிரம்.

<u>ஏழாவது ஆணைக்குழு</u>
செயலிழந்த நிதிக் கம்பனிகள் தொடர்பாகவும் அவற்றிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தொகையும் அவற்றின் இயக்குனர் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கையும் சம்பந்தப்பட்டது. இதுவரை ஏற்பட்ட செலவு ஒரு கோடி 60 இலட்சத்து 60 ஆயிரம். விசாரணை தொடர் வதாக பாராளுமன்றத்தில் கூறப்பட்டது.

<u>எட்டாவது ஆணைக்குழு</u>
வற் வரி ஊழல் மோசடி தொடர்பானது. இந்த மோசடியான தென்னாசியாவிலேயே இடம்பெற்ற அதி பெரிய மோசடி. விசாரணை தொடர்கிறது. செலவு இதுவரை 73 இலட்சத்து 81 ஆயிரம்.

## சான்றோர் கூற்று

பெரிய நீதவான் சொன்னார், பிறகு
பெரிய பாதிரியார் சொன்னார், பிறகு
பேராசிரியரும் அல்லவா சொல்லுகிறார்,
''பழைய பிழையைச் செய்யாதீர், புறக்கணித்து
உங்கள் வாக்குக்களை வீணாக்காதீர்'' என்று

பழைய பிழை எது?
வஞ்சகர் என்று தெரிந்தும் வாக்களித்ததா?
தெரிந்தால் எவருக்கும் அளிக்காமல் விட்டதா?

குறுக்குக் கேள்வி கேட்காதீர்
பேராசிரியரும் பெரிய பாதிரியும் நீதவானும்
தெரியாமலா சொல்கிறார்கள். தகைமைசால்
பேரறிஞர்மாரெல்லாம் 'பேசாப் பொருளைப்
பேசவுந் துணிவதற்கு'
நீங்கள் யார்?
படிப்புண்டா? பட்டமுண்டா?
பதவியெதுந் தானுண்டா? - இல்லை
பத்திரிகை எசமானர் ஆசிகளேன் உமக்குண்டா?
போடென்று சொல்லுகிற பெரியோர்கள் எல்லோரும்
யாருக்குப் போடென்றோ
எதை நம்பிப் போடென்றோ
ஏன் சொல்ல மாட்டார்கள்?

இருட்டு அறைகளுக்குள் இரகசியமாய் முடிவெடுத்து
அஞ்சுங் கெட்டு அறிவுந்தான் கெட்டொழிந்தோர்
ஆலோசனையெல்லாம் அம்பலத்தில் சொல்லி வைத்து
ஊர் சிரிக்கத் தங்களது
பேர்கெட்டுப் போவதற்குப்
பெரியோர் விரும்புவரோ?
பெரிய நீதவான் சொன்னார்,
பெரிய பாதிரியார் சொன்னார்,
பேராசிரியருஞ் சொன்னார். போதாதா?
எனவே,
குறுக்குக் கேள்விகளை உரக்கவே கேட்காதீர்
பதில் கிடைக்கப் போவதில்லை
உரிய பதிலை நீங்களே உணருங்கள்.

- பரதேசிப் பாவாணர் -

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# "சே நிதியம் (Che Foundation)"

அண்மையில் நண்பர்கள் இருவரைச் சந்திக்க ஒரு பாடசாலைக்கு சென்றிருந்தேன். அது கொத்மலை வலயத்திற்குட்பட்ட குயின்ஸ்பரி (Queensberry) வித்தியாலயம் ஆகும். மலையகத்தின் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுள் ஒன்று. அங்கு சில மாணவர்களைச் சந்திக்கக் கிடைத்தது. அச்சந்திப்பு எனக்கு நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அளித்த சந்திப்பாகும். எனக்கு மட்டுமல்ல இந்த சமூகத்திற்குக் கூட நம்பிக்கையூட்டக்கூடிய செயற்பாடுகளை பாடசாலை மாணவர்கள் சிலர் முன்னெடுக்கின்றனர்.

குயின்ஸ்பரி பாடசாலையின் தரம் ஒன்பதில் கல்விகற்கும் மாணவர்கள் ''சே நிதியம்'' என்ற ஒரு அமைப்பைத் தொடங்கி செயற்படுகிறார்கள். அமைப்பின் தலைவர் ரிசான், செயலாளர் ஜாரூஸ் மெக்லின், பொருளாளர் பிரசாந்தன் ஆகியோர் ஆவர்.

இவர்களது நோக்கம் கற்றலில் பொருளாதார ரீதியாக சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு ஏதேனும் உதவி புரிந்து கற்றலை தொடரச் செய்வதாகும்.

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் கட்டாயம் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளச் சொல்லி கல்வித் திணைக்களம் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியதாக அறியக் கிடைத்தது. குயின்ஸ்பரி வித்தியாலயத்தில் மேற்படி சுற்று நிருபத்தை செயற்படுத்த சே நிதியத்தின் உறுப்பினர் மாணவர்களே பொறுப்பெடுத்துக் கொண்டனர்.

இடைவிலகிய மாணவர்களை தேடிச் சென்று அடையாளங்கண்டு அவர்களுடன் கதைத்து மீண்டும் பாடசாலையில் இணைத்துள்ளனர். பொருளாதார ரீதியான அவர்களது தேவைகளை இந்த சிறுவர்களே பொறுப் பெடுத்து அவர்களது தேவையைப் பூர்த்திசெய்தனர். இடை விலகிய மாணவர்கள் சிலர் தற்போது கல்வியைத் தொடர்கின்றனர். இந்த மாணவர்களின் எதிர்கால நோக்கம் தமது தோட்டத்தில் நூலகம் ஒன்றை ஆரம்பிப்பதாகும். இந்த மாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது அந்த அமைப்பின் தலைவரிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டது. கேள்வி யாதெனில், ''இவ்வாறான சமூக அக்கறைமிக்க விடயங்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்கள் போன பிறகு எப்படி இந்த செயற்பாட்டை தொடர்வீர்கள்? அத்துடன் பாடசாலையில் இந்த விடயத்திற்கு ஏதேனும் எதிர்ப்பு அல்லது தடங்கல் ஏடப்பட்டால் என்ன செய்வீர்கள்?

இதற்கு பதிலளித்த இதன் தலைவர் ரிசான் தெரிவித்தது யாதெனில் ''இந்த அமைப்பு ரீதியான செயற்பாட்டை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம். அத்துடன் இவ்விரு ஆசிரியர்களும் எமக்கு தொடர்ந்து ஆலோசனைகளும் உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளனர். எமது செயற்பாடுகளுக்கு ஏற்படும் எவ்விதமான எதிர்ப்பு, தடங்களுக்கு முகம் கொடுக்க நாம் தயாராக உள்ளோம். ஏந்த நல்ல காரியத்திற்கும் முதலில் எதிர்ப்பும் தடங்கலுமே ஏற்படும் அதை எமது தைரியம் நம்பிக்கை மிக்க செயற்பாடுகளால் முறியடிப்போம்'' என்றார்.

நான் இவ்விடயத்தை சில காரணங்களை கருத்திற்கொண்டே கலந்துரையாடுகின்றேன். ஏனெனில் சமூகசேவை பற்றி அடிக்கடி எமக்கு வகுப்பெடுக்கும் கனவான்களது கவனத்திற்கு இதைக் கொண்டு செல்வது நலம் N.G.O களில் இருப்பவர்கள் கூறுவது சமூக சேவை அல்லது நலன்புரி விடயங்கள் புரிவதற்கு பெருமளவு பணம் தேவை என்பதாகும். அத்துடன் சேவைகளுக்கு கொடுப்பனவு தேவை என்கின்றனர். இன்னும் சிலர் அதிகாரம் இருந்தால்தான் எதையும் செய்யலாம் என்கின்றனர்.

ஆயினும் இந்த மாதிரி சின்னச் சின்ன விடயங்களுக்கு பெரிதளவு பணமோ, அதிகாரமோ தேவையில்லை. சமூக அக்கறை இருந்தால் போதும். இந்த மாணவர்கள் எந்த இலாபத்துடனோ அல்லது பெருமளவு பணத்துடனோ இதை ஆரம்பிக்கவில்லை. கூட்டுப் பங்களிப்பு மீதான நம்பிக்கையில்தான் இதை ஆரம்பித்தனர். சிலர் அதிகாரம் இருந்தால்தான் சமூகத்திற்கு ஏதேனும் செய்ய முடியும் என்கின்றனர். அதிகாரிகள் என்போர் செய்யும் விளையாட்டுக்களைத்தான் நன்கு அறிவோமே. இந்த நிதியத்தைத் தொடங்க இவர்களிடம் இருந்தது சமூகப்பற்று, கூட்டு முயற்சி, தன்னம்பிக்கை மட்டும்தான்.

இப்போது தான் பயணத்தை தொடங்கும் இந்த சிறுவர்களுக்கு உற்சாகமும் உதவியும் வழங்குவது சமூகப்பற்றமிக்க அனைவரதும் கடமையாகும். பதினைந்து பேரும் தாமே அமைப்பை உருவாக்கி சக மாணவர்களுக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என நினைப்பது பண்பாட்டு ரீதியான சிறந்த மாற்றமொன்றுக்கான ஆரம்பமாக இருக்கட்டும்.

# என்ன செய்கிறார்கள் மலையக தலைவர்கள்

மஸ்கெலியா நகருக்கு அண்மையில் அமைந்திருக்கும் ஆடை தொழிற்சாலையாக இயங்கிய இடம் நஷ்டம் ஏற்பட்டது என்ற போர்வையில் மூடப்பட்டது. இது நடந்து பல ஆண்டுகள் கழியும் நிலமையில் இவ்விடத்தில் எவ்வேலையும் இடம் பெறாது வெறுமனே கிடந்தது. ஆனால் தற்போது அது இராணுவ அரனாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இது வேதனைக்குறிய விடயமாகும். ஏனென்றால் தமிழ், சிங்களவர், முஸ்லிம் அனைவரும் ஒற்றுமையாக இயங்கும் இவ்விடத்தில் எதற்காக இந்த காவல் அரன்? இவ்விடத்தில் தொழிற்பயிற்சி நிலையத்தையோ அல்லது தொழில் பேட்டையையோ ஏன் ஏற்படுத்த முடியாதா? இதற்கும் மக்கள் நாங்கள் மட்டுமா போராட வேண்டும்.

மலையகம் எங்கள் அரசியல் கோட்டை என மார்தட்டும் அரசியல் வாதிகள் என்ன செய்கிறார்கள்? இவ்விடத்தில் இருந்து சொற்ப தொலைவில் உள்ள புரவுன்லோ தோட்டத்தில் கூட சாரய தவறணை போடக்கூடாது என்று இளைஞர்கள் போராடியதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த சாராய தவறனையை போடுவதற்கு கூட மலையக முதன்நிலை! அனுமதியை வழங்கியமையும் அனைவரும் அறிந்த விடயம். அதனையும் நாங்கள் போராடி வெற்றி கொண்டோம். ஒன்று மலையக தலைமைகள் செயலாற்ற வேண்டும். அல்லது இளைஞர் எங்களுக்காவது அந்த உரிமையைக் கொடுங்கள்.

என்றும் மலையன்

# யாருக்காக இது யாருக்காக?

அரசாங்கக் கட்சிப் பக்கம் இருந்தும் எதிர்க் கட்சிப் பக்கமிருந்தும் மாறி மாறிப் பாய்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் மலையகக் கனவான்களும் அடங்குவர். நேற்கு வரை அமைச்சர்களாக இருந்த செல்லச்சாமியும் சச்சிதானந்தனும் ஐக்கிய தேசியக் கட்சிப் பக்கம் பாய்ந்து விட்டனர். கூடவே யோகராஜனும் நடையைக் கட்டி விட்டார். ஏற்கனவே சதாசிவம் தனது ஜனாதிபதி ஆலோசகர் பதவியை விட்டெறிந்து யூ.என்.பி ஆகி விட்டார் இப்போது ம.ம.முன்னணியின் ஒரு பகுதி பாய எத்தனித்து வருகிறது. இவர்கள் யாருக்காக என்ன கோரிக்கைக்காக பக்கம் மாறி பதவிகள் துறந்து பாய்ந்து கொள்கின்றனர். மலையக மக்களுக்காகவென எந்த மாங்காய் மடையனும் நம்புவானா? யாவும் தமக்காகவே தான் என்பதைச் சொல்லித் தான் விளங்கவேண்டுமா என்ன?

# ஒரு மலையக மாணவனின் டயறி

எஸ். உதயசூரியன்

1.12.2009 - 6.12.2009 டெங்கு காய்ச்சல் நோய் அதிகம் பரவுவது காரணமாக மத்திய மாகாண பாடசாலைகள் மூடப்பட்டன. கடைசி வகுப்பின் போது எனது நண்பன், ரவி எங்களுக்கு வரலாறு கற்பிக்கும் ஆசிரியர் செல்வகுமாரிடம் ஒரு கேள்வி கேட்டான். சேர் கியூபா நாட்டில் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தி விட்டார்களாமே. அதே முறைகளைப் பயன்படுத்தி இங்கும் காய்ச்சலை பரவவிடாமல் தடுக்கலாம் தானே என்றான். அப்போது சேருக்கு சரியான கோபம் வந்துவிட்டது. நீங்கள் எல்லாம் அரசியல் பேசுகிறீர்கள். பாடசாலையில் அரசியல் பேசக் கூடாது. தேவையில்லாத கதையெல்லாம் கதைக்கக் கூடாது என்றும் உங்களை எல்லாம் மோகன் சேர் தான் கெடுக்கின்றார் என்று உரத்து கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டார்.

எங்களுக்கு பின்னே அமர்ந்திருந்த கிருபா அரசியல் பேசக்கூடாதா? நம்ம சேர் மலையகத்திலுள்ள இரண்டு கட்சிக்கும் பாய்ஞ்சி பாய்ஞ்சி போய் விழுந்து இப்போது கொழும்பு பச்சைக் கட்சியில சேர்ந்திருக்காரு என்று கூற எல்லோரும் சிரித்தார்கள். செல்வகுமார் சேர் பிரின்சிபல் சேரிடம் சொல்ல எல்லோரையும் அதிபர் அறைக்கு அழைத்து நல்ல பேச்சுக் கொடுத்தார்.

ஜீவா, அதிபர் அறையிலிருந்த மலையக அரசியல்வாதியின் படத்தைப் பார்த்து ஏதோ சொல்லப்போய் அதிபரிடம் அடிவாங்கினான். அம்மாவிடம் டியூசன் படிக்கப் போவதாக பொய் சொல்லி விட்டு, நானும் ரவி, ஜீவா மூன்று பேரும் தியேட்டரில் பேராண்மை படம் பார்த்தோம். ஜீவா வழமை போலவே மாற்றுக் கருத்து சொல்லப்போய்ப் பெரும் வாய்ச்சண்டையாகப் போய்விட்டது. ஒரு தனி மனிதனும், ஐந்தாறு பெண்களும் சேர்ந்து சர்வதேச சதியை முறித்துவிட முடியுமா? இந்திய மக்கள் எல்லாம் எங்கே போனார்கள் என்று கேட்க அது நீண்டு கொண்டு போய் வடக்கு யுத்தம் பற்றியெல்லாம் பேசி பிரச்சினையாகி விட்டது. ரவி கோபித்துக் கொண்டு போய் விட்டான்.

07.12.2009 ஓ.எல். பரீட்சை ஆரம்பமாக இருப்பதால் ஓ.எல். மாணவர்களை மட்டும் வரச்சொல்லி வகுப்பு வைத்தார்கள். இந்த மாதிரி வகுப்புகளை முன்னரே வைத்திருக்கலாம் தானே என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள். கல்வி அதிகாரிகள் மற்றும் பலரும் வந்து இவ்வாறு வகுப்பு வைக்கக் கூடாது என்று கூறி எல்லோரையும் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். ஓ.எல். பரீட்சை ஆரம்பமாகியது.

14.12.2009 ஓ.எல். பரீட்சை நடைபெற்றது ஓரளவு முயற்சி செய்து பரீட்சை எழுதினோம்.

20.12.2009 6ம் வகுப்பு முதல் தொடர்ந்து முறையாக படிப்பித்திருந்தால் பரீட்சை லேசாக இருந்திருக்கும். சரஸ்வதி என்ற எங்கள் வகுப்பு மாணவி கணித பாடத்தின் போது மயங்கி விழுந்து விட்டார். ஆங்கில பாடம் அனேகமாக அனைவரும் பெயில் விடுவோம். ஒரே ஒரு நாள் மட்டும் எழுதப்பட்டிருந்த ஆங்கில கொப்பியை ராகுல் கிழித்து வீசினான்.

21.12.2009 பரீட்சை முடிந்து வீட்டில் இருந்தேன். சனிக்கிழமை தலதாவிலிருந்து மாமா வந்திருந்தார். அங்கு ஒரு புதிய ஆசிரியர் தரம் 13ல் படிக்கும் அக்காவை திருமணம் முடித்து பின்னர் ஏதோ காரணத்தால் கடுமையாக அடித்துக் காயப் படுத்தியதாகவும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வாசிரியர் அதிகமான பெனடோல் வில்லைகளைக் குடித்துவிட்டு மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். சட்ட ரீதியாக நடவடிக்கை எதுவும் பெரிதாக எடுக்கப்படவில்லை எனவும் கூறினார். பக்கத்துவீட்டு அக்காவும் ஏ.எல். தான் படிக்கின்றார். அவரை நினைக்கக் கவலையாக இருக்கின்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 17 டிசம்பர் ஜனவரி 2009-10 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 128

இல. 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@gmail.com, web : www.ndpsl.org

## ஜீ.எஸ்.பி. சலுகை இடைநிறுத்தம் ஒரு பொருளாதார யுத்தம்

**ஆடைகளை** தைத்து திருப்பி அனுப்பும் வர்த்தகத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஏற்றுமதி வர்த்தக வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் இடைநிறுத்தியுள்ளது. இதனால் இலங்கைக்கு வருடாந்தம் கிடைத்து வந்த 150 மில்லியன் அமெரிக்கா டொலர் வருமானம் இழக்கப்படவுள்ளது. ஆடைத்தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் தொழிலாளர்களில் 3 லட்சத்திற்கு மேற்பட்டோர் வேலையை இழக்க நேரிடும்.

இது குறித்து கருத்து தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கையின் வதிவிடப்பிரதிநிதியான பேர்னாட் சவேய்ஜ இலங்கைக்கு ஜி. எஸ். பி. சலுகையை இரத்துச் செய்யும் தீர்மானம் இன்னும் இரண்டு மாதங்களில் பூரணமாகும். என்றும் ஆறு மாதங்களில் நடைமுறைக்கு வருமென்றும் கூறியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிபுணர்களோ அரசாங்கம் அமெரிக்க உட்பட செல்வந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி இலங்கையை பாதிக்காது என்று கூறிவருவது போன்று ஜி.எஸ்.பி. சலுகை நிறுத்தப்பட்டாலும் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாதென்று மனக்கணக்கிட்டு கூறிவருகின்றனர். ஆனால் ஏற்கனவே பல ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கானோர் வேலை இழந்துள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதன் காரணமாக ஜி. எஸ். பி சலுகை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் நிலைவரத்தில் முன்னேற்றம் காணப்பட்டாலன்றி இந்தச் சலுகை இடைநிறுத்தம் தொடர்ந்து அமுலில் இருக்குமென்றும் அது முற்றாக தடையாக மாறலாமென்றும் ஐரோப்பிய ஒன்றியம் மேலும் கூறியுள்ளது.

1950களிலிருந்து சிறுக சிறுக கட்டுபட்டு ஓரளவிலாவது இருந்து வந்த இலங்கையின் சுயபொருளாதாரம் 1978 இற்கு பின்னர் ஏற்பட்ட இலங்கையின் திறந்த பொருளாதார கொள்கையாலும் சர்வதேச நிலைகளினாலும் அழிவுற்றது. இன்று இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள், சலுகைகள் தேவையில்லை என்று எவ்வித மாற்று பொருளாதாரத் திட்டங்களுமின்றி வீம்பு பேசுவது சரியான அணுகுமுறையாக இராது. அதேவேளை இலங்கையின் ஆளும் வர்க்கம் எவ்வளவுதான் வீம்பு பேசினாலும் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் போன்ற ஏகாதிபத்திய சக்திகளினதும் தென்னாசிய பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்புவாத சக்திகளினதும் நவகாலனித்துவப் பிடிக்குள் மாட்டுபட்டிருப்பதிலிருந்து விடுதலையாவதற்கு தகுதியற்றதாகும்.

இதைவிட இந்தத் தடையால் பாதிக்கப்படுகின்ற இலங்கை மக்களிடம் இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் கருத்தானது. வன்னியில் இலங்கை இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டினால் தோல்வியடைந்ததால் அதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே ஜீ. எஸ். பி சலுகையை இரத்து செய்யப்படுகிறது என்பதாகும். ஆனால் வன்னி இராணுவ நடவடிக்கைகளிற்கு முன்பிருந்தே ஜீ. எஸ். பி சலுகை தொடர்ந்து வழங்குவதாக இல்லையா என்பது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் கருத்து தெரிவித்து வந்தது என்பது குறிப்பிடதக்கது.

தமிழ்மக்கள் மத்தியில் இருக்கும் கருத்தானது தமிழ்மக்கள் மீது இலங்கை அரசாங்கம் புரிந்து வந்த கொடுமைகளுக்கு எதிராகவே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கி வந்த ஜீ.எஸ்.பி. சலுகையை இரத்து செய்கிறது என்பதாகும். ஆனால் தமிழ்மக்களுக்கு உதவுவதன்றி தமிழ்மக்களின் பிரச்சனையை வைத்துக்கொண்டு இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றியம் அதன் நவகாலனித்துவ நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதையே நோக்கமாக கொண்டுள்ளது என்பதே உண்மை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முடிவு பற்றி ஒரே நாட்டில் வாழும் இரண்டு மக்கள் பிரிவினரிடையேயும் இரண்டு வித்தியாசமான கருத்துக்கள் இருப்பது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வாய்ப்பான சூழலாகும். இலங்கையின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் வெளிநாட்டு மேலாதிக்க சக்திகளின் தலையீடு இருப்பதை இதன் மூலம் அவதானிக்க முடியும்.

இன்னும் இரண்டு வருடங்களுக்கு பின்னர் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தல் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இவ்வேளையில் தான் ஜீ. எஸ். பி. சலுகை இடைநிறுத்தத் தீர்மானம் வெளியாகியுள்ளது. அத்துடன் வன்னி இராணுவ நடவடிக்கைகளின் இறுதி நாட்களில் சரணடைந்ததாக கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவர்களை சுடும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ கொமான்டர் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிற்கு கட்டளை இட்டிருந்ததாகவும், அதுபற்றி தனக்கு எதுவும் தெரியதென்று எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறாக கூறவில்லையென்று பின்னர் அவர் மறுத்திருந்த போதும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு அதுபற்றி விசாரணை செய்யப் போவதாக அறிவித்துள்ளது. இவை ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கும் போது அறிவிக்கப்பட்டிருப்பதானது மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கும் நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். அதாவது சரத் பொன்சேக்கா மேற்கு ஆதிக்க சக்திகளின் வேட்பாளராகவே நிறுத்தப்பட்டிருக்கலாம்.

மஹிந்த வெற்றிபெற்றாலும், பொன்சேக்கா வெற்றிப்பெற்றாலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நெருக்கடிகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இலங்கையை முற்றாகத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடைகளை கூட விதிக்கலாம். அவ்வாறான நிலைமையில் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் ஆதிக்கம் மேலும் தீவிரமடையலாம்.

மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள் போன்றவையெல்லாம் விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் நிவாரணங்கள் மட்டுமன்றி, அவர்களின் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படவும் வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தங்கள் அதற்கு வழி செய்வதாக இராது. மாறாக இலங்கை அரசை தனது கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்து முடிவில் இலங்கை மக்களுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசிற்கு உதவும் வகையிலேயே அவை செயற்படும். என்பதில் ஐயமிருக்க முடியாது.

ஐரோப்பிய ஒன்றியம் ஜி. எஸ். பி. சலுகையை இடைநிறுத்தம் செய்வது இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக செய்யப்படவுமில்லை. அந்த முடிவை எதிர்த்து இலங்கை அரசு குரல் எழுப்புவது இலங்கை நாட்டினது சுதந்திரம். இறைமை ஒருமைப்பாட்டின் மீது அக்கறைக் கொண்டதாலுமல்ல. எனவே நாட்டையும் மக்களையும் பாதிக்கும் நவகாலனித்துவ நிகழ்ச்சி நிரல்களை எதிர்த்து செயற்படுவதற்கு. இலங்கை மக்களின் சார்பில் உரிய நிகழ்ச்சி நிரல்களும் செயற்பாடுகளும் அவசியம். அவை அடக்குமுறை நிறைந்த இலங்கை அரசிற்கு முட்டுக் கொடுப்பதாக இருக்கக் கூடாது.

ஆசிரியர் குழு

## ஜனாதிபதி தேர்தலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்

**வெகுஜனன்**

எதிர்வரும் 26-01-2010 அன்று இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனிநபர் சர்வதிகார ஜனாதிபதியைத் தேர்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற இருக்கிறது. இதில் ஏற்கனவே ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவும், சில மாதங்களுக்கு முன்பு வரை ராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் பொன்சேகாவும் பிரதான வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர். முதலாமவரை ஆளும் வரக்க கட்சியில் ஒன்றான சிறிலங்கா சுதந்திர கட்சியும் அதனோடு இணைந்த கட்சிகளும் தமது பிரதிநிதியாக ஏற்று நிற்கின்றன. இரண்டாமவரை மற்றொரு ஆளும் வர்க்கக் கட்சியான் ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் ஆதரித்து தமது பிரதிநிதியாக நிறுத்தியுள்ளன. இவர்களில் ஒருவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதே முதலாளித்துவ ஜனநாயகத்தின் மீற முடியாத விதியாக உள்ளது.

இவர்கள் இருவரும் யார் என்பதும் நாட்டிற்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் என்ன செய்தார்கள் என்பது சிறிய நேரமாவது சிந்திப்பதற்கு உரிய ஒன்றாகும். முதலாமவர் கடந்த நான்கு வருடங்களாக ஜனதிபதியாக இருந்து வந்தவர். தனது பதவிக்காலத்தில் முன்னையவர்களின் தொடர்சியாக நாட்டை மேல்மேலும் தாராள தனியார் மயச் சேற்றுக்குள் அமுக்கி அதன் விளைவுகளை சொத்து சுகம் கொண்டோருக்கு சாதகமாக்கியும் ஏகப் பெருபான்மையான சாதாரண உழைக்கும் மக்களுக்கு பாதகமாக்கியும் கொண்டவர். அதே போன்று இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை யுத்தமாக்கி வந்த முன்னைய ஜனாதிபதிகளின் வரிசையில் மேலும் ஒருபடி மேலே சென்று வடக்கு கிழக்கு யுத்தத்திற்கு ஆணைகள் இட்டு கொடூர நிலைக்கு முன்னின்றவர். கடந்த வருட நடுப் பகுதியில் தமிழ் மக்களது இரத்த வெள்ளத்திலும் சிங்கள கிராமப்புற இளைஞர்களான ராணுவத்தினரதும் இழப்புகளின் மத்தியிலும் யுத்த வெற்றி பெற்று நவீன துட்டகைமுனு எனப்பட்டம் சூட்டிக் கொண்டவர்.

பிரதான வேட்பாளர்களில் இரண்டாமவர் கடந்த 40 வருடங்களாக இராணுவத்தில் சேவையாற்றி அதில் முப்பது வருடங்களை வடக்கு கிழக்கில் பல நிலைப் பதவிகள் வகித்து இறுதி மூன்று வருட கொடூர யுத்தத்திற்கு வழிகாட்டி வந்த ராணுவத் தளபதியாவார். வடக்கு கிழக்கில் இடம் பெற்ற பல ராணுவ நடவடிக்கைகளின் போது அவற்றில் ஒன்றுமறியாத தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்படுவதற்கும் முனனின்றவர். இன்றும் விடைக்கிடைக்காத அறுநூறுக்கு மேற்பட்டோர் செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் ராணுவ நடவடிக்கையின் போது வடபுலத்தின் ராணுவ உயர்பதவி வகித்தவர். மேலும் பல தமிழ் மக்கள் இளைஞர்களுக்கு இன்று வரை என்ன நடைப்பெற்றது என்று அறிய முடியாது காணாமல் போவதற்கு காரணமாக இருந்தவர்களில் இந்தப் பிரதான வேட்பாளரும் ஒருவர்.

மேலே குறிப்பிட்ட இரண்டு பிரதான வேட்பாளர்களும் வர்க்க நிலையில் ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளாக மட்டுமன்றி இனரீதியில் பௌத்த சிங்கள பேரினவாதத்தின் பிரதிநிதிகளாகவும் உள்ளனர். இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என்பது இல்லை என்பதாகவும் அதற்கு அரசியல் தீர்வு வேண்டும் என்பதை நிராகரிப்பதிலும் ஒத்த நிலைப்பாட்டினர். இலங்கை பல்லினத் தேசியங்களையுடைய ஒரு நாடு என்பதை இவர்கள் இருவருமே ஏற்பதாக இல்லை. அதனைப் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவே கூறியும் வந்துள்ளனர். இந்த நாட்டில் சிறுபான்மை இனம் என்ற ஒன்று இல்லை என்பதை முதலாமவர் கூறிவருகிறார். இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லீம் மக்கள் இடையில் வந்து குடியேறியவர்கள். அவர்கள் வேண்டும் என்றால் இருந்து விட்டுப்போகட்டும். எதையும் கேட்கக்கூடாது எனக் கூறிக் கொண்டவர் இரண்டாமவர். இவை யாவற்றுக்கும் மேலாக கடந்த வருட நடுப்பகுதியில் ஒரே யுத்தத் தேரில் சாரதியாக இருந்து ஆணை பிறப்பித்தவர் முதலாமவர். கொடுவில்லேந்தி தமிழ் மக்கள் மீது கணைகள் தொடுத்து கொத்துக் கொத்தாக வன்னி யுத்தத்தில் மக்களைக் கொன்றொழிப்பதற்கு தலைமை தாங்கியவர் இரண்டாமவர்.

இத்தகையத் தன்மைகளைக் கொண்ட இவ்விரண்டு பிரதான வேட்பாளர்களும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள, முஸ்லீம், மலையகத் தமிழ் மக்களுக்கும் நியாயமான எவற்றையும் கொண்டுவரமாட்டார்கள் என்பது திண்ணம். அவர்களது உயர்வர்க்க பேரினவாத ஏகாதிபத்திய அரவணைப்பு நிலைப்பாடு இந் நாட்டின் உழைக்கும் மக்களுக்குரிய ஒன்றல்ல. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் அதற்கான அரசியலமைப்பும் இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு எதிரான ஒன்று என்பது இவ்வேளை உரத்து நினைவூட்டத் தக்கதாகும்.

இவ்வாறானதொரு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் அணி பிரிந்து இரண்டு பேரினவாத வேட்பாளர்களுக்கும் ஆதரவு தெரிவித்து நிற்கும் வெட்கக் கேட்டையே காணமுடிகிறது. முஸ்லீம் தேசியம் பேசிய கட்சிகளும் மலையகத் தேசியம் பேசுவோரும் அவ்வாறே இருபுறத்தும் சென்றடைந்து நிற்கின்ற கேவலத்தையே பார்க்க வேண்டியுள்ளது. சில தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவித்து வந்த தமது நிலைப்பாட்டைத் தொடருகின்றன. ஆனால் புலிகள் இயக்கத்தை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று அவர்களின் ஆதரவுடன் 22 பாராளுமன்ற உறுப்பினர்களாக மார்தட்டி நின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிவு தமிழ் மக்களுக்கு இழைத்து வந்த துரோகத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியாகவே காணப்படுகிறது.

எவ்வளவிற்கு இனம் மதம் மொழி பண்பாடு என்று தேசியவாதிகள் உச்சக் குரலில் பேசினாலும் இறுதியில் அவர்களது நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பது அவர்கள் சார்ந்த வர்க்கத்தின் குணாம்சமாகவே அமைந்து கொள்ளும். வர்க்கம் கடந்த தூய்மையான தேசியம் என்பது வெறும் போலித்தனமானது என்பதைக் காணும் ஒரு உதாரண இடமாக ஜனாதிபதித் தேர்தலில் தேசியவாதிகள் எனப்படுவோர் அனைவரினதும் நிலைபாட்டைக் காண முடியும். அதிலும் குறிப்பாகத் தமிழ்த் தேசியத்தை குறுந் தேசியவாதமாக முன்னெடுத்து வந்த அனைவருமே இன்று எவ்வாறான முடிவுகளுக்கு வந்துள்ளனர் என்பதைக் காணும் போது தமிழ்ப் பழைமைவாதப் பிற்போக்குத்தனத்தின் மொத்த உருவத்தையே காண முடிகிறது. தமிழ்த் தேசிய இனத்தை விடுவிக்கும் பாதை எனக் கூறி வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை அரசியல் தலைமை தாங்கிய தமிழ்ப் பழைமைவாதக் குறுந் தேசியவாதிகள் இன்று சரத் பொன்சேகாவை ஆதரிக்க எடுத்த முடிவு தொடர்ந்தும் நாம் தமிழ் மக்களுக்கு இத்தகைய மேட்டுகுடி நிலைபாட்டையே கொண்டிருப்போம் என்ற செய்தியையே கோடிட்டுக் காட்டியுள்ளனர். முல்லைத்தீவில் கொன்று குவிக்கப்பட்ட தமிழ்மக்களின் பிணவாடை மாறுவதற்கு முன்பாக, வழிந்தோடிய இரத்தமும் கண்ணீரும் காய்ந்த கறையாக இருந்து வரும் நிலையில், முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்ட மூன்று லட்சம் மக்களின் அவலங்கள் தொடருகின்ற சூழலில், நீண்டகாலமாக சிறைகளில் தமிழர்கள் இருந்து வரும் போது தான் தமிழர் கூட்டமைப்பினர் சரத் பொன்சேகா என்ற ராணுவப் பேரினவாதிக்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் எடுத்து நிற்கிறார்கள்.

இவ்வாறான தீர்மானத்தை எடுக்குமாறு விதித்த சூழல் இனத்துவம் சார்ந்த தேசிய வாத நிலைபாடு என்று யாராவது கூற முடியுமா?. அவர்களது மேட்டுக் குடி உயர்வர்க்க உயர்சாதியப் பழைமைவாதப் பிடியின் இறுக்கமேயாகும். இத்தகைய நிலைப்பாடு இறுகிப் போன தமிழ்ப் பழைமை வாதத்தின் பிரதிநிதிகளான அறிஞர்கள் புத்திஜீவிகள் மேட்டுக்குடிச் சிந்தனையாளர்கள், மதத் தலைவர்கள், வர்த்தகப் புள்ளிகள், உயர்சாதிக் கனவான்கள் ஊடக உரிமையாளர்கள் போன்றோருக்கு உடன்பாடானதேயாகும். அதனாலேயே பகிஸ்கரிப்பு வேண்டாம் என்று ஓலம் வைத்து அறிக்கை விட்டனர். அது மட்டுமன்றி இரண்டு பேரினவாத வேட்பாளர்களில் ஐக்கியத் தேசிய கட்சி ஆதரிக்கும் வேட்பாளரை ஆதரிக்குமாறு நிர்ப்பந்தங்களையும் கொடுத்து வந்தனர். இந்தியா மனம் நொந்தாலும் பரவாயில்லை அமெரிக்கா சரத் பொன்சேகா பக்கம் நிற்கிறதே என நம்பிக்கை ஊட்டப்பட்டது. பச்சைப் பேரினவாதிகளும் சிவப்பு பேரினவாதிகளும் கைக்கோர்த்து நிற்கும் கூட்டணியில் தமிழ்க் குறுந்தேசியவாதப்

தொடர்ச்சி 2ம் பக்கம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



## ஆண்ட பரம்பரையின் தமிழ்த் தேசியத் தலைமை

# பிணங்கள் குவித்த சரத்திற்கு பலத்த ஆதரவு!

மேட்டுக்குடி தமிழரசுக் கட்சியாயினும் சரி அல்லது அதன் அரசியலை அப்படியே பின்தொடர்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகினும் சரி ஒருபோதும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டது கிடையாது. எப்போதும் தமது வர்க்க அரசியலைத் தொடர்வதிலேயே கவனமாகவே இருந்து வந்திருக்கிறது. அது குறிப்பாக 1977 இல் அமிர்தலிங்கம் ஜெ. ஆர். ஜெயவர்த்தனவுடன் வைத்திருந்த நெருக்கமான உறவுடன் ஒரு புதிய பாரளுமன்ற அரசியலை மையப்படுத்திய பொறுக்கி அரசியலாக மாறியது. அதன் புதிய வடிவத்தின் சாட்சி தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக அறிவித்திருப்பது. இரண்டு போர்க்குற்றவாளிக்கிடையில், சுடச் சொன்னவருக்கும் சுட்டவருக்கும் இடையில் இரண்டு மனிதகுல விரோதிகளுக்கிடையில் தேர்வதற்குத் தமிழ் மக்களுக்கு என்ன இருக்கிறது.

எமது பிரச்சினைக்கு எதுவித தீர்வையும் தர முன்வராத ஒருவரை விட ஏதாவதொரு தீர்வை வழங்க முன்வரும் ஒருவரை ஆதரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அப்படியாயின் பொன்சேகா முன்வைக்கும் தீர்வுதான் என்ன? "நம்பிக்கையான மாற்றம்" என்று தலைப்பிடப்பட்ட பொன்சேகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் எதுவித முன்மொழிவுகளோ, உறுதி மொழிகளோ வழங்கப்படவில்லை. தீர்வெதுவுமில்லை என்பது தான் தீர்வு, இப்படி பல ஏமாற்று வேலைகளை தமிழ்த்தேசியவாதிகளின் இலங்கைத்தமிழரின் வரலாற்றில் நிறையவே செய்திருக்கிறார்கள்.

சம்பந்தன் தமிழ மக்களை ஏய்ப்பதில் அத்துடன் நிற்கவில்லை. மேலும் ஏய்க்கிறார். "ஜனாதிபதித் தேர்தலின் பின்பும் பாராளுமன்றத் தேர்தலின் பின்பும் எமது பிரச்சனைக்கு ஒரு வழி பிறக்கலாம். இதற்கு இந்தியா சர்வதேச சமூகமும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் இந்தியா பல பங்களிப்பைச் செய்திரு க்கின்றது. துரதிர்ஷ்டவசமான பல செயற்பாடுகளால் இந்தியா ஒதுங்கி நின்றது. ஆனால், இன்று அரசியல் தீர்வு வேண்டுமென்ற கருத்து இந்தியாவில் வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. பல நாடுகள் எமது விடயத்தில் பங்களிப்பு செய்தன. ஆனால், இந்தியா ஒதுங்கியதால் அவை இந்தியா செய்தால் நாம் பின்னால் நிற்போம் எனக் கூறின. இன்று இந்தியாவின் நிலைப்பாடுகள் மாறத் தொடங்கிவிட்டது. தயவு செய்து எமக்கு உதவுங்கள். நாம் நிம்மதியாகவும் கௌரவமாகவும் சமாதானமாகவும் வாழ உதவுங்கள் என்றே கேட்கின் றோம். கடந்த காலங்களில் எமது மக்கள் பலதுயரங்க ளையும் துன்பங்களையும் சந்தித்து விட்டனர். எங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெருமளவில் நாம் பாராளுமன்றம் செல்ல வேண்டும். இதற்கு உங்களது தொடர்ச்சியான ஆதரவு தேவை" என்கிறார். ஆகவே தீர்வுக்கு ஏதாவது வழி பிறக்கலாம். பிறக்காமலும் போகலாம். உங்களது சுயநலத்துக்காகவும் உங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவுமே தமிழ் மக்கள் உங்கள் சொற்படி வாக்குப்போட வேண்டும். தமிழ் மக்களுக்காக அல்ல. இந்த இடத்தில் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் சரத் பொன்சேகா கனடியன் போஸ்ட்க்கு வழங்கிய நேர்காணலில் சொன்ன விடயத்தை நினைவுபடுத்தல் நல்லது. "இலங்கை சிங்களவர்களுக்கு சொந்தமானது என்று நான் பலமாக நம்புகிறேன், ஆனால் அங்கே சிறுபான்மை சமூகங்கள் உள்ளன, அவர்கள் இந்த நாட்டில் நம்முடன் வாழலாம். ஆனால் அவர்கள், ஒரு சிறுபான்மையாக இருக்கிறார்கள் என்ற சாக்குப்போக்கில் ஏற்றுக் கொள்ள முடியாத விஷயங்களை கோர முயற்சி செய்யக் கூடாது." என்று சொல்லியிருந்தார். இது குறித்து சர்ச்சை எழுந்தபோதும் கூட தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. இப்போது தனது கூற்று பிழையாக சொல்லப்பட்டுள்ளது என்றும் தான் அப்படிச் சொல்ல வில்லை என்றும் கூறும் பொன்சேகாவுக்கு ஏன் இந்தத் திடீர் ஞானோதயம். அவரது கூற்றை த.தே.கூ ஏற்றுக்கொள்கிறதா என்றால் அதற்கெல்லாம் பதில் இல்லை. சம்பந்தனின் பதில் இதுதான். "இன்றைய நிலையில் எமது பிரச்சினைக்கு அரசியல் தீர்வுக்கான ஓரளவு நம்பிக்கை



காணப்படுவதால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்களது தீர்மானத்தின் படி ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிக்க வேண்டும். இதன் மூலம் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி எமது இலட்சியங்களை அடைவதற்கு மக்கள் ஒன்றிணைய வேண்டும். ஆண்டவன் எம்மைக் கைவிட மாட்டான். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எம்மோடு கைகோர்க்க வேண்டும்". இதில் மிகப்பெரிய ஏமாற்றுவேலை யாதெனில் மக்கள் தான் பொன்சேகாவை ஆதரிக்கக் கோரியது போல "உங்களது தீர்மானத்தின் படி" என்று சொல்லி இட்டுக்கட்டுகிறார். மக்களிடத்தில் பேசாத, மக்களைப் பிரதிநிதித்துவப்படு த்தாத, அவலங்கள் நிகழ்ந்தபோதெ ல்லாம் மக்களைச் சந்திக்காத வெளிநாடுகளில் சுகபோகங்களை அனுபவித்த (மெனிக் அகதிகள் முகாமுக்கு த.தே.கூட்டமைப்பை அரசு அனுமதித்தபோது அங்கு போகாது சுவிஸ்க்கு போனவர் சம்மந்தன்) இவர்கள் தான் மக்களின் தீர்மானப்படி பொன்சேகாவை ஆதரிப்பதாக இட்டுக் கட்டுகிறார்கள்.

இதற்கிடையில் நல்லூரில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் 'இலங்கையில் குறிப்பாக ஜனநாயக அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், மக்கள் உயிர் வாழும் உரிமை பாதுகாக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டுமென சர்வதேச சமூகத்திடம் இம்மாநாடு வற்புறுத்துகின்றது.' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எல்லாவற்றையும் சர்வதேச சமூகம் பார்த்துக்கொள்ளும் என்றால் இவர்கள் எதற்கு தேர்தல் எதற்கு. தமிழ்த்தேசியம் குறித்து இவர்கள் ஏன் வாய்கிழியப் பேசவேண்டும்.

சரத் பொன்சேகாவை இவர்கள் ஆதரிப்பதற்கு சொல்லும் இன்னொரு காரணம் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அவரின் அரசாங்கத்துடன் இணைந்திருந்த சக்திகளால் படுகொலை செய்யப்பட்டனர். எனவே பொன்சேகாவுக்கு ஆதரவு தர வேண்டும்" என்பதாகும். பொன்சேகாவும் அரசாங்கத்தின் அங்கமாக இருந்தவர் தான். நடைபெற்ற சம்பங்களுக்கு அவரும் பொறுப்புச் சொல்ல வேண்டியவரே. இன்று அவர் எதிர்த் தரப்பில் நிற்பது ராஜபக்ஷவை பழி தீர்க்கவே யொழிய வேறெதற்குமல்ல. அவர்கள் அந்தப் பக்கம் இருப்பதால் நாம் இந்தப் பக்கம் எனறு முடிவு செய்தால் அதுபோல அரசியல் முட்டாள்தனம் வேறேதும் இருக்க முடியாது.

பொன்சேகாஆயிரக்கணக்கான தமிழர்களின் மரணங்களுக்கு நேரடிப் பொறுப்பானவர். தடுப்பு முகாம்களில் தமிழரைத் தடுத்து வைக்க வேண்டும் என்று ஆலோசனையைக் கூறியவரே இவர்தான். பயங்கரவாதிகள் அகதிமுகாம் களில் இருக்கிறார்கள் எனவே அவர்களை மீள்குடியேற்ற அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்தவர். இவரது திட்டப்படி தான் தமிழர்கள் ஏழு மாதங்களுக்கு மேலாக தடுப்பு முகாம்களில் சிக்கி அவலங்களை சந்திக்க நேர்ந்துள்ளது.

போர் நிறுத்த காலத்தில் யாழ்ப்பாணத்தின் இராணுவத் தளபதியாக இருந்தபோது சமாதான முயற்சிகளைச் சீர்குலைப்பதில் முன்னின்றவர். யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றக் கூடாதென்று அப்போதைய அரசுக்கு அழுத்துமாகச் சிபார்சு செய்தவர். இவரது இறுக்கமான போக்கினால் தான் முதற் கட்டப் பேச்சுக்களின் போது உருவாக்கப்பட்ட குழுக்கள் செயலிழக்கும் நிலை ஏற்பட்டது. சமாதானப் பேச்சுக்கள் இழுபறிக் குள்ளாகி சீர்குலைய நேரிட்டது. உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்ற முடியாதென்ற பிடிவாதப் போக்குக்கு இவருக்கு உதவி யவர் இந்திய ஜெனரல் சதீஸ் நம்பியார், ஐ.நாவின் விஜய் நம்பியாரின் சகோதரர். சதீஸ் நம்பியாரும் பொன்சேகா வும் சேர்ந்து உருவாக்கிய அறிக்கைதான் சமாதானப் பேச்சுவார்த்தையில் உயர் பாதுகாப்பு வலையங்கள் தொடர்பில் இழுபறி ஏற்பட்டு பேச்சுவார்த் தைகள் தோல்வியடைந்தன. இந்த சரத் பொன் சேகா தான் உயர் பாதுகாப்பு வலையங் களை திறந்துவிடுவார் என்று சப்பைக் கட்டு கட்டுகிறார் சம்பந்தன்.

ஏதோ ஜனநாயக ரீதியில் த.தே.கூவின் சகல உறுப்பினர்களுடனும் கலந்தா லோசித்து பொன்சேகாவை ஆதரிப்பதாக ஜனவரி 6ம் திகதி முடிவு எடுக்கப்பட்டதாக சொல்லப்படுவ தெல்லாம் வெறும் நாட கமே. ஜனவரி 2ம் திகதியே ஐ.தே.கவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பொன்சேகா த.தே.கூபின் அழைப்பின் பெயரில் யாழ் விஜயம் என்று செய்தி வெளியிட்டது. நவெம்பரில் சூரிச் சில் இடம்பெற்ற மகாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டாகிவிட்டது. பின்னர் நடந்ததெல்லாம் ஜனநாயகம் போல் தோற்றம் காட்ட நடாத்தப்பட்ட நாடகமே. இதற்கிடையில் தமிழ் மக்களின் எண்ணப்போக்கை அறிந்து கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்க் காங்கிரஸ் தேர்தலைப் பகிஷ்கரிப்பதாக அறிவித்தார். பின்னர் சம்பந்தன் த.தே.கூ பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை அறிவித்த ஊடகவியலாளர் மகாநாட்டில் கஜேந் திரகுமார் பொன்னம்பலம் புன்சிரிப்புடன் அமர்ந்திருந்தார்.

இதற்கிடையில் "போர்க்குற்ற விசாரணைகள் குறித்து ஐ.நாவின் அக்கறை ஆட்சிமாற்றத்தையே வலியுறுத்துகிறது" என்று தலையங்கம் தீட்டி பொன்சேகாவுக்கு வக்காளத்து வாங்குகிறது உதயன் நாளிதழ்.

எப்பாடுபட்டாவது தமது பாரளுமன்றக் கதிரைகளை பேணவேண்டும் என்பதில் த.தே.கூ கவனமாக உள்ளது. அதற்கு யார் கால்களில் விழவோ யாரிடமும் கூட்டுவைக்கவோ தயங்காதவர்கள் இந்தத் தமிழ்த்தேசியவாதிகள். அதனால்தான் "சரத் பொன்சேகா வெற்றி பெறவேண்டும் என்பதைவிட மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைய வேண்டும் என்பது முக்கியமானது. தேர்தல் முடிந்த பின்னர், சரத் பொன்சேகா தமிழ் மக்களின் வாக்குகளினாலேயே வெற்றியடைந்தார் என அவரை உணரச் செய்ய வேண்டும். இதற்காக தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, அநேக நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்ய வேண்டும். அந்தப் பலத்தைக் கொண்டு, வலுவான ஒரு நிலையில் இருந்து நாங்கள் எமது உரிமைகளுக்காக அரசாங்கத்துடன் பேரம் பேசி வெற்றியடைய முடியும்." என்கிறார் சம்பந்தன். இவர்கள் யாரிடம் பேரம் பேசி தமிழ் மக்களை இதுவரை ஏய்த்தார்கள் என்பதோ இப்போது யாரிடம் பேசிய பேரத்தின் அடிப்படையில் பொன்சேகாவை ஆதரிக்கிறார்கள் என்பதோ ஒன்றும் சிதம்பர ரகசியம் இல்லைத்தானே.

இந்திரன்




ஜனாதிபதித் தேர்தல் பற்றி புதிய - ஜனநாயகக் கட்சி யாழ் நகரில் நடாத்திய பகிரங்க அரசியல் கருத்தரங்கில் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உரையற்றுவதையும் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் கா. கதிர்காமநாதன் தலைமை உரைநிகழ்த்துவதையும் அரசியல் குழு உறுப்பினர் க.தணிகாசலம் வரவேற்புரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் இங்கு காணலாம்


www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# பகிஷ்கரிப்பைப் பற்றி ஏன் பயப்படுகிறார்கள்?

வாக்குறுதிகளை மக்கள் நம்புகிறார்களோ இல்லையோ, வாக்குக்களைத் தருமாறு கோருகிறவர்கள் வாக்குறுதிகளை அள்ளி அள்ளி வழங்குகிறார்கள். வேறு பொருட்களையும் வழங்குவார்கள். தேர்தலின் தன்மையையும் வென்றவருக்கு வருகிற நன்மையையும் பொறுத்து அவை வேறுபடலாம். இப்போது நடப்பது முழு நாட்டின் மீதும் கட்டுப்பாடற்ற அதிகாரம் செலுத்தப் போகிறவராக ஒருவரைத் தெரிந்தெ டுப்பதற்கான தேர்தல். இரண்டு லட்சம் வரையிலான தமிழர் அடையாள அட்டை இல்லாமல் வாக்களிக்கும் உரிமையற்று இருக்கிறார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் ஏறத்தாழ எல்லாருமே அகதி முகாங்கள் எனப்படுகிற திறந்த வெளிச் சிறைக் கூடங்களில் உள்ளனர். அவர்களை விட, ஆதாரமற்ற ஐயங்களின் பேரில் மறியலில் வாடுகிற பல ஆயிரக்கணக்



கானோர் உள்ளனர். அவர்களிற் குறிப்பிடத்தக்க தொகையினர் சிங்களவரும் முஸ்லிம்களும் மலையகத் தமிழருமாவர். இவர்களெல்லாரும் போரையும் பயங்கரவாதத்தையுங் காரணங் காட்டி வாக்குரிமை மறுக்கப்பட்டவர்கள். வெறும் இனத் துவேஷத்தாலும் அதிகாரத் துஷ்பிரயோகத்தாலும் அரசியல் தலைவர்களது அசட்டையாலும் வாக்குரிமையற்றோராக்கப்பட்டுப் பத்தாயிரக் கணக்கானோர் மலையகத்தில் உள்ளனர். அவர்களைப் பற்றிய அற்ப அக்கறையும் அற்றவர்களாகவே இந்தச் சனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிற பிரதான வேட்பாளர்கள் மட்டுமல்லாமல் பிற வேட்பாளர்களும் இருக்கிறார்கள். ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதையோ ஒரு பொது வேலைத்திட்டத்தை முன்வைப்பதையோ பற்றிய அக்கறை சிறிதுமற்று மூளை வரண்டு கிடக்கும் மூன்று இடதுசாரி வேட்பாளர்களிடமிருந்தோ முற்றிலும் சுயலாபத்துக்காகத் தேர்தலில் நிற்கிற பிற தமிழ், முஸ்லிம், சிங்கள வேட்பாள ர்களிடமோ நாம் எதை எதிர்பார்க்க முடியும்?.

அந்த வேட்பாளர்கட்காகப் பிரசாரத்தை முன்னெடுக்கிறவர்கள் இடத்துக்கேற்றவிதமாக ஒவ்வொரு வாக்குறுதிப் பட்டியலாக வழங்கிக் கொண்டு போகிறார்கள். சனாதிபதியாக இருக்கிறவர் ஏ-9 பாதையைத் திறந்து விட்டதோடு முகாம்களில் இருந்து ஏழாயிரத்திற்கு மேற்பட்டோரை விடுவித்துமிருக்கிறார். இன்றும் எத்தனையோ அற்புதங்கள் நிகழலாம். எல்லாச் சிறைக் கைதிகளையும் விடுவித்து எல்லா அகதி முகாம்களையும் மூடி எல்லாரையும் தங்கள் இருப்பிடங்களுக்கு அனுப்புவது கூட இயலாததல்ல. ஆனால் திறக்கப்பட்ட பாதையை மூடவும் விடுவிக்கப்பட்ட கைதிகளை மறுபடியும் சிறைப்பிடிக்கவும் மக்களைத் தமது காணிகளிலிருந்து விரட்டவும் எத்தனை நாட்கள் எடுக்கும்? எனவே இந்த நாடகங்கள் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் வரை நடக்கும். சரத் பொன்சேகா தமிழர் தேசியக் கூட்டணித் தலைவருக்கு வாக்குறுதிகளை வழங்கியுள்ளாராம். அந்த வாக்குறுதிகளைப் பற்றி அவரை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் ஜே.வி.பி. அறியுமா? அல்லது ஜே.வி.பிக்கு வேறுவிதமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா? நம்பி ஏமாந்து விட்டோம் என்பதே தமிழ்க் குறுந்தேசியவாதத் தலைவர்களது பாட்டாக ஒரு நூற்றாண்டுக் காலமாக இருந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு தருணத்திலும் நம்பக்கூடாதவர்களை நம்புவதும் ஏமாந்த பிறகு அழுது புலம்புவதும் அவர்களுடைய வரலாறாகிவிட்டது. அவர்கள் ஏமாறுவது ஒருபுறமிருக்க, அவர்கள் செய்து கொள்ளுகிற உடன்படிக்கைகளால் பாதிக்கப்பட்டோர் சாதாரண மக்களாகவே இருந்து வந்துள்ளனர்.

இவ்வளவு காலமும் நம்புவதற்கு ஒரு அடிப்படை இருக்கிறதாகச் சொல்லவாவது ஏதோ ஒரு நியாயத்தைக் காட்ட முடிந்தது. இப்போது? எந்தவிதமான அடிப்படையுமே இல்லாமல் எதிர்பார்ப்புக்களைப் பற்றி ஏதேதோ சொல்லப்படுகிறது. இவர்களுக்குத் தமிழ் மக்கள் பற்றிய அக்கறை இருந்திருந்தால், தமிழ் மக்களின் சார்பான கோரிக்கைகளைப் பட்டியலிட்டு அவற்றைப் பூரணமாக ஏற்கும் வேட்பாளரையே ஆதரிப்போம் என்று எப்போதோ சொல்லியிருக்கலாமே ஏன் செய்யவில்லை? புதிய ஜனநாயகக் கட்சி பொது வேட்பாளர் பற்றிப் பேசிய போது, தமிழ் மக்கள் சார்பான கோரிக்கைகளை எடுத்துக் கூறியிருக்கலாமே ஏன் செய்யவில்லை?

ஏன் செய்யவில்லை என்று கேட்பது தவறான கேள்வி, ஏன் செய்ய வேண்டும் என்ற கேள்வி கூடப் பொருத்தமானது. அவர்கள் யாருடைய நலன்களை முன்னெடுக்கிறார்கள் என்று அறிந்தவர்கட்கு அவர்களுடைய அக்கறைகள் விளங்கும். அந்த அக்கறைகள் தமிழ் மக்களின் நலன் சார்ந்தவை அல்ல. என்னென்ன பொய்யைச் சொல்லித் தமிழரின் வாக்குக்களைப் பெற முடியுமோ அதையெல்லாம் கூசாமற் சொல்வார்கள். கடந்த ஓராண்டுக்குள் மட்டும் தமிழர் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் அடித்த அரசியற் குத்துக்கரணங்கள் இன்னும் இரண்டு தலைமுறைக்குப் போதும். இந்தவிதமான சேர்க்கஸ் கோமாளிகள் என்ன சொல்லுகிறார்களோ அப்படியே செய்யுங்கள் என்று சொன்னவர் வேறெவருமல்ல, தமிழ்ப் பழமைவாதத்தின் தூணாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள ஒரு முன்னாள் உயர்நீதிமன்ற நீதவான். தமிழர் தேசியக் கூட்டணி அங்கே இருப்பதா இங்கே வருவதா எங்கேன் மறைவதா என்று தடுமாறிக் கொண்டிருப்பதாக எல்லாரும் எண்ணிக் கொண்டிருந்த போது தான் அவர்கள் சொல்லுகிறபடி வாக்களியுங்கள் என்று நீதியின்றிப் பேசுகிறார் நீதிபதியார். அவர்கள் என்ன சொல்வார்கள் என்று தெரிந்து சொன்னாரா, அல்லது என்ன சொல்ல வைக்கக் கொழும்புக் கனவான்கள் திட்டமிடுகிறார்கள் என்று அறிந்து சொன்னாரா?



யாழ்ப்பாணக் கத்தோலிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தமிழ் மக்கள் தமது வாக்குக்களை வீணாக்கக் கூடாது என்பதனால் வாக்களித்தே தீர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் எந்தக் கொலைகார ஆட்சி வந்தாலும் பரவாயில்லை. அதைத் தெரிவு செய்வதில் தமிழருக்கு ஒரு பங்கு வேண்டும் என்பது தான் அவரது அக்கறையா?

ஓய்வு பெற்ற பேராசிரியர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ஒரு வேட்பாளரையும் பேராசிரியர் சிவத்தம்பி இன்னொருவரையும் மனதில் வைத்துக் கொண்டு அதை வெளியே சொல்லாமல் தமிழரை வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில மாதங்கள் முன்பு தமிழ்ச் செம்மொழி மாநாடு தொடர்பாகச் சிவத்தம்பி அடித்த குத்துக்கரணங்கள் சம்பந்தனையும் மலைக்க வைத்திருக்கும்.

என்றாலும் இந்தத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லாருக்கும் மட்டுமன்றி ஊடகத்துறை எசமானர்கட்கும் உள்ள அடிப்படையான கவலை, தமிழ் மக்கள் யாழ்ப்பாண மநகர சபைத் தேர்தலின் முன்னுதாரணத்தைப் பின்பற்றிவிடக் கூடும் என்பது தான். இம்முறையும் கொழும்பு வாழ் தமிழ் நடுத்தர வர்க்கம் வழமையாக வாக்களித்தது போலவே வாக்களிக்கும் என்பதில் அவர்களுக்கு ஐயமில்லை. வடக்கு- கிழக்கில் முக்கியமாக வன்னியிலும் குடா நாட்டிலும் மக்கள் பகிஷ்கரிப்பதை அவர்கள் அஞ்சக் காரணம் அவர்கள் விரும்பிய வேட்பாளர் வெல்லுவாரோ தோற்பாரோ என்ற கணிப்புக்கும் அப்பாற்பட்டது.

பகிஷ்கரிப்பும், அதைவிட முக்கியமாக, வாக்குச் சீட்டுக்களைப் பழுதாக்குவதும் வழமையான ஒரு அரசியல் நடத்தையாகி விடலாம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அவ்வாறு நடந்தால் மக்கள் தேர்தல் அரசியலிலிருந்து விலகி மாற்று அரசியல் ஒன்றை நோக்கிப் பெயர்வார்கள் என்று அஞ்சுகிறார்கள். பகிஷ்கரிப்பு என்பது அரசியலிருந்து விலகி நிற்பது என்று அவர்கள் சொன்னாலும், அது உண்மையில் அவ்வாறானதல்ல என்று அவர்கள் நன்கு அறிவார்கள். மக்கள் பங்களாதேஷ் தேர்தல்களைப் பகிஷ்கரித்தார்கள் நேபாளத் தேர்தல்களைப் பகிஷ்கரித்தார்கள். பகிஷ்கரிப்பு என்பது காத்திரமான ஒரு அரசியல் நடவடிக்கையாக அமைவது எப்போதென்றால் மக்கள் முழுமையான மனத் தெளிவுடன் அதில் ஈடுபடுகிற போது தான்.

2005 முடிவில் அவ்வாறு நிகழவில்லை. விடுதலைப் புலிகள் அதற்கான வாய்ப்பை வழங்கவில்லை. எனவே தான் இம்முறை பகிஷ்கரிப்புக்கும் பழுதாக்கலுக்குமான வேண்டுகோளைப் புலிகளின் கட்டளையுடன் ஒப்பிட முடியாது. ஒப்பிடுவதானால் யாழ்ப்பாண நகராட்சித் தேர்தலில் மக்கள் மனம்விரும்பி விலகி நின்றதுடன் ஒப்பிடலாம்.

எங்கள் பெருங்குடி மக்களும் ஊடக எசமான்களும் இவற்றை அறியாதவர்களல்ல. அவர்கள் அஞ்சுவது ராஜபக்ஷ ஆட்சி மீளுவதையோ சரத்பொன்சேகா சனாதிபதியாவதையோ அல்ல. இரண்டுக்கும் அப்பால் இன்னொரு அரசியல் சக்தி எழுச்சி பெறுவதைப் பற்றியே அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலே தான் மக்களை இன்னமும் தேர்தல் அரசியலில் ஒரு பகுதியாகப் பேணுவதில் அவர்களுடைய கவனம் குவிந்துள்ளது.

- நரசிம்மா -

## வாக்குக் கடதாசியைச் சரிவரப் பயன்படுத்துவது எப்படி/

அந்தக் கடதாசியை எப்படிப் பயன்படுத்தினாலும் எதுவுமே மாறாது என்று அவர்கள் எல்லாருக்கும் தெரியும். என்றாலும் அந்தக் கடதாசி பெறுமதி மிக்கது என்பதால் அதை வீணாக்கக் கூடாது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதை எப்படிப் பயன்படுத்துவது என்று சொல்ல மாட்டார்கள். பயன்படுத்தத் தெரியவில்லை என்று உங்கள் பாட்டில் வீட்டில் இருந்து விடாதீர்கள் என்றும் எப்படியாவது சரியாகப் பயன்படுத்தும்படியுமே அவர்கள் சொல்லுகிறார்கள். அதை விடவும், எவரேன் பயன்படுத்த மாட்டார் என்று அறியும் எவரும் அதை எடுத்துப் பயன்படுத்தவும் இயலும் என்பதால் அந்தக் கடதாசியை எப்படிப் பயன்படுத்துவது என்று ஆராயத் தொடங்கினேன்.

சில கேள்விகளுக்குச் சரியான ஒரு மறு மொழி மட்டுமே உண்டு. சில கேள்விகளுக்குச் சரியான மறுமொழி ஒன்றுமேயில்லை. சில கேள்விகட்குச் சரியான மறுமொழிகள் பல உள்ளன. வாக்குச் சீட்டைச் சரிவரப் பயன்படுத்துவது எப்படி என்ற கேள்விக்குப் பல மறுமொழிகள் உள்ளன. அந்தக் கடதாசியில் உள்ள சதுரமான சிறிய பெட்டிகளில் ஒன்றிற்குள் பெருக்கல் அடையாளம் இடுவதோ இலக்கம் எதையாவது எழுதுவதோ தான் சரியான மறுமொழி என்று சொல்கிற பலர் எந்தப் பெட்டி என்று சொல்லுவதில்லை. சொல்லுகிறவர்கள் ஆளுக்காள் வேறு விதமாகச் சொல்லுகிறார்கள். எனவே அவற்றை விடச் சரியான வேறு மறுமொழிகளும் உள்ளன என்று உறுதியாக நம்புகிறேன். வரிசையில் நின்று உங்கள் கைவிரலை அசிங்கப்படுத்தி வாங்குகிற அந்த வாக்குக் கடதாசியை வீணாக்கலாமோ? எனவே தான் வேறு நல்ல பயன்பாடுகளைச் சொல்லுகிறேன். தெரிவு உங்களுடையது.

தாள் சதுரமாக இருந்தால் அதை மடித்துக் காகிதக் கப்பல், பறவை, தவளை, கடகம், குதிரை என்று பலவுஞ் செய்யலாம். சற்று நீள் சதுரமாக இருந்தால் றொக்கற் செய்து வீசி விளையாடலாம். இன்னும் நீளம் என்றால் நீளத் தோணி ஒன்று செய்து தண்ணீரில் விடலாம். தாளைக் கசக்கிப் பந்தாக்கி வீசி விளையாடலாம். கெட்டியான பற்களும் வாயில உமிழ்நீரும் இருந்தால் வாயிற் போட்டுச் சப்பி உருண்டையாக்கி ஒரு தேர்தல் சுவரொட்டி மீது எறியலாம். தெருவிற் கிடக்கும் கோழி மலத்தையோ நாய் மலத்தையோ எடுத்து ஓரமாகப் போடப் பாவிக்கலாம். ஆனால் தேர்தல் அதிகாரிகள் அதற்கெல்லாம் அனுமதிக்க மாட்டார்கள். வீட்டுக்குக் கொண்டு செல்லவும் முடியாது. கிழித்துக் குப்பைத் தொட்டியில் இடலாம். கிழிக்க விடமாட்டார்களென்றால் கிழிக்காமலே இடலாம். ஆனாற் குப்பைத் தொட்டியெதுவும் அயலில் இராது. கோவில் உண்டியல் மாதிரி ஒரு பெட்டி. அதிலுள்ள நீண்ட துவாரத்தின் வழியே தான் போடலாம். நேரமிருந்தால் எல்லாச் சதுரங்களிலும் பெருக்கல் அடையாளமிடலாம். அல்லது தாளுக்குக் குறுக்காகப் பெருக்கல், வகுத்தல், கூட்டல், கழித்தல் அடையாளம் ஒன்றை இடலாம். ஒரு அரிவாளும் சம்மட்டியும் வரையலாம். நீளமாக ஒரு கவிதை எழுதலாம். வாக்குகளை எண்ணுவோர் தேநீர் பருகும்போது படிக்கும் வாய்ப்புண்டு. பட்டியலில் உள்ள எதுவுமே உங்கள் விருப்பிற்குரியதல்ல என்று சொல்ல அக் கடதாசியைப் பயன்படுத்த எத்தனையோ வழிகள் உள்ளன. நிச்சயமாக வாக்குக் கடதாசியைச் சரிவரப் பயன்படுத்தும தெரிவு உங்களுடையது.

அவதானி

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை 5

- வெகுஜனன் -

தனித் தமிழ் ஈழத்திற்கான பிரகடனம் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டபின் அதற்கான கடும் பிரச்சாரம் மேற் கொள்ளப்பட்டது. போராட்டத்தின் மூலம் அதனை வென்றெடுப்பது என்று பொதுப்படையாகக் கூறப்பட்டதின் பின்னால் அகிம்சை வழி, ஆயுதப் போராட்ட வழி என இரண்டு நிலைகள் முன்னெடுக்கப்பட்டன. முன்னையதைத் தமிழர் கூட்டணித் தலைமையும் பின்னயதைத் தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து வந்த இளைஞர்களும் தீவிரமாக முன்னெடுக்கும் முயற்சிகளில் இறங்கினர். அதன் வழியிலேயே அடுத்து வரவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை செயலாற்றியது. தமிழ் இளைஞர்களைப் பயன்படுத்தி ஏகப்பெரும்பான்மையான ஆசனங்களைக் கைப்பற்றுவதிலே குறியாக இருந்தனர்.

இத்தகைய சூழலிலேயே 1977ம் ஆண்டு யூலை மாதத்தில் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத் தேர்தல் மிக முக்கியமான திருப்புமுனையாகவும் இலங்கையின் எதிர்காலத்தை ஒரு இருண்ட காலப்பகுதிக்குள் இழுத்துச் செல்வதாகவும் இருந்தது. இத் தேர்தல் பிரசாரத்தை தெற்கிலே ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியல் வியூகங்களுடன் முன்னெடுத்தது. ஏற்கனவே ஏழு வருடங்கள் இடதுசாரிகள் எனப்பட்டவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சி செய்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை தோற்கடிப்பதில் ஜே.ஆர். முன்னிலை வகித்தார். அவருக்கு மலையகத்தின் தலைவரான சௌ. தொண்டமான் பக்கபலமாக இருந்தார். ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழான பொருளாதாரக் கொள்கைகளும் மக்கள் மீதான பெரும் சுமைகளும் வெறுப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தி நின்றன. தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதாகக் கூறி முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மக்களைப் பசி பட்டினிக்கு உள்ளாக்கின. குறிப்பாக, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். அதே வேளை, தெற்கில் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் விரக்தியுற்றனர். வடக்கு-கிழக்கில் இன முரண்பாடு வளர்ந்து அடக்குமுறைகளாகத் தன்னை வெளிப்படுத்தி நின்றது. மேற்படி நாடு தழுவிய நெருக்கடிச் சூழலை தெற்கில் ஜே.ஆரும் வடக்கு-கிழக்கில் தமிழர் கூட்டணியும் மலையகத்தில் தொண்டமானும் தத்தம் பாராளுமன்ற அரசியல் நிலைப்பாடுகட்குச் சாதகமாக மாற்றிக் கொண்டனர். குறிப்பாக வடக்கு-கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ம் ஆண்டுத் தேர்தலை தமிழ் ஈழத்திற்கான தமிழ் மக்களின் ஆணையைப் பெறும் தேர்தலாகவே பிரச்சாரம் செய்து கொண்டது. தோழர் சண்முகதாசன் தலைமையிலான மாக்சிச லெனினிசப் கம்யூனிஸ்ட் கட்சி இப் பொதுத் தேர்தலைப் புறக்கணித்தது. பாராளுமன்றப் பாதையால் நாட்டை வளப்படுத்தவோ அன்றி தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கவோ இயலாது எனச் சுட்டிக்காட்டியது. தமிழீழத்தை அடையமுடியாது என்றும் தேர்தல் காலத்தில் பரந்த பிரசாரத்தை மேற்கொண்டு தேர்தலை மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் கோரி நின்றது.

1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிவானது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மோசமான தோல்வியுடன் எட்டு ஆசனங்களைப் பாராளுமன்றத்தில் பெற வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து மிகப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி பதினெட்டு ஆசனங்களைப் பெற்றது மட்டுமன்றி பாராளுமன்ற வரலாற்றில் முதல் தடவையாக தமிழர் ஒருவர் எதிர்க் கட்சித் தலைவராக வரவும் முடிந்தது. அவர் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ. அமிர்தலிங்கம் ஆவார். இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்து ஒருவர் கூடத் தெரிவு செய்யப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பதினெட்டு ஆசனங்கள் கிடைத்தபோதும் அவர்கள் கோரிய தமிழீழத்திற்கான ஆணைக்குக் கிடைத்த வாக்கு விகிதம் ஐம்பத்திரண்டு சதவீதமாக மட்டுமே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இப் பதினெட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக்கொண்டு எதிர்க் கட்சித் தலைமையைப் பெற்றபோதும், தமிழர் கூட்டணி உரிய அரசியல் தந்திரோபாய வழிகளில் முன்செல்வதில் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது. ஏனெனில், பெறப்பட்டது தமிழீழத்திற்கான ஆணை. ஆனால் வகித்துக்கொண்டவை பாராளுமன்றப் பதவிகளும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும். இது ஒரு முரண் நிலையாகும்.

ஒரு புறத்தில் ஜே.ஆர். தலைமையில் ஆறில் ஐந்தாக ஐக்கிய தேசியக்கட்சி அபரமிதமான ஆசனங்களைப் பெற்றிருந்த அதே வேளை ஜே.ஆரோ இலங்கையின் மிக மோசமான பேரினவாத முதலாளித்துவவாதியாகவும் அரசியலில் நரிக்குணம் கொண்ட பிற்போக்குவாதியாகவும் இருந்தார். 'முகத்திற்குக் குத்துவது போன்று பாவனை காட்டி வயிற்றில் குத்த வேண்டும் என்பது அரசியலுக்கும் பொருந்தும்' எனக் கூறியவர் ஜே.ஆர். அத்தகைய ஜே.ஆர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூரண விசுவாசியாக இருந்தார். சேனநாயக்கா குடும்பம் பிரித்தானிய ஏகாதிபத்திய வழிபாட்டாளர்களாக இருக்க ஜே.ஆர். அதற்கும் அப்பால் அமெரிக்காவின் பாதம் தாங்கியாகவும் நேரடி முகவராகவும் விளங்கினார். இத்தகைய மனிதர் 77ல் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைமை தாங்கி வெற்றி பெற்றபோது அந்த வெற்றியை 'ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி' என்றும் 'அவர் மிகச் சிறந்த ஜனநாயகவாதி' என்றும் அ.அமிர்தலிங்கம் தனது வாழ்த்துரையில் தெரிவித்திருந்தார்.

இத்தகைய ஜே.ஆர். பிரதமர் பதவி ஏற்று ஒரு மாதம் முடிவதற்கு முன்பே, 1977 ஆகஸ்ட் 14ம் திகதி நாடு தழுவிய முதலாவது இன வன்செயல்களுக்கு வழி வகுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் புனித பற்றிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஒரு களியாட்ட நிகழ்வில் சிவில் உடையில் இருந்த சிங்களப் பொலிசாருக்கும் பொதுமக்கள் சிலருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக



மாறி விரிவு பெற்றது. அச் சம்பவம் இனவெறிக் கூச்சலாக மாறியதுடன் யாழ் நகரத்தில் பொதுமக்களையும் கடைகளையும் பொலீசார் கடுமையான தாக்குதலுக்கு உட்படுத்தினர். இச் சம்பவத்திற்கு மறுநாள் கொழும்பு சென்ற இரவுப் புகையிரதத்தில் பய்யணித்த சிங்கள மக்கள் சிலரைத் தமிழ் இளைஞர்கள் சிலர் திட்டமிட்டே தாக்கினர். புகையிரதம் அனுராதபுரத்தைச் சென்றடைந்த போது கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து தரித்து நின்ற புகையிரதத்தில் பயணித்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இரு தரப்பினதும் பொறுப்பற்ற தாக்குதல்கள் ஜே.ஆரினால் நாடு தழுவிய இனவன்முறையாக மாற்றப்பட்டது. தமிழர்களுக்கும் தமிழீழக் கோரிக்கைக்கும் முதலாவது பதிலடியாகவும் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது தன்னைப் பேசவிடாது தடுத்து கூட்டத்தைக் கலைத்தமைக்குப் பழி வாங்கலாகவும் அது அமைந்து கொண்டது. இவ் இன வன்முறையில் வடக்கு கிழக்குத் தமிழர்கள் மட்டுமன்றி மலையகத் தமிழர்களும் அவர்களது தொழில் வர்த்தக நிலையங்களும் தாக்கப்பட்டன. உயர் வர்க்கத் தமிழர்கள் பாதுகாப்பாக இருந்தனர். சாதாரண தமிழர்கள் தாக்கப்பட்டு அழிவுகளுக்கும் உயிர் இழப்புகளுக்கும் உள்ளாகினர். வழமை போன்று சிங்களக் காடையர்கள் பொலீஸ் ராணுவ அரசு யந்திர உதவியுடன் தத்தமது கைவரிசைகளைக் காட்டி கொலை கொள்ளைகளிலும் ஈடுபட்டனர். அதற்குக் குறைவில்லாத வகையில் வடக்கில் தமிழ் இன உணர்வுகொண்ட இளைஞர்கள் சிங்கள மக்கள் மீதும் அவர்களது தொழில் வர்த்தக நிலையங்கள் மீதும் காடை யர்கள் போன்று வெறித்தன நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். தமிழர் கூட்டணி திகைத்து நின்றது. தூரநோக்கற்ற தமிழ் இளைஞர்கள் இன உணர்ச்சி வசப்பட்டவர்களாகவே இருந் தனர்.

இவ்வாறு 1977ம் ஆண்டு ஆகஸ்ட் இனவன்முறை நடந்து கொண்டிருந்த வேளை அதனை உடனடியாகவே தடுத்து நிறுத்த மனமின்றிப் பரவும் வன்முறைகளை விட்டுப் பிடிப்பதில் ஜே.ஆர் தனது பழிவாங்கும் நரித்தனப் போக்கைக் கடைப்பிடித்தார். எதிர்கட்சித் தலைவராக இருந்த அ. அமிர்தலிங்கம் இவ் இனவன்முறை பற்றி ஆக்கிரோசமாகப் பேசினார். அதற்கு ஜே.ஆர். தனது பாணியில் பதில் தந்தார். அதுவே அவரது உள்ளக்கிடக்கையாகவும் இருந்தது. அந்தப் பேர்பெற்ற வாசகம் தான் ''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என்பதாகும். இச்சிங்கள பௌத்த பேரினவாத முதலாளித்துவ மகுட வாசகத்தின் கீழ்தான் அன்றிலிருந்து முப்பத்திரண்டு வருடங்களாக போரும் போராட்டமும் இருந்து வந்துள்ளது என்பது மீட்டுப் பார்க்க வேண்டிய தொன்றாகும்.

1977ம் ஆண்டு தேர்தலின் போது ஜே.ஆர். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற பொத்தாம் பொதுவான வாக்குறுதி வழங்கி கொழும்பு, மலையகம், கிழக்கின் தமிழ் வாக்குகளைப் பெற்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் இயல்பான நேச சக்தியாகிய மேட்டுக்குடி உயர் வர்க்கத் தமிழர்கள் ஜே.ஆரின் காலடியில் இருந்து வந்தனர். அது இன உறவுக்கு அப்பாலான வர்க்க உறவின் பாற்பட்டதேயாகும். ஜே.ஆர். தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி சிங்கள உழைக்கும் மக்களுக்கும் அவர்களது வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு முடிவு கொண்டு வருவதாகவும் எட்டு இறாத்தல் உணவு தருவதாகவும் வாக்குறுதி தந்தார். ஆனால் பதவிக்கு வந்ததும் எவ்வித வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியவில்லை. இதில் இன ரீதியில் தமிழர்களும் வர்க்க ரீதியில் சிங்களவர்களும் ஏமாற்றப்பட்டனர் என்பதற்கு மேலாக ஒன்றுமில்லை. இதனை அவரது ஆட்சிக்காலத்திலும் அவரைத் தொடர்ந்தவர்களின் ஆட்சிகளின் போதும் காணமுடிந்தது.

1977ல் ஆறில் ஐந்து பாராளுமன்றப் பெருபான்மையுடன் பிரதமராகிக் கொண்ட ஜே.ஆர். ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றும் ஒன்றைத் தவிரத் தன்னால் சகலவற்றையும் செய்ய முடியும் என்ற அகங்காரத் தொனியில் கூறிக் கொண்டார். இவ்வாறு கூறும் போது அவரது பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை வாங்கித் தனது கையில் வைத்திருந்தார் என்பது நினைவு கூரத்தக்கதாகும். அதன் பின் அவர் அரசியல் அமைப்பை மாற்றினார். அதன் போதே கேடும் கேவலமும் கொண்ட ஜனநாயக விரோதம் நிறைந்த நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை புதிய அரசியல் அமைப்பு நிறைவேற்றல் மூலம் நடைமுறைக்கு வந்தது. அதனால் அவர் தன்னைத் தானே ஜனாதிபதியாக நியமித்தும் கொண்டார். இந்த அரசியல் அமைப்பும் அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையும் மேற்கிலிருந்து குறிப்பாக பிரான்சின் அரசியல் அமைப்பை ஒத்ததாக விளங்கியது. இத்தகைய அரசியல் அமைப்பு முறைமையினை வரைவதில் தமிழரசுத் தந்தை என்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் மருமகனும் கனடாவாசியுமான பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் முக்கிய பாத்திரம் வகித்தார். இது இன உறவுகடந்த வர்க்க உறவைச் சுட்டி நின்றது. இதன் ஊடாகத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகளின் மேட்டுக்குடி வர்க்க உறவானது எவ்வாறு தெற்குடன் இணைந்த தொன்றாக இருந்து வந்தது என்பதை விளங்கிக் கொள்ள இயலும். இவ்வாறு ஜே.ஆர். கொண்டுவந்த புதிய அரசியலமைப்பானது தூரநோக்குடனான ஆளும் வர்க்கப் பிடியை இலங்கை மக்கள் மீது திணித்து இறுக்கும் தன்மை கொண்டதாக இருந்தது. அதே வேளை, நிறைவேற்று அதிகாரத்தைத் தனிமனித விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறு பயன்படுத்த அவ்வரசியலமைப்பு வழிவகுத்தது. 1978ம் ஆண்டு பெப்ரெவரி மாதம் 14ஆந் திகதி ஜே.ஆர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தன்னைத் தானே நியமித்து பதவியேற்றார். அன்றிலிருந்து இன்று வரை, அத்தகைய ஜனாதிபதியின் சர்வாதிகாரப் பிடியில் இருந்து நாடு விடுபட முடியாததாகவே இருந்து வருகிறது.

தமிழ் விடுதலைக் கூட்டணி பாராளும்ன்றத்தில் 18 உறுப்பினர்களை வைத்துக் கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்துக் கொண்ட போதிலும் அவர்களால் எதுவும் செய்ய முடியாத கையறு நிலையிலேயே இருந்து வந்தனர். வடக்குக்-கிழக்கில் தமிழீழக் கோரிக்கையின் உணர்ச்சி அதிகரிப்பால் கூட்டமைப்பு வாக்கு வங்கியைப் பெருக்கி வைத்திருக்க முடிந்ததே தவிர அக் கோரிக்கையின் பிரதிபலிப்புகள் தெற்கிலும் பாராளுமன்றத்திலும்

→ பக் 9

# வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை

பாதகமான சூழலையே வளர்த்து வந்தன.

இவற்றின் மத்தியில், ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகளை ஆங்காங்கே விரிவுபடுத்துவதில் தமிழ் இளைஞர்கள் முனைப்புக் காட்டி வந்தனர். தமிழ் இளைஞர்கள் இளைஞர் பேரவைக்கு ஊடாகவும் அதற்கு அப்பாலும் பல்வேறு வழிகளில் ஆயுதங்களைச் சிறு அளவில் சேகரிக்கவும் கையாளவும் செய்தனர். இதில் வே. பிரபாகரன், உமா மகேஸ்வரன், குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் ஒன்றாகவும் பின்பு தனித்தனியாகவும் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்திற்கு அணிதிரட்டும் நோக்கத்துடன் தீவிரமாகச் செயற்பட்டு வந்தனர். தனி நபர் கொலைகளிலும் கொள்ளை முயற்சிகளிலும் ஈடுபடலாயினர். இவற்றை ஒழுங்கு படுத்தப்பட்ட முறையான அமைப்பு வாயிலாக முன்னெடுப் பதைவிட சுத்த இராணுவக் கண்ணோட்டத்து டனேயே முன்னகர்த்திச் சென்றனர். தமிழீழத்தை வென்றெடுப்பதற்கு ஆயுத நடவடிக்கையைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவின் அடிப்படையிலேயே இவர்கள் செயற்பட்டனராயினும் அவர்களிடையே முரண்பாடுகளும் குரோதங்களும் இருந்தன. அதனால் ஒருவரையொருவர் தீர்த்துக் கட்டிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. இவற்றை யெல்லாம் கூட்டணி தலைமை வெறுமனே பார்த் திருக்க முடிந்ததே தவிரத் தூரநோக்கிலான எத்தகைய வழிகாட்டலையும் வழங்கக் கூடிய நிலையில் இருக்க வில்லை.

இத்தகைய இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளின் செயற்பாடு அதிகரித்ததனால், சில தமிழ்ப் பொலிசாரும் இரகசிய பொலிசாரும் இத் தீவிரவாத இளைஞர்களை வேட்டையாடுவதில் மும்முரம் காட்டினர். அரசு யந்திரத்திற்கு இன மத மொழி மதச்சார்பு என்பவற்றுக்கு அப்பால் சொத்துடைய உயர் வர்க்க சக்திகளையும் ஆளும் வர்க்கத்தினரையும் பாதுகாப்பதே அடிப்படையானதாக இருந்தது. அதனால் தமிழ்ப் பொலிசார் இத் தமிழ் இளைஞர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது என்ற பெயரில் தீவிரமாகச் செயற்பட்டனர். அதில் பஸ்தியாம்பிள்ளை என்ற இரகசியப் பொலிஸ் அதிகாரியின் தலைமையிலான இரகசியப் பொலிசார் புலிவேட்டையில் இறங்கினர். இதில் இவர்கள் மும்முரம் காட்டி வந்த சூழலிலேயே 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பஸ்தியாம்பிள்ளையும் அவருடனான இரண்டு பொலிசாரும் புலிகள் இயக்கத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களால் கொல்லப்பட்டனர். இந் நிகழ்வு ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்குப் பெரும் சவால் ஆகியது. அரசாங்கம் 1979ம் ஆண்டு 48ம் இலக்கத்தின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது. ஜே.ஆரின் அரசாங்கம் பதவிக்கு வந்த இரண்டு ஆண்டுகட்கிடையில் கொண்டு வரப்பட்ட இப் பயங்கரவாத தடைச்சட்டம் (P.T.A.) என்பது மிகக் கொடூரமான சட்டமாக இன்று வரை நீடித்து வருகின்றது. இச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்படும் ஒருவரை விசாரணையின்றி ஒன்றரை வருடங்களுக்குப் (18 மாதங்கள்) பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுப்படி தடுத்து வைத்திருக்கவும், பொலிசாரின் பாதுகாப்பில் வைத்து தொடர்ந்து விசாரிக்கவும் முடியும். எந்த நீதிமன்றமும் அதைக் கேள்விக்கு உட்படுத்தவோ அதிற் தலையிடவோ முடியாது. மேலும் அதன் கீழ்க் கைதான ஒருவர் வாக்கு மூலம் வழங்கும் போதோ அவரை நிர்ப்பந்தித்து வாக்குமூலம் பெறும் போதோ அதனை முக்கிய சாட்சியமாக நீதிமன்றத்தில் கொள்ளக் கூடியவாறும் மேற்படி சட்டம் வரையப்பட்டது. அதன் நிறைவேற்றத்தை மனித உரிமை ஆர்வலர்களும் ஜனநாயகவாதிகளும் இடதுசாரியினரும் முற்போக்காளர்களும் வன்மையாக எதிர்த்த போதிலும் அவை எதுவும் காதுகளில் வாங்கப்படவில்லை. இதில் உள்ள முரண்நகை யாதெனில் தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளை அடக்குவதற்கு தற்காலிகமாகக் கொண்டுவரப்படுவதாகவே இச் சட்டத்திற்கு ஜே.ஆர். வியாக்கியானம் அளித்திருந்த போதும் விரைவாகவே அச் சட்டம் தமிழ் மக்களையும் கடந்து பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர் யுவதிகளையும் சாதாரண சிங்கள மக்களையும் வேட்டையாடிக் கொண்டது. இன்றும் இக் கொடிய சட்டத்தின் கீழ்த் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் நீண்டகாலமாக விசாரணையின்றி இருந்து வருகின்றமை இவ் வேளை நினைவுகூர வேண்டியதாகும்.


இப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் 1979ம் ஆண்டு யூலை 11ஆந் திகதி முதல் வடக்கில் அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அப் பிரகடனம் செய்யப்பட்ட மூன்றாவது நாளான யூலை 14ந் திகதி வடபகுதிக்கான ராணுவப் பொலிஸ் கூட்டுப்படைத் திட்டத்தின் கீழ் விசேட படையணி அமைக்கப்பட்டது. அதன் தலைமைப் பதவி ஜே.ஆருக்கு மருமகன் முறையான பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்க என்ற ஒரு உயர் இராணுவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்த வேளை "சென்று வா வென்று வா" என ஜே.ஆர் வாழ்த்தி அனுப்பினார். அதனைத் தொடர்ந்து இளைஞர், யுவதிகளைத் தேடிப் பிடித்து கொல்லும் செயற்பாடும் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்வதும் வேகம் பெற்றன. தீவிரவாத இளைஞர்களான இன்பம், செல்வரத்தினம் ஆகிய இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டுச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுக் கொல்லப்பட்டு பண்ணைக் கடலுக்கு அப்பாலான பகுதியில் வீசப்பட்டமை அதன் முதல் நடவடிக்கையாகவும் வட பகுதியின் அதிர்ச்சி தரும் முதலாவது இளைஞர் கொலைச் சம்பவமாகவும் அமைந்தது. அதனைச் செய்தவர்கள் இராணுவம், பொலிசைச் சேர்ந்தவர்களை விட வேறெவரும் அல்லர் என்பதை மக்கள் அறிந்திருந்தனர். அதனால் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பும் ஆத்திரமும் மேல் எழுந்து இருந்தன. அதனைத் தமிழ் இளைஞர்கள் தமது ஆயுத நடவடிக்கைக்கான நியாயமாக்கவும் போராட்டத்தின் அவசியத்தையும் வற்புறுத்திக் கொள்வதற்கும் தகுந்த ஏதுவாக்கிக் கொண்டனர்.

இவ்வாறான ராணுவ ஒடுக்குமுறை வடக்கில் அப்பட்டமாகவே ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கவே செய்யும் எங்கு போராட்டம் உண்டோ அங்கு தியாகங்களும் இருந்தே தீரும். ஆனால் அனாவசியமான தியாகங்களை தவிர்த்துக் கொள்ளவேண்டும்' என்பது மாவோவின் வழிகாட்டல் அறிவுரை. இத்தகைய ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட போராட்ட வழிகாட்டல் தமிழ் இளைஞர்களுக்கு இருக்கவில்லை. முற்றிலும் சிறு முதலாளித்துவ தலைமையிலான இராணுவக் கண்ணோட்டம் நிறைந்த போக்குகளாகவே விடயங்கள் விருத்தி பெற்றுச் சென்றன. சுருங்கக் கூறின், இராணுவ அடக்குமுறை போராட்டத்திற்கு உந்துதல் கொடுத்தது. ஆனால் போராட்டம் தவறான தலைமைகளின் கைகளுக்குச் சென்று திசையற்றுப் பயணிக்க ஆரம்பித்தது.

இத்தகைய சூழலில், 1979ம் ஆண்டில் அதே ஜே.ஆர். அரசாங்கத்தின் கீழ் இரண்டாவது தடவையாக இன வன்முறை ஏவப்பட்டு ஆங்காங்கே தமிழர்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். பல வர்த்தக நிலையங்களும் வியாபாரக் கடைகளும் எரிக்கப்பட்டன. இவ் இன வன்முறையில் கூடுதலாக மலையகத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டனர். இரத்தினபுரி மாவட்டத்தில் சிங்கள இனவெறிக் காடையர்களால் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களையும் தோட்ட லயன்களையும் பார்வையிட ஜனாதிபதி ஜே.ஆர். சென்றிருந்தார் அப்போது தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அட்டூழியங்களையும் தொழிலாளர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டனர். அவ் வேளை ஒரு நாட்டின் ஜனாதிபதி என்பவர் நடந்து கொள்ளும் குறைந்தபட்சப் பண்புடனோ அன்றி மனிதாபிமானத்துடனோ நடந்து கொள்ளாது மிகத் தாழ்ந்த இனவாதியாகவே அன்று தொழிலாளர்களுடன் ஜே.ஆர்.உரையாடினார். ''இப்போது தெரிகிறதா தமிழீழம்? கோழி தருவோம் முட்டை தருவோம் தமிழீழம் மட்டும் தரமாட்டோம். விளங்குகிறதா?'' என ஜே.ஆர். பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்து கிண்டலாகவும் நக்கலாகவும் கேட்டவைகள் மறக்க முடியாதவையாகும். யாழ்ப்பாணத்தை அறியாத சாதாரண தோட்டத் தொழிலாளர்களைத் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இன வன்முறைகளுக்கு உள்ளாக்கி அவர்களது லயன்களை எரித்த சிங்களக் காடையர்களின் ஈனச் செயலுக்கு ஜே.ஆரின் பேச்சு மேலும் இனவெறி உந்துதல் உணர்வையே ஏற்றி நின்றது. ஆனால் இத்தகைய ஜே.ஆரையே ஜனநாயகத் தலைவராக ஏற்று சௌமியமூர்த்தி தொண்டமான் அவ் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக இருந்து வந்தார். இவ் அமைச்சர் பதவியானது ஐக்கிய தேசியக் கட்சியின் (1977-1994) இருண்ட காலம் முழுவதிலும் இ.தொ.காவின் வசம் இருந்து வந்ததாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் 18 ஆசனங்களுடனும் எதிர்க் கட்சித் தலைவர் பதவியுடனும் இருந்தமையால் ஏதாவது வகையில் பேச்சுவார்த்தை நடத்திக் குறைந்தபட்சமாக எதையேனும் ஒன்றைப் பெற்று தமிழ் மக்களையும் தமிழ் இளைஞர்களையும் தாக்காட்டலாம் என்ற நம்பிக்கையுடனேயே இருந்து வந்தது. ஆனால் ஜே.ஆரினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் முழுக் கவனமும் எவ்வாறு தமிழீழக் கோரிக்கையை இல்லாமல் செய்யலாம் என்பதிலேயே இருந்து வந்தது. வடக்கு-கிழக்குக்கு வெளியே தமிழீழக் கோரிக்கையை அடக்கி வாசித்த தமிழர் கூட்டணி, வடக்குக் கிழக்கில் அதை நீட்டி முழக்கி வந்தது. வருடாவருடம் இடம்பெறும் மே தினத்தின் போது, குறிப்பாகத் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் உரத்துப் பேசும் போது, ''அடுத்த மே தினம் தமிழீழத்தில் தான் நடைபெறும்'' எனச் சூளுரைத்த சந்தர்ப்பங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்தன. அவை வெறும் பேச்சாகவே தொடர்ந்தன.

அதே வேளை, தமிழீழம் என்பது, அதிகபட்சம் கேட்டு குறைந்தபட்சமாவது பெறும் ஒருவகைத் தந்திரோபாயம் எனக் கூட்டணித் தலைமை ஒருவகையான வியாக்கியானத்தைக் கொடுக்க ஆரம்பித்தது. அதன் அடிப்படையில் இரு தமிழ் விற்பன்னர்கள் சேர்ந்து ஜே.ஆரிடம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பெற்றுக் கொள்ள பெருமுயற்சி செய்தனர். ஒருவர் ஜே.ஆருக்கு மிக நெருக்கமானவரும் ஏற்கனவே ஜே.ஆரின் அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கு உதவி புரிந்தவரும் கனடா வாழ் மேட்டுக்குடித் தமிழருமான ஏ.ஜே. வில்சன. மற்றவர் முன்னர் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியாக டட்லி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த மு. திருச்செல்வத்தின் மகனான நீலன் திருச்செல்வம். தமிழர் கூட்டணிக்கும் ஜே.ஆருக்குமிடையில் இவர்கள் அரசியல் தரகர்களாகச் செயற்பட்டே மாவட்ட சபைகள் அமைக்கவும் அவற்றுக்கு அற்ப சலுகை அதிகாரங்கள் கொடுக்கவும் இணக்கங் காணப்பட்டது. தமிழீழம் முடிந்த முடிவெனக் கோலாகலமாகத் வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர், அதிகாரம் எதுவுமற்ற, மாவட்டத்தின் அபிவிருத்திக்கான மாவட்ட சபைகளுக்கு இணங்கும் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இம் மாவட்ட சபைத் தீர்வுத்திட்ட நடைமுறையினை தமிழ் இளைஞர் போராட்ட அமைப்புகள் நிராகரித்தன. அதற்காக இடம்பெற்ற தேர்தலை முற்றாகப் பகிஷ்கரிக்குமாறு வேண்டினர். தேர்தலுக்கு முன்பாக நடைபெற்ற கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் துப்பாக்கித் தாக்குதல்



நடாத்தப்பட்டது. 1981இல் நடந்த இம்மாவட்ட சபைத் தேர்தலிலும் ஆங்காங்கே துப்பாக்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன. இவற்றில் பொலிசார் உட்படச் சிலர் கொல்லப்பட்டனர். இத் தேர்தலின்போதே கள்ள வாக்குப் பெட்டி மாற்றும் முறை யூ.என்.பியால் பரீட்சிக்கப்பட்டது. இதற்கு காமினி திஸாநாயக்கா தலைமையில் முக்கிய பிரமுகர்கள் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் குழு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வாக்கு மோசடிகளில் ஈடுபட்டதுடன் அதனைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாகவும் இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. 1.6.1981இல் புகழ் பெற்ற யாழ்ப்பாணம் நூலகம் 96,000 நூல்களுடன் எரித்து சாம்பலாக்கப்பட்டது. இந்தப் படுபாதகச் செயலை ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டத்தவர்களே முன்னின்று வழிகாட்டினர் என்பது பகிரங்க இரகசியமாகும். இதில் மற்றொரு சுவவாரசியம் யாதெனில் இவ் வன்முறைக்கும் நூலக எரியூட்டலுக்கும் யாழ் நகரில் தங்கியிருந்து வழிகாட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் மற்றும் உயர் பிரமுகர்களிடையே தமிழ்ப் பிரமுகர்களும் இருந்தமை தான். இவ்விடத்திலே, இனமல்ல வர்க்கமே முதன்மையானதாக உள்ளது என்பது துலக்கம் பெற்றுக் காணப்படுகின்றமை நோக்குதற்குரியதாகும்.

இன முரண்பாடும் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையும் முன் தள்ளப்பட்டு வந்த சூழலிலேயே இலங்கையில் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழான தாராளமயமும் தனியார்மயமும் இலங்கைக்குள் இழுத்து வரப்பட்டன. தேசிய இனப் பிரச்சினை பூதாகரமாக்கப்பட்டதன் மறைவில் ஏகாதிபத்திய உலகமயமாக்கல் இலங்கையில் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. அதற்கு ஜே.ஆர். செங்கம்பள வரவேற்புக் கொடுத்து நின்றார். இச் சர்வதேச பொருளதார ஊடுருவல்கள் பற்றி தமிழர் கூட்டணியோ அன்றி ஏனைய ஆளும் வர்க்கத் தரப்புகளோ எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில லை. நவகொலனியத்திற்குள் நாட்டை அமித்தும் திட்டம் இன மத மொழி பேதமற்று அனைத்து இன மேட்டுக்குடி உயர்வர்க்க சக்திகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மக்களிடமிருந்து இந் நிகழ்ச்சி நிரலை மறைக்கவேயுத்தம் தீவிரமாக்கப்பட்டது.

அது பற்றி அடுத்த பகுதியில் பார்ப்போம்.

- வளரும் -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

**இமயவரம்பன் 24**

# மொழி அரசியலாகிறது

1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக்கப் படவேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றது. அது வடக்கு கிழக்கின் தமிழ் மக்களிடையே தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சிக்கு முக்கியமான காரணமானது. தென்னிலங்கையில் அதுவே பிரதான தேர்தல் கோரிக்கையாக இல்லாத போதும், அதற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் சிங்கள முதலாளி வர்க்கம் கடைப்பிடித்து வந்த பேரினவாத நடைமுறையைப் பாராளுமன்றத் தேர்தல் மூலமாக மேலும் வளர்த்தெடுக்க வழி செய்தது.

1953ம் ஆண்டு ஹர்த்தாலின் பின்பு, அப் போராட்டம் மக்கள் அரசியலை வளர்த்தெடுக்கத் தவறிய ஒரு பின்னணியிலே, மொழிப் பிரச்சினை உண்மையான சமூகத் தேவையிலிருந்தும் விலகி முற்போக்கான திசையிலான முன்னெடுப்பைத் தவிர்த்துத் தேசிய இனப் பிரச்சினையின் வடிவை எடுத்தது. இது தற்செயலானதல்ல. ஆங்கில த்தையே தனது அன்றாட வாழ்விலும் பொது வாழ்விலும் பயன்படுத்தி வந்த பண்டாரநாயக்கவின் சிங்களப் புலமை மிகக் குறைவானது. சிங்களத்தில் அரச கருமங்களையோ தனது தொழிலையோ முன்னெடுக்க இயலாத பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக வேண் டும் என்பதிற் தீவிரமுடையவரானதற்கான பிரதான காரணம் அரசியற் சந்தர்ப்பவாதமே. அவர் சார்ந்த தேசிய முதலாளி வர்க்க நலன்களுக்கு அது பெருமளவில் நேர டியாக உதவாவிட்டாலும் யூ.என்.பியை அண்டியிருந்த தரகு முதலாளியத்தினின்று தன்னை வேறுபடுத்திக் காட்ட அது பயன்பட்டது. ஹர்த்தாலின் பின்பு புத்துணர்ச்சி பெற்ற ஒரு நடுத்தர வர்க்கத்திற்கு அது ஒரு ஊக்க மருந்தாகியது. எனினும் சிங்களம் மட்டுமே என்ற கருத்தின் மூலவர் பண்டாரநாயக்க அல்ல என்பது இங்கு கவனிக்க உகந்தது. அச் சிந்தனை நேரடியான கொலனி ஆட்சியினின்று சுதந்திரம் கிடைக்க முன்பே அரச சபையில் (ஸ்றேற் கவுன்சில்) முன்வைக்கப் பட்டுச் சமரசம் காணப்பட்ட விடயமாகும். எனினும், இலவசக் கல்வியும் தாய்மொழிக் கல்வியும் கல்வியறிவைப் பரவலாக்கிய சூழ்நிலையில், கல்வியறிவு பெற்ற ஒரு சிங்கள நடுத்தர வர்க்கம் அரசாங்க உத்தியோகங்களில் தமிழரின் விகிதாசாரம் தமிழரின் சனத்தொகைக்குரியதை விடச் சில மடங்காவது அதிகமாக இருந்ததைப் பற்றி அறிந்திருந்ததுடன் அவ் வேலைவாய்ப்புக்களைத் தனதாக்கிக் கொள்ளும் ஒரு வாய்ப்பைத் தவறவிடாத மன நிலையிலும் இருந்தது.

அதைவிட, ஆங்கில மூலம் கல்வி கற்ற அரச மருத்துவ சேவையாளர்களிடையே தமிழர் கணிசமான எண்ணிக்கையில் இருந்தனர். சிங்கள நாட்டு வைத்தியத்திற்கு (ஆயுர்வேதம்) இல்லாத அரச அங்கீகாரம் மேலைநாட்டு மருத்துவத்துக்கு இருந்த சூழ்நிலையில், பொருளாதாரத்திலும் சமூக அங்கீகாரத்திலும் பின் தள்ளப்பட்டு வந்த சிங்கள நாட்டு வைத்தியர்கட்கு ஆங்கில வைத்தியத்தின் மீதிருந்த பகைமை ஆங்கிலத்தின் மீதும் இருந்தது. தமிழ் மருத்துவர்களும் மருத்துவ சேவையாளர்களும் கணிசமான அளவிற் தமது சூழலிற் காணப்பட்ட போது, அப் பகைமை, தமிழர் மீதான ஒரு பகைமை கலந்த போட்டியாகவும் வடிவெடுத்தது.

சிங்கள பௌத்தச் சிந்தனையில் ஊறிப்போன புத்த பிக்குகளிற் பெரும்பாலானோரையும் ஆயுர்வேத வைத்தியர்களையும் சிங்கள மொழிப்புலமையுடைய ஆசிரியர்களையும் தன் பின்னால் திரட்டச் சிங்களம் மட்டுமே கொள்கை உதவும் என்பதனாலேயே பண்டாரநாயக்க யூ.என்.பி. மீதான கசப்புணர்வு தொழிலாளி வர்க்கத் தலைமையில் உழைக்கும் வர்க்கங்களின் போராட்டமாகத் திரும்பாமலே தனது வேலைத்திட்டத்தை வகுத்தார். ''நடுவழி'' என அவர் சொன்ன கொள்கைக்குப் பலவாறான அரசியற் கருத்துக்களைக் கொள்ள முடிந்தது. புத்தரின் ''நடுவழி'' என்ற பற்றின்மை சார்ந்த கொள்கையாகவும் இடதுசாரி வலதுசாரி என்ற ''தீவிர'' அந்தங்கள் சாராத ஒரு அரசியற் பாதையாகவும் சர்வதேச அரங்கில் அணி சேராமையாகவும் கூட அதைப் பொருள் கொள்ள முடிந்தது.

சிங்களம் மட்டுமே என்ற யோசனையை முதன்முதலாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிரேரித்த பெருமைக்கு உரிமை கொண்டாடினோரில் பதியுத்தின் மஹ்மூதும் ஒருவர். சிங்களம் மட்டுமே என்பதற்குச் சிங்கள நடுத்தர வர்க்கத்தினரிடையே ஒரு அரசியற் கவர்ச்சி உருவாகும் என்பது இரண்டு சிங்களப் பேரினவாதக் கட்சிகளாலும் உணரப்பட்டு விட்டது. அதை விடவும் ட்ரொட்ஸ்கியத்தின் பிதாவான பிலிப் குணவர்தன சிங்களமே அரச கரும மொழியாகவும் தமிழ் வட, கீழ் மாகாணங்களில் பிரதேச மொழியாகவும் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை 1955 மாச் அளவில் தெரிவித்தார். இதை வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சி. சுந்தரலிங்கத்தின் நிலைப்பாட்டுடன் ஒப்பிடுவது பயனுள்ளது. 1955ம் ஆண்டு கொத்தலாவல தலைமையிலான அரசா ங்கம் தாய்மொழிச் கல்வியைப் பாடசாலைகளில் கட்டாயப் படுத்துமாறும் எதிர் காலத்தில் அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் சிங்களத்திலும் தமிழிலும் நடத்தப்படும் என்றும் தனது கொள்கையை அறிவித்த போது அரச அலுவல்கட்கும் உயர் கல்விக்கும் தாய் மொழியைப் பயன்படுத்துவது நாட்டைப் பிளவு படுத்தும் என்று சொல்லுமளவுக்கு அவரது ஆங்கில விசுவாசம் இருந்தது. அதன் பின்பு, தான் பாராளுமன்றத்தை மூன்று மாதங்கட்குப் பகிஷ்கரித்துப் பதவி இழக்கப் போவதாக அறிவித்து அவ்வாறே செய்தார். அதற்குத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தினதும் தமிழரசுக்கட்சித் தலைவர் வன்னியசிங்கத்தினதும் ஆதரவைப் பெற்றதாயும் அவர் குறிப்பிட்டார். பொன்னம்பலம் கொத்தலாவல அமைச்சரவையில் இடம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிங்களமோ தமிழோ நாட்டின் நிருவாக மொழிகளாவதை விரும்பாத தமிழ்த் தலைமைகளே நமக்குக் கிடைத்திருந்தன என்பதையே மேற் கூறிய விடயம் நினைவூட்டுகிறது. கொத்தலாவலவுடைய இனவாத நோக்கங்களை அடையாளங் காட்டி அம்பலப் படுத்தித் தமிழ் மக்களின் மொழியுரிமையை உறுதிப்படுத்துகிற விதமான முயற்சிகளில் அக்கறை காட்ட அவர்கள் முயலவில்லை.

அதே வேளை, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் 1955ம் ஆண்டில் புத்த சமயத்திற்கு அரசாங்கம் துரோகம் செய்வதாக ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது. ஆங்கிலத்தில் அதன் சுருக்கிய வடிவம் 1956 சுதந்திர தினத்தன்று வெளியானது. இவ்வாறு பல திசைகளிலும் சிங்கள பௌத்த அரசியல் உணர்வு அரசாங்க எதிர்ப்புணர்வுடன் இணைந்த சூழ்நிலையில் 1955 செப்ற்ரெம்பரில் யாழ்ப்பாணத்திற்குச் சென்ற கொத்த லாவல, அங்கு பெற்ற அமோக வரவேற்பினிடையே,

> **1953ன் ஹர்த்தால் போராட்டத்தை உரியவாறு வளர்த்தெடுக்காத இடதுசாரிகளின் பலவீனத்தை பண்டாரநாயக்கா 1956ல் தேசிய முதலாளித்துவமாக வளர்த்து வெற்றியும் கண்டார்.**

யூ.என்.பியின் பிரகடனஞ் செய்யப்பட்ட கொள்கைப்படி சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துடைய அரச கரும மொழிக ளாக்கப்படும் என்று உறுதி கூறினார்.

கொத்தலாவல தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து என்று கூறியது தென்னிலங்கையில் இனவாதிகளிடையே கொதிப்பைக் கிளப்பியது. சம அந்தஸ்து வழங்கினால் சிங்கள இன அடையாளமே அழிந்து விடும் என்று பிரசாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதற்கு ஊடகங்களும் ஒத்தூதின. 1953 வரை தெளிவானதொரு மொழிக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 1955ம் ஆண்டு சிங்களமே அரச கரும மொழி என்றும் நியாயமான தமிழ்ப் பயன்பாடும் என்ற கொள்கையை அறிவித்தது.

ஒக்றோபரில் சமசமாஜக்கட்சித் தலைவர் என்.எம். பெரேரா, சிங்களமும் தமிழும் அரச மொழிகளாகுமாறு அரசியல் யாப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என முன்வைத்த பிரேரணைக்கு ஒரு திருத்தப் பிரேரணையாகச் சிங்களத்தையே அரச மொழியாக்கும்படி அரசியல் யாப்பு உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை பண்டாரநாயக்க முன்மொழிந்தார். அந்த விவாதம் நீண்டு, அதன் பயனாக, என்.எம். பெரேராவின் பிரேரணை காலங் கடந்ததாகிக் கைவிடப்பட்டது.

1956 பெப்ரவரியில் யூ.என்.பியின் களனி மாநாட்டில் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாகும் என்ற பிரேரணையைக் கொத்தலாவல முன்வைத்தார். அது ஏற்கப்பட்டதை அடுத்து யூ.என்.பியில் இணைந்திருந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அக் கட்சியிலிருந்து விலகினர். சு. நடேசபிள்ளை தனது அமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

சிங்களம் மட்டுமே கொள்கையை அறிவித்த கொத்தலாவல அதைத் தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தும் நோக்குடன் 1957ம் ஆண்டு ஜூனில் நடக்கவிருந்த பாராளுமன்றத் தேர்தலை ஒரு வருடம் முன்னரே நடத்த முடிவு செய்தார். யூ.என்.பி சிங்களம் மட்டுமே என்ற கொள்கையை முன்வைத்துப் பிரசாரத்தை முன்னெடுப்பதை மேவுகிற விதமாக, ஆட்சிக்கு வந்து 24 மணி நேரத்தில் சிங்களமே நாட்டின் அரசகரும மொழியாக்கப்படும் என்று பண்டாரநாயக்க தனது பிரசாரத்தை முன்னெடுத்தார்.

யூ.என்.பி. போட்ட கணக்குக்கள் ஒன்றுக்குப் பல விதங்களில் தவறாகிப் போயின பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஃபிலிப் குணவர்தனவின் புரட்சிகர லங்கா சமசமாஜக் கட்சியுடனும் பல்வேறு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் கூட்டமைத்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கியதும் அதன் வேலைத் திட்டத்தில் சிங்களம் மட்டுமே என்பதை விட பண்டாரநாயக்க பிரகடனப்படுத்திய ஐம் பெருஞ் சக்திகளாக விவசாயிகள் தொழிலாளர் புத்த பிக்குக்கள் சிங்கள ஆசிரியர்கள் சிங்கள நாட்டு வைத்தியர்கள் இருந்தாலும், தேசிய முதலாளிய நோக்கங்களே முக்கியமானவையாக இருந்தன. ஸ்ரீ.ல.சு.க. சிங்களம் மட்டுமே கொள்கையை அறிவித்ததையடுத்து அதிலிருந்த தமிழ்ப் பிரமுகர்கள் விலகினர். எனவே ஒரு விதத்தில் இரண்டு சிங்களப் பேரினவாத அணிகட்கு இடையிலான மோதலாகவே 1956ம் ஆண்டுத் தேர்தல் அமைந்தது.

எனினும் இரண்டு அணிகளும் சிங்கள முதலாளி வர்க்கத்தன் இரண்டு வேறுபட்ட போக்குக்களை அடையாளப்படுத்தின. யூ.என்.பி. மேலை நாட்டு நவகொலனிய எசமான்களை அனுசரித்து அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட விதமாக இலங்கையை வைத்துக் கொண்டு அவர்களது தயவில் தம்மை வளர்த்துக் கொள்ள முற்பட்ட முதலாளிய வர்க்கப்பிரிவொன்றின் நலன்களையும் இறுகிப்போன பழமைவாத நிலப்பிரபு மேட்டுக்குடிகளின் நலன்களையும் அடையாளப் படுத்தியது. மக்கள் ஐக்கிய முன்னணி நவகொலனிய ஆதிக்கத்தினின்று தன்னை விடுவித்துக் கொண்டு சுதேசிய பொருளாதாரம் ஒன்றைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கட்டியெழுப்ப முற்பட்ட முதலாளி வர்க்கப் பிரிவு ஒன்றினதும் நடுத்தர வர்க்கத்தினரிடையே நவகொலனிய விரோதப் போக்குடையவர்களதும் நலன்களை முன்னிறுத்தியது. நிலப்பிரபுப் பின்னணியிலிருந்து வந்த போதும் யூ.என்.பியுடன் முரண்பட்ட சிலரும் பண்டாரநாயக்கவுடன் நின்றார்கள்.

பிரதான எதிரியான யூ.என்.பியை முறியடிக்கும் தேவை கருதிச் சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ற் கட்சியும் ம.ஜ.முவுடன் மோதல் தவிர்ப்பைக் குறைத்துக் கொள்ளும் விதமாகத் தமது தேர்தல் பங்குபற்றலை அமைத்துக் கொண்டன.


தேர்தலை, இடைவெளி விட்டு, ஏப்ரல் 5, 7, 10 ஆகிய மூன்று நாட்களில் நடத்தவும் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிவிக்கவும் யூ.என்.பி அரசாங்கம் திட்டமிட்டது. அதன்படி முதல் நாளில் யூ.என்.பிக்கு வெற்றி உறுதி எனக் கருதப்பட்ட நாளில் நடத்தப்பட்டது. அந்த முடிவுகளின் விளைவாக அடுத்த இரண்டு நாட்களிலுமான தேர்தல்களில் வாக்காளர்கள் யூ.என்.பியின் பக்கம் திரும்புவர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்தக் கணக்கும் பிழையாகிவிட்டது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மறைந்த ம.ம.மு. தலைவர் சந்திரசேகரன் பற்றிய ஒரு குறிப்பு



கொலனிய வரலாற்றால் வஞ்சிக்கப்பட்ட மக்கள் மலையகத் தமிழ் மக்கள். அடிமைப்படுத்தப்பட்டு சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டு இன்று வரை அவற்றிலிருந்து மீள முடியாத நிலையில் இருந்து வருபவர்கள். அவர்கள் மத்தியில் இருந்து தம்மை மீட்பர்கள் எனக் கூறி தொழிற்சங்க அரசியல் தலைவர்கள் அவ்வப்போது தோன்றி மறைந் திருக்கிறார்கள். இத்தகையோர் மலையக மக்க ளிடையே தொழிற் சங்க பாராளுமன்ற அரசியல் தளங்களில் தம்மை நிலை நிறுத்தி உரிமைகளுக் குக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறி வந்த வரலாறு தொடர்ச்சியானதாகும். இவர்களின் தொடக்கம் மக்கள் சார்பானதாவும் முடிவு மக்களுக்கு எதிரானதாகவும் இருந்து வந்திருப்பதை மலையக தொழிற்சங்க அரசியல் வரலாற்றுக் குறிப்புகள் எடுத்தியம்பும்.

அத்தகைய தலைவர்களில் ஒருவராகவே அண்மையில் இறப்புக்குள்ளாகிய பெரியசாமி சந்திரசேகரனையும் கண்டு கொள்ளலாம். அவர் கடுமையான நோய் கண்டு இறக்க வேண்டிய சூழலும் கூட அவரது பிற்கால வசதிவாய்ப்பினால் வரவழைத்துக் கொண்ட நோய் என்ற பொதுவான கருத்து மலையகத்தில் பேசப்படுகிறது. காரணம் அவர் இறக்கும் போது வயது 53 ஆகும். ஒரு ஒடுக்கு முறை சமூக அமைப்பில் ஒடுக்கு முறைகளுக்கு உள்ளான மக்கள் மத்தியில் எவ்வாறு ஒடுக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க ஒருவர் ஆரம்பித்து படிப்படியாக முன்னிலைக்கு வந்து காலப்போக்கில் அம் மக்களின் நம்பிக்கையைப் பெற்று இறுதியில் அதே மக்களுக்கு உரிய வேளையில் தமது புறமுதுகைக் காட்டிக் கொள்பவர்கள் வரிசையில் மறைந்த சந்திரசேகரனும் ஒருவர் ஆவார். இப்படிக் கூறுவது அவருக்கான அஞ்சலியைக் கொச்சைப்படுத்துவதற்கல்ல. அஞ்சலிக்கான புகழ்ச்சிக் குறிப்பு வேறு. ஒருவர் பற்றிய நேர்மையான கண்ணோட்டக் குறிப்பு வேறானதாகும்.

சமூக வாழ்வின் அன்றாட நிகழ்வுகள் ஒவ்வொருவரையும் பாதிக்கவே செய்யும். அதுவும் இளம் வயதினராக உள்ளவர்களையும் அதிகம் பாதிக்கும். இப்பாதிப்பு குறிப்பாக சமூக அக்கறையாளர்களான இளைஞர்கள் யுவதிகளையும் பற்றிக் கொள்வது இயல்பானதாகும். ஆனால் அவற்றை எவ்வாறு அணுகி ஆராய்ந்து வழி முறைகளை வகைப்படுத்தி தத்தமது நிலைகளைத் திடப்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும்.

அந்த வகையில் மறைந்த சந்திரசேகரன் மலையக மக்கள் எதிர்நோக்கிய ஒடுக்கு முறைகளுக்கு அன்று மலையகப் பெருந்தலைவர் எனக் கொண்டாடப்பட்ட செள. தொண்டமானையே நம்பியவர். அதன் இளைஞர் அணியில் இணைந்து செயற்பட்டவர். அவரது வர்க்கப் பின்னணியும் வியாபார நலன்களும் எதிலும் அதிக லாபம் பெறும் குடும்பச் சூழலும் மாக்சித்தின் பக்கம் வரத்தடையாகவே இருந்தது.

அக்காலத்தில் தீவிரமான மாக்சிசத்தை முன்னெடுக்க முன்னின்றவர்களுடன் தொடர்பும் நட்பும் இருந்தது. ஆனால் சந்திரசேகரனின் நோக்கும் போக்கும் மாக்சிசத்தின் எதிர்ப்பக்கம் சாய்வதாகவே அமைந்தது.

இச்சூழலில் இ.தொ.கா. விற்கு வெளியே மலையக மக்கள் மத்தியில் அதன் தலைமைக்கு எதிரான அதிருப்தி வளர்ந்து வந்தது. தொண்டமான் இ.தொ.கா. வைத் தனது குடும்பச் சொத்தாக்கி தனது வாரிசுகளுக்கு கையளித்துச் செல்வதில் கவனமாக இருந்து வந்தார். அதனை உணர்ந்த சந்திரசேகரன் இ.தொ.கா. விற்குள் அதிருப்தியடைந்த இளைஞர்களுடன் வெளியே வந்து மலையக மக்கள் முன்னணியைத் தோற்றுவித்தார். இவரை நம்பிய டி.தர்மலிங்கம் போன்ற மலையக இளம் முற்போக்காளர்கள் சந்திரசேகரனைத் தலைவராக்கி ம.ம. முன்னணியை வளர்க்க முற்பட்டனர். ஆரம்பத்தில் ம.ம.மு முன்னணி பழைய மலையக ஆதிக்க தொழிற்சங்க தலைமைகளுக்கு மாற்று என்ற ஒரு தோற்றத்தை கொடுத்து நின்றது. ஆதனால் சில மலையக புத்திஜீவிகள் அதற்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டனர். மாகாணசபை, பாரளுமன்றம் என்பவற்றுக்கான தேர்தல்களில் பங்கு கொண்டபோதும் ஓரளவு நம்பிக்கை கொள்ளப்பட்டது. புலிகள் சார்பாக சந்திரசேகரன் செயற்பட்டு சிறையில் சில வருடங்கள் இருந்தார். அதனையும் சாதகமாக்கியே மாகாணசபை உறுப்பினரானார். அதன் பின் பாராளுமன்ற உறுப்பினராகியும் கொண்டார். அதனை வைத்து மலையகத்தில் ஒரு பரந்த மாற்று அரசியலோ வெகுஜ னப்போராட்ட அரசியலோ அவற்றுக்குரிய வேலைத்திட்டமோ சந்திரசேகரனால் முன்னெடுக்கப்படவில்லை.

முற்றிலும் பாராளுமன்றப் பதவி, பிரதியமைச்சர்பதவி, முழுஅமைச்சர்பதவி மற்றும் சலுகைகளுடன் தன்னை மலையகத்தின் மற்றொரு தலைவன் என்பதனை நிலைநாட்டிக் கொண்டார். இவற்றின் மூலம் அவர் மலையக மக்களுக்கு எவற்றையும் பெற்றுக் கொள்ள இயலவில்லை.

மலையக மக்களின் அடிப்படையான இன வர்க்கப் பிரச்சனைகளுக்கு உரிய கோரிக்கைகளை முன் வைத்து அரசாங்கத்தில் சந்திரசேகரன் அமைச்சர் பெற்றார் என்று கூறுவது ஏமாற்று நிறைந்த பொய்யாகும். அதையும் விட மோசமானது யாதெனில் மலையக மக்களின் சம்பள உயர்வுப் பிரச்சனையில் நல்ல வேடம் கட்டி இ.தொ.கா. ஒரு புறமாகவும் ம.ம.மு மறு பக்கமாகவும் நாடகம் ஆடி இறுதியில் முதலாளிகளின் முடிவுக்கு மறைமுகமாக இணங்கி வந்ததாகும்.

அரசாங்கத்தை உருவாக்கும் பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்கு மலையக மக்களின் பேரால் பேருதவி புரிவதில் இ.தொ.விற்கு எவ்வகையிலும் குறைவிலாப் பாத்திரத்தை ம.ம.மு.யும் அதன் தலைவரான சந்திரசேகரனும் வகித்து வந்தனர் என்பது தான் உண்மையாகும். மலையக மக்கள் மத்தியில் சமூக அக்கறை மிக்க அரசியல்வாதிகள் போன்று ஆரம்பத்தில் தோற்றமளித்த சந்திரசேகரன் மக்களின் வாக்குகள் மூலம் பதவி பெற்று அவற்றைக் கொண்டு தன்னையும் தம்மவர்களையும் ஈடேற்றிக் கொண்டார். அதே வேளை மலையக மக்களுக்காக எதையுமே செய்யாத ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளில் ஒருவராகவும் மாறிக்கொண்டார். அதனாலேயே அவரது இறுதி நிகழ்வின் போது ஆளும் கட்சியின் பிரதிநிகள் தமது வர்க்க சகாவிற்கு சூழ்ந்து நின்று அஞ்சலி செலுத்தினர். சாதாரண மக்கள் அதிக தூரத்தில் நிற்க வேண்டியதாயிற்று எனவே சந்திரசேகரன் பற்றிய முழுமையான பார்வையும் அதன் தேவையும் அவசியமனதாகும். அதன் ஊடே மலையக இளம் தலைமுறை கற்பதற்கு நிறையவே உண்டு.

: சண்முகம் :



# சுய விமர்சனம் என்றால் என்ன?

இப்போது பலர் மற்றவர்களை நோக்கிச் "சுய விமர்சனம் செய்" என்று ஆணையிடுகிற தொனியிற் பேசுவதை அறியக் கூடியதாகவுள்ளது. இணையத் தளங்களில் நடக்கிற விவாதங்களில் இதை அடிக்கடி அவதானிக்கலாம்.

எதையாவது யாரேன் கண்டித்தோ விமர்சித்தோ கருத்து வெளியிட்டால் அக் கண்டனத்தையோ விமர்சனத்தையோ திசை திருப்புவதற்காகக், கருத்துக் கூறியவர் மீது ஏதாவது குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது. அல்லது அதற்கும் அப்பாற் சென்று நீ முதலிற் சுய விமர்சனம் செய்து விட்டுப் பேசு என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக மற்றவர்களைச் சுயவிமர்சனம் செய்யுமாறு ஆணையிடுகிறவர் என்றாவது தன்னைச் சுயவிமர்சனம் செய்தவராக இருப்பதில்லை. எனவே, சுயவிமர்சனம் என்பது, ஒருவர், தான் குற்றவாளி என்று உலகறியச் சொல்லுகிற ஒரு காரியமாகவே இவர்களாற் காணப்படுகிறது. இதற்கான காரணங்கள் எவையாயிருந்தாலும், சுயவிமர்சனம் என்கிற மாக்சிய லெனினிய நடைமுறைக்குப் பயிற்றப்படாமை அவற்றுள் ஒன்று என்றே கூற வேண்டும்.

முக்கியமான விவாதங்கள் அவற்றுக்குரிய விடயச்சார்பாக அமையாமல் தனி மனிதர்களது சுய முக்கியத்துவஞ் சார்ந்த மோதல்களாக அமைய மேற்கூறியவாறான அணுகுமுறை வழி செய்கிறது. விவாதங்களில் ஈடுபடுகிற ஒவ்வொருவரும் தன்னையும் தன்னைச் சார்ந்த ஒரு சிலரையும் புனிதர்களாகவும் பிறரைத் தீயோராகவும் காட்ட முற்படுவதையும் நோக்குகிற போது, சுய விமர்சனம் என்ற பதமும் தோழர் என்ற சொல்லைப் போலவே தவறாகப் பயன்படுகிறது எனத் தெரிகிறது.

சுய விமர்சனம் என்பது ஒரு மனிதரோ அமைப்போ தனது கடந்த காலத்திலிருந்து கற்பதற்கான ஒரு நடைமுறை. எந்த ஒருவரும் தவறுகட்கு அப்பாற்பட்டவரல்ல. எந்த அமைப்பும் தவறுகட்கு அப்பாற்பட்டதல்ல. தெரிந்தும் தெரியாமலும் கருதியும் கருதாமலும் தவறுகள் நிகழுகின்றன. தவறுகளிலிருந்து கற்பதன் மூலம் ஒருவர் தன்னை முன்னேற்றிக் கொள்கிறார். கற்க மறுப்போர் முன்னைய தவறுகளை மீண்டும் செய்வதுடன் புதிய தவறுகளையும் தவிர்க்க இயலாதோர் ஆகின்றார்கள்.

சுய விமர்சனம் என்பது சிலர் நினைப்பது போல ஒரு சடங்கல்ல. மதங்கள் பரித்துரைக்கும் பூசை வழிபாடு, தொழுகை என்பன போன்ற காரியமல்ல. பாதிரியாரிடம் போய்ப் பாவ மன்னிப்புக் கேட்கிறது போன்றதுமல்ல. எங்கள் நடுவே உள்ள சில 'அரசியற் பாதிரிமார்' தங்களைப் புனிதர்களாகக் கருதுவதாலே தான் பிறர் தம்மிடம் வந்து சுய விமர்சனம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை.

எனினும் ஆரோக்கியமான சுய விமர்சனம் ஒரு ஆரோக்கியமான சூழலிலேயே இயலுமானது. ஒருவரோ ஒரு அமைப்போ மேற்கொண்ட ஒரு பணியோ ஒரு வேலைத் திட்டமோ எதிர்பார்த்த விளைவுகளைத் தராதபோது, அல்லது எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளைத் தருகிறபோது, அது ஏன் என்று அறிவது அவசியமானது. அல்லாமலும் தமது செயற்பாடுகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அவதானிப்பதும் அவற்றின் சரியான பக்கங்களையும் தவறான பக்கங்களையும் காலத்துக்குக் காலம் கணிப்பெடுத்து நடைமுறையைச் சீர்செய்வதும் அவசியமானவை. எல்லா அமைப்புக்களும் ஏதோ வகையான சுயவிமர்சனத்தைச் செய்கின்றன. தனி மனிதர்களும் செய்கின்றனர். எனினும் தனிமனிதவாதமும் அகங்காரமும் தவறுகளை ஒப்புக் கொள்ள விடாமல் மறிக்கின்றன. மாறாக அவற்றை மூடி மறைக்கப் பிறரைப் பழி சொல்லுமாறு தூண்டுகின்றன. மாக்சிய லெனினியக் கண்ணோட்டத்திலான சுய விமர்சனம் முற்றிலும் வேறுபட்டது.

அது சுயவிருப்பின் அடிப்படையிலானது. அது வற்புறுத்தலுக்காக மேற்கொள்ளப்படுகிற ஒரு சடங்காராசாரமான செயல்ல. அது விமர்சனம்-சுயவிமர்சனம் என்ற அடிப்படையிலேயே பொதுவாக மேற்கொள்ளப் படுவது. அதை விடவும், விமர்சனம் என்பது கண்டனமல்ல. சுய விமர்சனம் என்பது காவல் நிலையத்தில் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலமுமல்ல. முக்கியமாக எதிர்பாராத அல்லது விரும்பத்தகாத விதமான விளைவுகளின் பின்னணியிலும் ஒரு செயற்பாட்டின் குறைநிறைகளை அறியும் போக்கிலுமே சுய விமர்சனம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே அது பிறர் குற்றங்கண்டு தண்டிக்கிறதற்காகவோ அவமதிப்பதற்காகவோ செய்யப்படுவதில்லை. ஒருவர் தனது தவறுகளிலிருந்து தானும் பிறருங் கற்கக் கூடிய விதத்தில் செய்கிற சுய விமர்சனம் ஒரு நல்ல தோழருக்கு மன நிறைவு தருகிற அனுபவமாக அமையலாம்.

சுய விமர்சனம் நீதிமன்ற நடவடிக்கை போன்றதல்ல. ஏனெனில் அமைப்பிலுள்ள அனைவருமே ஒரு விசாரணைக்கு உரியவர்களாகின்றனர். அனைவருமே அதன் போக்கில் நல்ல முடிவுகளை வந்தடைகிறார்கள். ஒரு தோழரின் தவற்றுக்கு அவர் சார்ந்துள்ள அமைப்பும் பிற தோழர்களுங் கூடப் பங்களித்திருக்கலாம். எனவே நேர்மையான சுயவிமர்சனம் மற்றவர்களையும் சுய விமர்சனஞ் செய்யத் தூண்டலாம். எனவே சுய விமர்சனம் என்பது தனியே ஒருவரையன்றி ஒரு அமைப்பையும் கறை நீக்குகிற நடவடிக்கையாகிறது.

இவ்வாறான சுயவிமர்சன மனப்பாங்கு யாருக்கும் தானாகவே வருவதில்லை. அமைப்பின் மீதான நம்பிக்கையும் அமைப்பிலுள்ள பிற தோழர்கள் மீதான நம்பிக்கையும் வலுவடையும் போது அதற்கமைவான சூழல் உருவாகிறது. தனது தவறுகளை ஒப்புக்கொள்வதால் தான் தாழவில்லை உயர்வதற்கான வாய்ப்பையே உருவாக்கிக் கொள்கிறேன் என்ற எண்ணம் தன்னம்பிக்கையின் வெளிப்பாடு. தவறுகளை மூடி மறைத்தாலே பிறர் தன்னை மதிப்பர் என்ற எண்ணம் தன்னம்பிக்கையீனத்தின் அடையாளம். தற்குறிகளாகவும் சுய விளம்பரகாரராகவும் இருப்பவர்கள் உண்மையிற் தன்னம்பிக்கைக் குறைபாடு உடையவர்களே. ஒரு அமைப்பினுள் ஒருவர் விமர்சனத்திற்கு முகங் கொடுத்துத் தவறுகளைத் திருத்துவது தொடக்க நிலை. தனது தவறுகளைப் பிறர் சுட்டிக்காட்ட முதலே உணரும் ஆற்றலைச் சுயவிமர்சன நடைமுறை வழங்குகிறது.

மேன்மையான இந்தக் கோட்பாடு தமிழ் இளைஞர் இயக்கங்களுக்குள் எவ்வாறு சீரழிக்கப் பட்டுள்ளது என்பதை அறிய வேண்டுமானால் எடுத்ததற்கெல்லாம் இன்னார் இதற்காகத் தன்னைச் சுய விமர்சனம் செய்ய வேண்டும் என்ற விதமான ஆணைகளைக் கவனித்தாற் போதுமானது.

சில இயக்கங்களுடைய அராஜகத்துக்கும் முரட்டுத்தனமான நிறுவனக் கட்டுப்பாட்டுக்கும் அதிகாரப் போட்டிக்கும் தனிமனிதவாதத்துக்கும் பழக்கப்பட்டுப் போனவர்கள் உள்ளனர். தம்மை மிஞ்சிய புரட்சிகரத் தூய்மையோ அறிவோ ஆற்றலோ உள்ளவர் யாரும் இல்லை என்று காட்டிக் கொள்ள அவர்கள் விரும்புவதன் ஒரு வெளிப்பாடு தான், பிறர் சுயவிமர்சனம் செய்ய வேண்டும் என்னும் தொடர் தொடரான ஆணைகள்.

புரட்சிகர அமைப்புக்கள் தம்மைச் சுயவிமர்சனம் செய்கிற போதும் சகோதர அமைப்புக்களை விமர்சனம் செய்கிறபோதும் அந்த விமர்சனங்களின் தேவையும் பயனுங் கருதியே அவ் விமர்சனங்களை அறிய வேண்டியோரிடம் அறியத் தருவர். அமைப்புச் சார்ந்த தனி மனிதர் விடயத்திலும் அவ்வாறே நடக்கிறது. விமர்சனமும் சுய விமர்சனமும் எதிரிகளின் பயன்பாட்டுக்கானவையல்ல. குறிப்பாகச் சுய விமர்சனம் நட்புச் சக்திகட்கு வரையறுக்கப்பட்ட ஒன்று.

சிலர் சில விடயங்கள் பற்றிக் கேள்விகட்கு விளக்கம் வேண்டும் என்றோ தமது உடன்பாட்டின்மையை வெளிப்படுத்தவோ பிறரிடம் சுயவிமர்சனம் கோருவதுண்டு. இது சுயவிமர்சனம் என்றால் என்ன என்று அறியாததன் விளைவு. எனினும் இப்போது நடப்பது என்னவென்றால் தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டுச்சென்ற விடுதலை இயக்கக்காரர்களும் அவர்களது முகவர்களும் இன்று தாம் எதிர்கொள்ளுகிற கடும் விமர்சனங்களிலிருந்து கவனத்தைத் திசைதிருப்புகிற விதமாகச் சுயவிமர்சனம் என்பதை ஒரு கேடயமாக்க முனைகின்றனர். இது பரிதாபமானது.

தேசபக்தன்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சீரழிந்து செல்லும் பொருளாதாரமும் மூடிக்கட்டும் அரசாங்கமும்

இந்த நாட்டின் பொருளாதாரம் நன்றாகவுள்ளதாக உலக வங்கி நவம்பர் பிற்பகுதியில் வெளியிட்ட அறிக்கையிற் கூறியுள்ளது. ஒரு மாதத்திற்கு முன்பு, அதே வங்கியின் வதிவிடப் பிரதிநிதி நாசூக்காகத் தனது கருத்தை வேறு விதமாக வெளியிடப்பட்டிருந்தார். வெளிநாடுகளிடமி ருந்து பெற்ற கடன்கள்—மூலமே அன்னியச் செலாவணிக் கையிருப்புப் பேணப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டில் நிதிப் பற்றாக் குறையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது பாரிய சவால் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் வெளியிட்ட அறிக்கையை பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமாய் உள்ளதாகவும் வங்கி வட்டிவீதம் குறைந்துள்ளதால் 2010இல் அதிகரித்த பொருளாதார வளர்ச்சி காணப்படும் எனவும் பண வீக்கம் ஒற்றை இலக்கத்தில் இருக்குமெனவும் உலக வங்கி எதிர்வு கூறியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் புள்ளிவிபரங்களை வைத்து அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுள்ளதாக பொருளியல் ஆய்வாளர்கள் விமர்சிக்கிறார்கள்.

சென்ற வருடம் அரச வருமானத்தில் 90.5 வீதமான தொகையானது பெற்ற கடன்களில் ஒரு பகுதியை மீளச் செலுத்தவும் கடனுக்கான வட்டியைச் செலுத்தவுமே பயன்பட்டது. சொற்ப தொகையே அரசின் ஏனைய சேவைகளுக்குச் செலவிடக் கூடியதாய் இருந்தது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 7.7 வீதம் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது.

இப்போது கடன்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த வருடம் நாட்டின் முழு வருமானமுமே கடன்களுக்கு வட்டி செலுத்தவும், பகுதிக் கடன் மீளக் கொடுப்பதற்கும் செலவிட வேண்டி ஏற்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இந்த வருடம் நிதிப் பற்றாக்குறை சென்ற வருடத்தைவிட அதிகமாய் இருக்கும்.

தற்போது நடப்பது இதுதான். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடனைப் பெற்று ஏற்கனவே பெற்ற கடனில் ஒரு பகுதியையும் கடனுக்கான வட்டியையும் அரசு செலுத்துகிறது. இதிலிருந்து மீள வேண்டுமானால் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். இறக்குமதியைக் குறைக்க வேண்டும். உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்றுமதி அதிகரிப்புச் சாத்தியமில்லை. உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு உற்பத்தி மேற்கொள்ள வேண்டும். உலக வங்கியின் கூற்றுப்படி, பிரதான கைத்தொழில் உற்பத்தியான தைத்த ஆடையின் ஏற்றுமதி எதிர்பார்த்ததை விடப் பலமுள்ளதாய்க் காணப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் தகவலின் படி, 2009இன் முதல் ஒன்பது மாதங்களில் ஏற்றுமதி 17.3 வீதத்தால் குறைவடைந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் தைத்த ஆடைகளில் புடவைகள் 4.9 வீதத்தால் குறைவடைநததாகவும் மத்திய வங்கி கூறுகின்றது. சகலவிதமான கைத்தொழில் ஏற்றுமதியானது 16.2 வீதத்தால் வீழ்ச்சி கண்டது.

வெளிநாட்டில் வதியும் இலங்கை மக்கள் இங்கே அனுப்பும் அந்நியச் செலாவணி 2009இன் முதல் ஒன்பது மாதங்களில் 10.3 வீதத்தால் அதிகரித்திருந்தது. இது வர்த்தகப் பற்றாக்குறையை ஈடுசெய்ததுடன் மேலதிகமான தொகையையும் தந்தது. இது அரசாங்கத்தின் சாதனை அல்ல. யுத்தத்தை உக்கிரமடையச் செய்ததன் மூலம் நாட்டைவிட்டு வெளியேறியவர்களே தத்தம் தாய் தந்தையருக்கு, சகோதர, சகோதரிகளுக்கு மாதந் தோறும் பணத்தை அனுப்புகிறார்கள். வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் மிகவும் இக்கட்டான சூழலில் வாழ்ந்து கொண்டு, 12 - 14 மணித்தியாலங்கள் தினமும் வேலை செய்தே உறவினருக்குப் பணம் அனுப்புகின்றனர் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அங்கிருந்து அனுப்பும் பணத்தின் பெறுமதி இங்கு வரும் போது கூடுதலானதாகவே இருக்கிறது.

உலக வங்கியின் அறிக்கை, வட்டி வீதம் குறைந்திருப்பதால் வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கும் எனக் கூறியுள்ளது. இந்த முதலீடுகள் அடுத்த சில மாதங்களில் இடம்பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஜனவரி 26ல் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. அதைத் தொடர்ந்து மார்ச் மாதமளவில் பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது. அந்நிய முதலீட்டாளர்கள், பொறுத்திருந்து பார்ப்போம் என்ற நிலைப்பாட்டிலே உள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கு 150 கோடி செலவாகுமெனத் தேர்தல் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

பொதுத் தேர்தலை ஒரேநாளில் வைத்தால் அதற்கு சுமார் 180 கோடி செலவாகுமென்கிறது. இந்த மதிப்பீடு உத்தியோகபூர்வமான செலவு மட்டுமே. இத் தேர்தலுக்கு அரச தரப்பு அரச வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விரயமாகும் தொகை மதிப்பிடப்பட மாட்டாது. தேர்தலின் போது, அபேட்சகர்கள் அள்ளி வீசும் பணமும் ஏனையனவும் கணக்கில் வராது. இது முதலாளித்துவ ஜனநாயகத் தினிற் பிரிக்க முடியாத ஒரு பகுதி. மொத்தத்தில் அடுத்த சில மாதங்களில் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

அது மட்டுமல்ல. நாட்டின் வளங்களைப் பங்கிடுவதில் நகரங்கள் கிராமங்கள் என்ற வேறுபாடும் சிறுபான்மை இனங்களின் புறக்கணிப்பும் இடம்பெறுகின்றன. அத்துடன் உலக வங்கி, மத்திய வங்கியின் புள்ளி விபரங்களில் வடக்கு - கிழக்கு உட்படுத்தப்படாது விடப்பட்டுள்ளது. அதே வேளை வடக்கு-கிழக்கில் அந்நிய முதலீட்டுக்கான களங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. விரைவில் அங்குள்ள வளங்கள் அள்ளிச் செல்லப்படும் என்பதில் ஐயமில்லை.

அண்மையில் வடபகுதி விவசாயி ஒருவருடன் கதைத்தபோது அன்றைய தினம் அவர் திருநெல்வேலிச் சந்தைக்கு கொண்டு சென்ற வெண்டிக்காயை விற்றுப் பெற்ற பணம் ரூபா 70 மட்டுமே என்றார்.

அந்தக் கமக்காரனுக்கு அன்றைய வருமானம் அந்த 70 ரூபா மட்டுமே. இது ஒரு தனிப்பட்ட விவசாயின் கதையல்ல. வடக்கு-கிழக்கு பகுதிகளில் அன்றாட சீவியத்திற்கு உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலை அதுதான். இலங்கையில் தலா வருமானம் மற்றும் அன்னியச் செலாவணி இருப்பு சாதகமாய் உள்ளதா பாதகமாய் உள்ளதா என்பதெல்லாம் வசதிபடைத்த ஆளும் வர்க்கத்திற்கு மட்டுமே அன்றிச், சாதாரண உழைக்கும் மக்களை மையப்படுத்தியவை அல்ல. உழைப்போர் வறுமை, இல்லாமை, பற்றாக்குறைகளுடன் வாழவும் உறுஞ்சுவோரும் சுரண்டுவோரும் சுகமாக வாழவுமே பாராளுமன்ற ஆட்சிகள் தொடர்கின்றன.

- ஜீ எஸ் -

# சமூக வழக்குகளில் ■□■□■□ ஏற்றத் தாழ்வுகள்

**சி. சிவசேகரம்**

## வர்க்கமும் ஆதிக்கச் சிந்தனையும்

உலகின் எல்லாச் சமூகங்களுமே இன்று வர்க்க அடிப்படையிலானவை. வர்க்க வேறுபாடுகள் ஒவ்வொரு சமூகத்தினுள்ளும் உள்ள மொழி, மதம், கலைகள், இலக்கியங்கள், விழாக்கள் என்பனவற்றையும் சடங்கு சம்பிரதாயங்கள் உட்பட்ட பல்வேறு பண்பாட்டுக் கூறுகளிலும் தம்மைத் தெரியப்படுத்திக் கொள்கின்றன.

எனினும் மேற்குறிப்பிட்ட எதுவுமே நிரந்தரமானதல்ல. வேறுபட்ட விடயங்கள் ஒன்றை ஒன்று ஊடுருவுகின்றன. ஆனால் அவை ஒன்றாகி விடுவதில்லை. சமூக வேறுபாடுகள் புதிய முறைகளில் தம்மைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றன.

அதேவேளை, அந்தோனியோ கிராம்ஷி விளக்கியது போல ஒரு சமுதாயத்திலுள்ள மேலாதிக்கச் சிந்தனை சமூக இயக்கத்தின் மீது வலுவான செல்வாக்குடையதாக உள்ளது. அரசு இயந்திரம் என்னும் வன்முறை சார்ந்த நிறுவனம் ஒரு சமூக அமைப்பைப் பேணுவது போல அதிலும் நுட்பமான முறையில் ஆதிக்கச் சிந்தனை செயற்படுகிறது.

அதனாலேயே ஒரு சமுதாயம் தனது உய்வுக்கும் உயர்வுக்கும் அவசியமான மாற்றங்களை ஏற்கத் தயங்கவேண்டி ஏற்படுகிறது. ஆதிக்கச் சிந்தனை மரபு, பண்பாடு என்பன பற்றிய பிடிப்பாகவும் உயர்வு தாழ்வு பற்றிய கொள்கைகளை ஒரு சமூகத்தின் தாழ்த்தப்பட்ட பகுதியினர் கூட ஏற்றுக் கடைப்பிடிக்கவும் இயலுமாகிறது.

அடிமைச் சமுதாயங்களை அடிமை நிலையில் வைத்திருந்ததில் அதிகார வர்க்கத்தின் வன்முறைக்கும் வன்முறை பற்றிய அச்சத்திற்கும் ஒரு பெரிய பங்கிருந்தது. எனினும் தமது அடிமை நிலையை இயல்பானதாக ஏற்றுக் கொள்கிற விதமாக அடிமைகள் பண்படுத்தப்பட்டமை மிக முக்கியமான பங்காற்றியுள்ளது. ஒரு ஆதிக்க உறவுமுறையையும் அதன் சிந்தனை முறையையும் ஆதிக்க வர்க்கமும் ஆதிக்கத்திற்குட்பட்ட வர்க்கமும் ஏற்றுள்ளதாலேயே அடிமைகளின் கிளர்ச்சிகள் நிகழாமல் அடிமைகளே செயற்பட்டுள்ளனர்.

இந்தியாவின் சாபக்கேடான சாதியத்தை ஏன் ஒடுக்கப்பட்ட சாதியினர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தூக்கி எறியவில்லை என்ற கேள்விக்குரிய விடையின் முக்கியமான ஒரு பகுதி ஒடுக்கப்பட்ட சாதியினரும் சாதியத்தை ஏதோ வகையில் ஏற்று உள்வாங்கியுள்ளமையாகும். என்று காணுவோம்.

சில நாடுகள் நூற்றாண்டுக் காலக்கொலனி ஆட்சிகளின் கீழ் இருந்துள்ளன. கொலனிய எதிர்ப்பு இயக்கங்களின் எழுச்சிக்குத் தடையாக இருந்தது என்ன? கொலனிய ஆட்சியினதும் அதன் ஏவலர்களதும் அடக்குமுறை மட்டுமல்ல. முழுக் கொலனியச் சமூகமுமே கொலனி ஆதிக்கஞ் சார்ந்த ஒரு சிந்தனை முறையை உள்வாங்கிக் கொள்ளாமல் அவ்வாறான தயக்கத்திற்கு இடமிருந்திராது.

கொலனி ஆட்சி போனபின்பும் நவகொலனிய ஆதிக்கம் தொடர்வதற்கும் அவ்வாறான சிந்தனை பங்களிக்கிறது. அதை இன்று நம் மக்களிடையே பல வடிவங்களிற் காணலாம். குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தினர் நடுவே மேற்குலகத்தின் மீதுள்ள நம்பிக்கை அவ்வாறான சிந்தனையின் வெளிப்பாடுதான்.

எனவே தான் ஒரு சமுதாய அமைப்புத் தகர்ந்தாலும் அதன் மிச்ச சொச்சங்கள் தொடருகின்றன. கண்ணுக்குப் புலனாகிற விதமான உற்பத்தி உறவுகளில் அவை தெரியாமற் போகலாம். பழைய சமுதாயத்தின் உற்பத்திமுறை கூட மாற்றப்படலாம். ஆனாலும் சிந்தனைத் தளத்தில் தொடருகிற மிச்ச சொச்சங்கள் சமுதாயம் தனக்குரிய புதிய திசையிற் பயணமாகத் தடையாக அமைகின்றன. அவ்வாறான சிந்தனைகளின் உதவியின்றிச் சீனாவிலோ சோவியத் யூனியனிலோ முதலாளியம் மீளவும் வேரூன்றி இருக்க இயலாது. எனவே ஆதிக்கச் சிந்தனையைப் பற்றியும் அதன் செயற்பாட்டைப் பற்றியும் பல்வேறு கோணங்களிலிருந்தும் பார்க்க வேண்டியுள்ளது.

இக்கட்டுரைத் தொடர், ஆதிக்கச் சிந்தனை எவ்வாறு மொழி, மதம், கலைகள், இலக்கியங்கள், போன்ற பல்வேறு விடயங்களில் உயர்வு-தாழ்வு எனும் வேறுபாட்டை நியாயப்படுத்தி நிலை நிறுத்தியுள்ளது என்று விசாரிக்கும் நோக்கையுடையது. அதிலும் முக்கியமாகத் தென்னாசியச் சூழலில் இந்த உயர்வு-தாழ்வு என்ற வேறுபாட்டுக்கும் அப்பால் தூய்மை, தொன்மை, முதன்மை, போன்ற சிறப்பியல்புகளும் திணிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சமூகச் சூழலிலும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூக வரலாற்றுப் பின்னணியிலும் இவை மேற்கொண்டு விசாரிக்கப்படும். இனிவரும் கட்டுரைகளின் அழுத்தம் சான்றோர் அல்லது மேலோர் எனப்படுவோரின் வழக்கிற்கும் சாமானியர் அல்லது இழிசினர் எனப்படுவோரின் வழக்கிற்குமிடையிலான வேறுபாடுகளை நமது ஆதிக்கச் சிந்தனை எப்படி அடையாளங் காட்டி வந்துள்ளது என்பதைப் பற்றியதாக இருக்கும்.

இவ்வாறான ஆதிக்கச் சிந்தனையை எதிர் கொள்ளுகிற போக்கில் திசைமாற்றக் கூடிய தவறுகளையும் தவிர்க்க வேண்டிய அபாயங்களையும் பற்றியும் கட்டுரைகளின் கவனத்திற் கொள்ளப்படும்.

தொடரும்

## பெண்களின் நிலை

- ஜனவரி 2009ல் உலக சனத்தொகை 687 கோடி 27 இலட்சமாகும். இதில் 120 கோடி மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். இதில் 70 வீதமானவர்கள் பெண்கள்.
- உலகில் 2 கோடி 70 இலட்சம் பேர் அகதிகளாய் உள்ளனர். இதில் 80 வீதமானோர் பெண்கள்.
- உலக நிலைப்பரப்பில் ஒரு வீதத்தை மட்டுமே பெண்கள் உடைமை கொண்டுள்ளனர்.
- உலகில் கல்வி அறிவில்லாத நூறு கோடிக்கு அதிகமான வயது வந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பெண்கள்.
- அமெரிக்காவில் வறுமைக் கோட்டின் கீழே வரும் 3 கோடி 70 இலட்சம் மக்களில் 2 கோடி 10 இலட்சம் பேர் பெண்கள்.
- உலகில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் வேலை செய்கின்றனர். அவர்கள் உலகின் பத்துவீத வருமானத்தையே பெறுகின்றனர்.
- ஐரோப்பிய சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான ஊதிய இடைவெளி 25 வீதமாக சைப்பிரஸ்சிலும் எஸ்தோனியாவிலும் காணப்படும் அதே வேளை ஸ்லோவாக்கியாவில் 24 வீதமாக விளங்குகிறது.
- ஐரோப்பிய ஒன்றியத்தில் இன்று 27 நாடுகள் உள்ளன. அந்தந்த நாடுகளின் நாடாளுமன்றங்களின் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தலில் பிரித்தானியா 15வது இடத்தில் உள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை இந்தியக் கம்யூனிஸ்டுக்களிடையே ஒத்துழைப்பு அவசியம்

## புதுடெல்கி மாநாட்டில் தோழர் இ.தம்பையா உரை



இலங்கை மட்டுமல்ல, இந்தியாவும் ஐக்கியமாக இருக்க வேண்டுமென்பதிலும் நாம் கரிசனை கொண்டுள்ளோம். தேசிய இனங்களின் ஐக்கியம் என்பது ஒரு இனத்தின் மேலாதிக்கத்துடன் ஒன்று கலக்கச் செய்யும் முதலாளித்துவ பிற்போக்கு ஐக்கியத்தையன்றி தேசிய இனங்களின் சமத்துவத்துடனான ஒருமைப்பாட்டையே நாம் வலியுறுத்துகிறோம்.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் ஏகாதிபத்திய, பிராந்திய மேலாதிக்க சக்திகளின் ஒத்துழைப்புடன் இராணுவ தீர்வையே முன்னெடுத்தது. த.வி.பு இயக்கத்தின் இராணுவ பலத்தை முறியடித்தது. இதனால் மூன்று லட்சம் மக்கள் அகதிகளானதுடன் பல ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினால் 2 லட்சத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பலர் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். இதன் வளர்ச்சியால் ஏற்கனவே இருந்த சில ஜனநாயகத் தன்மைகளும், மனித உரிமைகளும் இல்லாது போயின. நாடு பல அழிவுகளைச் சந்தித்தது. இன்று தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லை. ஆனால் நவகொலனித்துவப் பிடிக்குள் இறுக்கமாக சிக்கவைக்கப்பட்டுள்ளது. நவகொல்னித்துவ பிடியிலிருந்து இலங்கை விடுதலையடைவதும் பௌத்த சிங்கள பெருந்தேசிய அடக்குமுறை அரசிடமிருந்து தேசிய இனங்கள் விடுதலை பெறுவதும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவே இருக்கிறது. நவகொலனித்துவப் பிடி இலங்கை அரசை இராணுவ தீர்வை நோக்கி தள்ளியிருப்பது மட்டுமன்றி, இராணுவத் தீர்வு நவகொலனித்துவ பிடியை இறுக்கியுள்ளது.

1997ம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றும் போது யுத்த அவலத்திலிருந்து விடுபடவும், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படவும் இந்திய மக்களும், முற்போக்கு ஜனநாயக சக்திகளும் இலங்கை மக்களுக்கு உதவி புரிய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். அவ்வாறான கோரிக்கையை ஏன் விடுத்தேன் என்று பலரும் என்னிடம் கேள்வி எழுப்பினர். அன்று நான் கூறிய காரணங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் இருந்திருக்கலாம். இன்று அவர்களுக்கு புரிந்திருக்கும். பிரிவினைவாத, தீவிரவாதக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தது முதல் 2009 மே 19 வரையிலான இந்திய ஆளும் வர்க்கத்தின் தலையீட்டை விளங்கிக் கொண்டால் எனது வேண்டுகோள் இன்னும் செல்லுபடியானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே இலங்கையில் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிராகவும், யுத்தக் கொடுமைகளிலிருந்து இலங்கை மக்கள் விடுபடுவதற்கும், தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் இந்திய மக்களும் கம்யூனிஸ்ட் முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை மீண்டும் விடுக்கின்றேன்.

மேற்படி மாநாட்டில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டி வளர்ப்பது பற்றியும், உலக பொருளாதார நெருக்கடிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றியும், இலங்கையின் தற்போதைய நெருக்கடிகள் பற்றியும் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. உலகின் பல நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதில் கலந்து கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கம் பலமடைவதற்கும் அதன் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது மட்டுமன்றி இலங்கையின் அடக்கப்படுகின்ற தமிழ் முஸ்லீம் மலையக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களுக்கும் சொற்களால் மட்டுமன்றி செயலாலும் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அத்துடன் இந்திய மக்களினதும் முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். இலங்கையின் விசேட சூழ்நிலைகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப் பட்டபோதும் தேசிய இனப் பிரச்சினை பிரதான முரண்பாடாகவே தொடர்ந்து இருப்பதனாலும் தேசிய இனப் பிரச்சினையை ஆயுத முரண்பாடாக மாற்றியதிலும் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வை காண்பதற்கு முட்டுக் கட்டைகளை ஏற்படுத்தியதிலும் தமிழ் பிரதேசங்களில் யுத்தக் கொடுமைகள் புரியப்படுவதற்கும் இந்திய ஆளும் வர்க்கம் பாரிய பங்களிப்பினைச் செய்துள்ளபடியால் இந்திய மக்களின் வர்க்க எதிரியான ஆளும் வர்க்கம் இலங்கை மக்களினதும் எதிரியாகிறது. அதனால் இரு நாட்டு மக்களும் அவர்களின் பொது எதிரிக்கு எதிராக போராடு கின்ற போது பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படுவது மிக வும் அவசியமாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா புதுடெல்லி ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற இந்திய சோசலிச ஐக்கிய நிலையத்தின் (கம்யூனிஸ்டுக்கள்) பொதுக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

சுமார் 80 ஆயிரம் மக்கள் கலந்து கொண்ட இந்திய சோசலிச ஐக்கிய நிலையத்தின் இரண்டாவது தேசிய மாநாட்டின் பகிரங்க நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எமது புதிய ஜனநாயக கட்சிக்கு அரசியல் ரீதியான உடன்பாடோ புரிந்துணர்வோ இருக்கவில்லை. அவர்கள் தேசிய இனப் பிரச்சினைக்குப் பிரிவினையைத் தீர்வாகக் கொண்டிருந்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்பையோ பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்புவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டையோ கொண்டிருக்கவில்லை. அவர்களின் செயன்முறையில் ஜனநாயக விரோதம் மனித உரிமை மீறல்கள் போன்றன காணப்பட்டன. எனினும் அவர்கள் ஏதோ வகையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொண்டிருந்தனர். அதனால் அவர்களுடன் சமாதான வழியில் பேச்சுவார்த்தைகளை நடத்தி தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நாம் இலங்கையை ஆண்ட அரசாங்கங்களிடம் வலியுறுத்தி வந்தோம். தேசிய இனங்களின் சுயநிர்ணயம் சமத்துவம் சுயாட்சி என்பவற்றின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே நமது நிலைப்பாடு. என்பதையும் அவர் அங்கு வலியுறுத்திக் கூறினார்.

# இந்தியா அமெரிக்காவின் ஏவல் _ நாயாகச் செயற்படுகிறது

இந்தியா அமெரிக்கா ஏவல் நாயாகச் செயற்படுகிறது என்பதற்கு பல உதாரணங்கள் காட்டப்படுகின்றன. ஈரானுக்கு எதிராக அமெரிக்காவுடன் சேர்ந்து வாக்களித்தமை, இலங்கை அரசின் யுத்தத்திற்கு ஆயுதம் வழங்குவதுடன் 256 இந்தியத் தொழில்நுட்ப ஊழியர்களை இலங்கையில் நிலை கொண்டுள்ளமை, சார்க் மாநாட்டின் போது முப்படைகளும் இலங்கையைத் தனது பிடிக்குள் வைத்திருந்தமை என்பன இந்தியா இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா நலனுக்கு இசைவாக செயற்படுவதை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

இந்தியா ஆப்கானிஸ்தானில் எவ்வாறு செயற்படுகிற என்பதைக் கவனித்தால் இந்தியா இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்க நலனுக்கு ஏற்றால் போல செயற்படுவதற்கு அமெரிக்கா அனுமதி வழங்கியுள்ளதைக் காணலாம்.

சில மாதங்களுக்கு முன் ஆப்கான் தலைநகரான காபூவில் இந்திய தூதரகம் தாக்குதலுக்குள்ளானது. 2001ம் ஆண்டு தலிபான்கள் வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் படிப்படியாக இந்தியா காலூன்றியது. 1979ம் ஆண்டு மூடப்பட்ட இரண்டு கொன்சுலர் காரியாலங்களை கேரத்திலும் மசார் ஈ.சரிப்பிலும் மீண்டும் ஆரம்பித்தது. அது மட்டுமல்ல பாக்கிஸ்தானில் எல்லையோரமாக கண்டகார், ஜலாலபாட் ஆகிய இடங்களில் மேலும் இரண்டு கொன்சுலர் காரியாலங்களை திறந்தது.

இது மட்டுமா. சின்னாபின்னமாகவுள்ள ஆப்கானின் உள் கட்டமைப்பை மீளக்கட்டுவதற்கென 75 கோடி டொலர்களை கொடுப்பதற்கு உடன்பட்டுள்ளது.

வடபகுதியில் மின்கம்பங்களை நாட்டி மின் கம்பிகளை பொருத்துகின்றனர். 200 கி.மீ சாலைகளை ஏற்படுத்துவதுடன், ஆறு மாகாணங்களில் குழாய் கிணறுகள் தோண்டுகிறார்கள். 100 கிராமங்களுக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கவும் இவற்றையெல்லாம் விட ஆப்கானிஸ்தானின் பாராளுமன்ற கட்டடத்தையும் கட்டுகிறார்கள். பெரும் சிக்கலில் உள்ள ஆப்கானிஸ்தானின் விமான சேவைக்காக குறைந்தது 3 ஏயார் பஸ் விமானங்களை கொடுத்துள்ளது இந்தியா. இது மட்டுமல்ல ஆப்கானிஸ்தானின் கட்டுமானப்பணிக்கென ஆயிரக்கணக்கான இந்தியர்கள் அந்த நாட்டில் நிலை கொண்டுள்ளனர்.

இந்தப் பிராந்தியம் தொடர்பாக விரிவாக எழுதிவரும் ஆய்வாளர் அகமெட் ராசித் என்ன கூறுகிறார்:-

''ஆப்கான் சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் வெற்றி கொள்ளும் நோக்கிலேயே இந்தியாவின் மீள் கட்டுமானப்பணி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஆப்கான் மக்களிடையே இந்தியா பற்றிய ஒரு பெரிய மதிப்பை ஏற்படுத்தும் நோக்குடன் பாக்கிஸ்தானின் செல்வாக்கை மட்டந்தட்டி ஆகக்கூடிய அரசியல் இலாபம் பெறும் நோக்குடையது''

இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் பெரும் அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. 2006, 07 ஆண்டில் இருபத்திரண்டரை கோடி டொலர்களை எட்டியுள்ளது. ஆப்கானிஸ்தானுடன் நேரடியாக வர்த்தகத்தில் ஈடுபட முடியாத நிலையில் பாக்கிஸ்தானிய நிலப்பரப்பு ஊடாக ஈரானிய துறைமுகமான சாபகார் சென்றடைய ஒரு புதிய சாலையை கட்டுவதற்கு இரகசியமாக நிதி உதவியுள்ளது எது. இந்தப் புதிய பாதை ஈராணிய துறைமுகங்களுக்கான தூரத்தைக் குறைத்துவிடும்.

''தலிபான் ஆட்சிக்கவிழ்ப்புக்குப்பின் ஆப்கானிஸ்தானில் இந்தியச் செல்வாக்கு கூடி வருவதை பாக்கிஸ்தான் அவதானித்த வண்ணம் உள்ளது. ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் அக்கறை மிகத் தெளிவானது. பாக்கிஸ்தானை சங்கடத்துக்குள்ளாவது தான் நோக்கம். ஜலாலபாட், கண்டகார் ஆகிய இடங்களில் இந்தியாவின் கொன்சுலர் பிரிவுகள் என்ன தேவைக்காக திறக்கப்பட்டன. இது பாக்கிஸ்தானை அச்சுறுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டன.'' என முன்னாள் ஜனாதிபதி முசாரப் தெரிவித்திருந்தார்.

இந்த இரண்டு கொன்சுலர் பிரிவுகள் மூலம் பாக்கிஸ்தானின் பலூஸ்தில் தான் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களையும் பணத்தையும் அனுப்பி வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் இந்தியாவின் அதிகரிக்கும் செயற்பாடுகளின் விளைவாலேயே காபூரில் இந்திய தூதரகம் தாக்கப்பட்டதற்கான காரணம். இலங்கையில் எந்தவொரு சம்பவம் நிகழ்ந்தாலும் தமிழர்கள் கைது செய்யப்படுவதைப் போல இந்தியாவில் எந்தவொரு சம்பவம் நிகழ்ந்தாலும் அது பாக்கிஸ்தானிய உளவாளிகளின் வேலை என்று கூறி முஸ்லிம்களை கைது செய்வது வழக்கம்.

முன்பெல்லாம் தலிபான்கள் இந்தியப் பிரஜைகளைத் தாக்கியும் கடத்தியும் வந்தனர். இந்திய பிரஜைகளுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. கேரத், ஜலாலபாத் ஆகிய கொன்சுலர் பிரிவுகள் மீது வெடிச் சம்பவங்களும், கிரனைட் தாக்குதல்களும் இடம்பெற்று இருக்கின்றன. எவ்வாறாயினும் காபூல் தாக்குதலே மிகப்பெரிய தாக்குதல் ஆகும்.

இந்தியாவிற்கு ஆப்கானிஸ்தான் சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்ற அக்கறை கிடையாது. 1979இல் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானை தாக்கிய போது அதனை இந்தியா ஆதரித்தது. இது ஆப்கான் மக்களிடையே இந்தியா மீது வெறுப்பை ஏற்படுத்தியது. தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியபோது ஆப்கானிஸ்தானில் இந்தியச் செல்வாக்கு இல்லாது போனது. தற்போது மீண்டும் இந்தியா ஆப்கானிஸ்தானில் தனது கைங்கரியங்களில் படிப்படியாக ஈடுபட்டு வருகிறது.

ஆப்கானிஸ்தானில் முழு அளவில் மூக்கை நுழைத்துள்ள இந்தியா அங்கு வேலை செய்யும் இந்தியர்களைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஆயுதப் படையினரையும் அமர்த்தியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தைப் படிப்படியாக தனது கைக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கும் இந்தியா ஆப்கானிஸ்தானைப் போல இலங்கையிலும் அதன் கைவரிசையை மென்மேலும் காட்டத் தான் போகிறது.

- ஸ்ரீ -

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## மாற்றங்கள் குறித்த துர்க்கனவு

சில சொற்களை அடிக்கடி கேட்க வேண்டி நேருகிறது. அவை எல்லா நேரத்திலும் ஒரே சந்தர்ப்பமாக இருப்பதில்லை. ஆனால் ஒரே சொற்களே ஏன் திரும்பித் திரும்பி வருகின்றன என்பதைப் பற்றிப் நாம் சிந்திப்பதில்லை. ஆனால் வேறு வேறு சந்தர்ப்பங்களில் உலகின் வேறு பகுதிகளில் இருந்து ஓரே சொற்கள் வேறு வேறு சொற்கோர் வைகளாக ஒலிக்கின்றன. அமெரிக்கா ஈராக் மீது போர்தொடுத்த போது அது "ஆட்சி மாற்றம்" (Regime Changer) என்ற பெயராலும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது அது ஓபமாவுக்காக "நம்பக்கூடிய மாற்றம்" (Change we can believe in) என்று ஒபாமாவுக்காகவும் இப்போது இலங்கையில் "நம்பிக்கையான மாற்றம்" (Belivable Change) என சரத் பொன்சேகாவுக்காகவும் ஒலிக்கிறது. சரத் பொன்சேகாவினது ஒபாமாவினதை ஒட்டியிருப்பது தற்செயலானதல்ல என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

"நம்பிக்கையான மாற்றம்" எவ்வகையான விளைவுகளைக் கொண்டுவரும் என்று எனக்குத் தெரியாது. ஏனெனில் முருங்கை மரம் ஏறாத வேதாளத்தை எனக்குத் தெரியாது. ஒருவேளை எல்லாம் தெரிந்திருக்கின்ற சம்பந்தனும், மனோ கணேசனும் ஹக்கீமும் தெரிந்திருக்கக் கூடும். ஆனாலும் "ஆட்சி மாற்றம்" மற்றும் "நம்பக்கூடிய மாற்றம்" என்பன எதைத் தந்திருக்கின்றன என்றும் எவ்வகையான விளைவுகளைக் கொண்டுவரும் என்றும் என்னால் உறுதியாகக் சொல்ல முடியும். சமாதானத்திற்கான நோபல் பரிசை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் சம்பந்தனையும் பொன்சேகாவையும் இணைத்தது நோர்வே என்று சிலர் சொல்லுகிறபடியால் அதற்கான சாத்தியங்களும் நிறையவே உண்டு. அதைவிட போர்க்குற்றவாளியாக இருப்பது சமாதானத்திற்கான நோபல் பரிசை வெல்வதற்கான கூடுதல் தகுதி என்பதால் "நம்பிக்கையான மாற்றம்" சமாதானத்திற்கான நோபல் பரிசை கொண்டுவந்தால் ஆச்சரியப்படுவற்கு ஒன்றுமே இல்லை.

ஒபமாவின் "நம்பக்கூடிய மாற்றம்" கொண்டுவந்திருப்பது ஆப்கானிஸ்தானில் மேலதிக படைகளையும் மேலதிக அழிவையுமே கொண்டுவர உள்ளது. ஏற்கனவே முன்னைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் "ஆட்சி மாற்றம்" மூலம் ஈராக்கில் தொடக்கி வைத்த அழிவை ஒபாமா தொடர்கிறார்.

அமெரிக்காவில் தற்போது 36 மில்லியன் மக்கள் உணவு முத்திரையை பெறுகிறார்கள், அதையே நம்பி சீவிக்கிறார்கள். அதை விட மேலும் 18 மில்லியன் மக்கள் உணவு முத்திரையைப் பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தும் அவர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்படவில்லை. இவ்வாறு அமெரிக்கா பட்டினியில் தவிக்கிறது. ஒரு ஆய்வின்படி, அமெரிக்காவில் பாதிக் குழந்தைகள் தங்கள் குழந்தைப் பருவத்தில் ஒரு பகுதியில் உணவு உதவித்திட்டத்தை நம்பியுள்ளன. இந்த எண்ணிக்கை கறுப்பு இனக் குழந்தைகளைப் பொறுத்தவரையில் 90 சதவிகிதமாக உள்ளது. இதற்கிடையில் கறுப்பு அமெரிக்கராக ஒபாமா இருப்பது கறுப்பின அமெரிக்கர்களுக்கு வாய்ப்பாக உள்ளது என்ற வெட்டிப் பேச்சு வேறு. கிட்டத்தட்ட 30 மில்லியன் அமெரிக்க மக்கள் வேலையின்மையினால் தவிக்கின்றனர். கிட்டத்தட்ட 50 மில்லியன் பேருக்கு சுகாதாரக் காப்பீடு கிடையாது. கிட்டத்தட்ட 50 மில்லியன் மக்கள் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் உணவை அடைய பெரும் கஷ்டப்படுகின்றனர். 40 மில்லியன் மக்கள் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றனர் இந்த எண்ணிக்கை உண்மையான குடும்ப வரவு-செலவு திட்டம் அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்பட்டால் 80 மில்லியன் என்று உயரும். இதுதான் அமெரிக்கர்களுக்கு (அமெரிக்கர்களால்) வாக்களிக்கப்பட்ட "நம்பக்கூடிய மாற்றம்".

30,000 மேலதிக துருப்புக்களை அனுப்புவது என்ற முடிவானது ஒபாமா தன்னுடைய நிர்வாகத்தின் முதல் வாரங்களில் ஆப்கானிஸ்தானிற்கு அனுப்ப உத்தரவிட்டிருந்த கூடுதலான 21,000 துருப்புக்களை தவிர மேலதிகமானது. இதை அவர் தேசிய அளவில் ஒளிபரப்பப்பட்ட உரையில் சொல்கிறார். இந்த உரையை நிகழ்த்த அவர் தேர்ந்தெடுத்த இடம் அவரது வெள்ளை மாளிகை அல்ல, வெஸ்ட் பாயின்டில் இருக்கும் அமெரிக்க இராணுவ உயர் கல்விக்கூடம். புஷ் போலவே இவரும் படைகளின் தலைமைத் தளபதி என்ற முறையில் பேசினார். ஒரு சிவிலிய ஜனதிபதியாக அவர் பேசவில்லை. அமெரிக்காவும் வேண்டுவது அதைத்தான்.

அமெரிக்க அரசியலில் சக்தி வாய்ந்த பங்கை இராணுவம் கொண்டிருப்பது இப்போது வெளிப்படையாகவே தெரிகிறது. அதிலும் முக்கியமாகத் தெரிவிக்கப்படுவது ஜனநாயகம் கிட்டத்தட்ட பொருத்தமற்றது என்ற உண்மையும் இராணுவம் ஒரு சுயாதீனத் தளத்தை பிரதிபலிக்கிறது என்பதும் உலகுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகிறது. உலக அரசியலில் இராணுவமயமாக்குதல் தவிர்க்க முடியாததாகவும் ஏகாதிபத்தியக் கொள்கையுடன் பிணைந்துள்ளதாகவும் மாற்றப்பட்டுள்ளது. இக்கொள்கை ஒபாமாவால் தீவிரமாக்கப்படுகிறது "நம்பக்கூடிய மாற்றம்" என்பதன் பெயரால். எனவே அமெரிக்காவும் தனது தேவைக்கேற்பவே கூட்டாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இலங்கையிலும் கூட அதுவே எதிர்பார்க்கப்படுகிறது அமெரிக்காவால்.

# கோபன்ஹேகன் புவிவெப்ப மாநாடு பேசி ஆவது எதுவுமல்ல

காலநிலை மாற்றம் குறித்த உலக மாநாடு டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் ஐ.நா. ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த மாநாடு ஒரு சரித்திரத்தை எழுதும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் குறித்த விவகாரத்துக்கான தலைவரான யோவ் த ஃபோர் கூறியிருந்தார். இறுதியில் மாநாடு எந்த விட உடன்பாடும் எட்டப்படாமல் நிறைவடைந்தது. அதுவும் கூட ஒரு சரித்திரம் தான்.

உலகில் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றம், மாற்றத்திற்கான காரணம், மாற்றம் ஏற்படாமல் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து விரிவாக விவாதித்து அனைத்து நாடுகளும் உடன்பாடு செய்துகொள்வற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டது. இதில் 140க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்நிலையில் இந்த மாநாட்டில் வளரும் நாடுகள், வளர்ந்த நாடுகளுக்கு இடையில் பருவநிலை மாற்றத்துக்கான காரணம் குறித்து கடும் சர்ச்சை எழுந்தது. வளரும் நாடுகள் வெளியிடும் கார்பன் கழிவுகளினால்தான் பருவநிலை பாதிக்கப்படுவதாக வளர்ந்த நாடுகள் குற்றம் சாட்டின. மேலும் அது தொடர்பாக உடன்பாட்டிலும் கையெழுத்திட வலியுறுத்தின. இதற்கு வளரும் நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இறுதியில் அனைத்து நாடுகளும் சட்டமாக கடைபிடிக்க வேண்டிய ஒப்பந்தம் ஒன்று எட்டப்படவில்லை. பருவநிலை தொடர்பான மகாநாடுகள் கூடுவதும் முடிவின்றிக் கலைவதும் எடுக்கப்பட்ட முடிவுகள் எட்டப்படாததும் இது முதல் முறையன்று. கடைசிமுறையன்று என்று உறுதியாக நம்பலாம்.

புவியில் வெப்ப வாயுக்களின் அளவானது கடந்த பல ஆண்டுகளாகவே காற்று மண்டலத்தில் படிப்படியாக அதிகரித்து வந்திருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். குறிப்பாக கடந்த 50 ஆண்டுகளில் இந்த புவி வெப்ப வாயுக்களின் வெளியீடு அளவுக்கு அதிகமாக காற்று மண்டலத்தில் கலக்க விடப்பட்டிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் துவங்கி, இருபதாம் நூற்றாண்டில் விரைவாக்கப்பட்ட மேற்குலக நாடுகளின் தொழிற் புரட்சியும் உலகமயமாக்கமும் இதற்கான முக்கிய காரணியாகும்.

தொழிற்புரட்சியின் முக்கிய உந்துசக்தியாக இருந்தவை, நிலக்கரி, பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு ஆகிய புதைபடிவ எரிபொருட்கள். இந்த புதைபடிவ எரிபொருட்கள் எரிக்கப்படும்போது வெளியாகும் கரியமில வாயுவே (காபனீரொக்சைட்) புவி வெப்பமடைவதன் முக்கிய காரணி. அத்துடன் காடுகளை அழிக்கும் போது வெளியாகும் மீத்தேன் போன்ற வாயுக்களும், நைட்ரஜனை அடிப்படையாக கொண்ட உரங்களை பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தும்போது வெளியாகும் நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்களும், தொழிற்சாலைகள் வெளியிடும் புவி வெப்ப வாயுக்களும் ஒன்றாக சேரும் போது பூமியின் காற்று மண்டலத்தில் புவி வெப்ப வாயுக்களின் அளவு பலமடங்கு அதிகரிக்கிறது. இதன் விளைவாக, பூமியின் வெப்பம் தொடர்ந்து அதிகமாகி வருகிறது என விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான முதல் உலகளாவிய முயற்சி 1992 ஆம் ஆண்டு பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் மேற்கொள்ளப்பட்டது. பிறகு 1997 ஆம் ஆண்டு ஜப்பானின் கியோட்டோ நகரில் ஒரு புரிந்துணர்வு எட்டப் பட்டிருந்தது. இதன்படி ஒவ்வொரு நாடும் வேறுபட்ட பொறுப்புக்களை ஏற்க வேண்டும். அதாவது வளர்ந்த நாடுகள் தமது கரியமில வாயு வெளியீட்டை குறைக்க இந்த ஒப்பந்தம் வலியுறுத்தினாலும், சீனா, இந்தியா போன்ற வேகமாக வளரும் நாடுகளுக்கு இதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. இதன் காரணம் ஒன்றும் மக்கள் நலன் அல்ல. மாறாக மிகப் பெரிய உற்பத்திச் சந்தையாகவும் நுகர் வுச் சந்தையாகவும் சீனாவும் இந்தியாவும் மாறிக் கொண்டிருந்தன. உலகமயமாக்கல் மிகவும் உச்சமாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனவே எக்காரணம் கொண்டும் அது பாதிக்கப்படக் கூடாது என முடிவு செய்யப் பட்டிருந்தது. மறுபுறம் அமெரிக்கா இந்த ஒப்பந்த த்தை ஏற்க மறுத்துவிட்டது. எனவே முழு கியோட்டோ ஒப்பந்தமும் கிடப்பில் போடப்பட்டது.

வாயு வெளியேற்றத்தில் குறைப்புகள் செய்வதில் இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், குறைப்பு செய்வதால் ஏற்படக்கூடிய பலன்களை நாம் உணர அதிக காலம் ஆகும், ஆனால் அதற்கான நாம் செய்ய வேண்டிய செலவினங்களின் பளுவை உடனடியாக நாம் உணர வேண்டிவரும். போக்குவரத்து, மின்சாரம், கட்டிடங்களை சூடாக வைத்திருத்தல் போன்ற தேவைகளுக்காகக்காக பயன்படுத்தப்படும் பெட்ரோலிய எரிபொருட்கள்தான் வெப்பவாயு வெளியேற்றத்தில் கணிசமான பங்கு வகிக்கின்றன. பெட்ரோலிய எரிசக்தியைப் பயன்படுத்துவதை குறைக்க வேண்டுமானால், சுற்றுச் சூழலை அதிகம் பாதிக்காத எரிசக்தியை நாம் நாட வேண்டும். அதற்கு அதிகம் செலவாகும். குறைவான கரிம வெளியேற்றம் செய்யும் எரிசக்தி உற்பத்தி முறைகளில் முதலீடு செய்ய பெரும் செலவு




செய்ய வேண்டிவரும். அதற்கு எந்தவொரு வளர்ந்துவரும் நாடும் தயாரில்லை.

முக்கியமான வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் கரியமில வாயு வெளியேற்றப் பிரச்சினைகளை முற்றிலும் தத்தம் நாடுகளின் பொருளாதார நிலைப்பாட்டில் இருந்துதான் பார்த்தன. சர்வதேச எரிசக்தி நிறுவனத்தின் மதிப்பீடுகளின் படி உலகெங்கிலும் எரிபொருளுக்கான தேவை அடுத்த இருபது ஆண்டுகளில் 50 சதவிகிதத்திற்கும் மேல் அதிகமாகும். ஒரு நாட்டின் பொருளாதார வலிமை அது இயற்கை எரிசக்தியை அடையும் நிலையைக் கணிசமாகப் பொறுத்துள்ளது. எனவேதான் அமெரிக்கா கிட்டத்தட்ட ஒரு டிரில்லியன் டாலர்களைப் போரில் செலவழிக்கிறது. இப்போர்கள் உலகின் மிக உற்பத்தித் திறன் நிறைந்த எண்ணெய், எரிவாயு இருப்புக்களின் மீது அதன் மேலாதிக்கத்தைச் செலுத்தும் நோக்கம் உடையவையே.

பருவநிலை மாற்றம் காரணமாக வேகமாக புவி வெப்பமடைந்து வருவதால், அடுத்த பத்து ஆண்டுகளில், அதாவது 2020 ஆம் ஆண்டுக்குள் தற்போதைய நெல் விளைச்சலில் பதினைந்து முதல் இருபது சதவீதம் வரை வீழ்ச்சியடையும் என்று வேளாண்மை விஞ்ஞானிகள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

சஹாரா பாலைவனத்தின் மையப் பகுதியில் உள்ள பாறை உப்புச் சுரங்கங்களில் இருந்து ஒட்டகங்கள் உப்புப் பாறைகளை சுமந்து செல்வது என்பது நூற்றுக்கணக்கான வருடங்களாக நடந்துவருகிறது. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி, ஒட்டகப் பயணத்தில் பெரும் பாதிப்புகளை உண்டாக்கியுள்ளது. ஆப்பிரிக்காவில் நூற்றாண்டுகள் காலமாய் வழமையாக நடந்துவருகிற ஒட்டகப் பயணம் பருவநிலை மாற்றத்தின் விளைவாய் விரைவில் மறைந்துபோகும்.

இந்த மகநாட்டில் வெளியேயும் சில முக்கியமான சம்பவங்கள் நடைபெற்றன. உலகம் வெப்பமயமாகும் பிரச்சினை பற்றி தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மகாநாடு நடைபெறும் இடத்திற்கு வெளியே அமைதியாக கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள், ஏராளமான கலகத் தடுப்புப் போலீஸாரால் எதிர்கொள்ளப்பட்டனர் கூட்டத்தின் ஒரு பிரிவினர் அணிவகுப்பில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு, 1,000 பேருக்கும் மேலானவர்கள் காரணமின்றி கைது செய்யப்பட்டனர். பெரும்பாலும் இளவயதினராக இருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் கைவிலங்கிடப்பட்டு உறையவைக்கும் குளிரில் நடைபாதைகளில் பல மணி நேரம் உட்கார வைக்கப்பட்டு பின்னர் கூண்டில் அடைக்கப்பட்டனர்.

இதற்கு முதல் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரை போலிசார் முன்னேற்பாடகவே கைதுசெய்து சிறையில் அடைத்தனர். "எமது காலநிலை—உங்களுடைய வேலையல்ல" என்ற அமைப்பைச் சேர்ந்த 68 உறுப்பினர்கள் 'சட்ட விரோதச் செயலில் ஈடுபடக்கூடும்' என்ற சந்தேகத்தில் பொலிஸ் கைது செய்தது. ஆதாரமற்ற சந்தேகத்தின் பேரில் மக்களைக் கைது செய்ய டேனிஷ் போலீசிற்கு கோபன்ஹேகன் மாநாடு தொடங்குவதற்கு முன்பு இயற்றப்பட்ட ஒரு டேனிஷ் பாராளுமன்றச் சட்டம் அதிகாரத்தைக் கொடுத்துள்ளது.

மொத்தத்தில் மேற்குலகின் ஜனநாயக முகமூடி கோபன்ஹேகனில் கிழிந்து கோவணமாய் தொங்கியது.

- அஸ்வத்தாமா-

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பிரேம்ஜியின் நேர்மையீனமான வாக்குமூலம்: அதுவே திரிபுவாதம் என்பதாகும்.

பிரேம்ஜி கட்டுரைகள், நான்காவது பரிமாணம் வெளியீடு, விநியோகம், பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு 11, 2008 ப. 292 + XVI. ரூபா 500.00

மேற்குறிப்பிட்ட நூலுக்கு அண்மையில் ஒரு வெளியீட்டு விழா நடந்ததனாலும் அதில் உள்ள கருத்துக்களும் தகவல்களும் புரட்சிகர முற்போக்குச் சிந்தனைக்கு முரணானவையாகத் தெரிவதாலும் அதைப் பற்றிய சில குறிப்புக்கள் தேவைப் படுகின்றன. நூலுக்கு அணிந்துரை எழுதிய பேராசிரியர் தில்லைநாதன் முற்போக்கு எழுத்தியக்கம் பற்றிப் பயனுள்ள பல கருத்துக்களை வழங்கியுள்ள போதும், நூலின் உள்ளடக்கம் பற்றியும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கடைசி முப்பத்தைந்து ஆண்டுகள் பற்றியும் எதையுமே குறிப்பிடாமை கவனிக்கத்தக்கது.


இந்த நூலிலே 1975ம் ஆண்டு இ.மு.போ.எ.ச. நடத்திய தேசிய ஒற்றுமை மாநாடு ஒரு பெரிய சாதனையை நிறைவேற்றியது போலத் தோற்றங் காட்டப்படுகிறது. ஆனால் அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளிற் கூடச் சில திருத்தங்கள் பிரேம்ஜி பிற்காலத்தில் தமிழ்த் தேசியவாதத்துடன் செய்துகொண்ட சமரசத்துக்கமைய இடம் பெறுகின்றன. தமிழன் தமிழருக்கான நிருவாக எந்திரத்தைக் கட்டியெழுப்புவது பற்றிய தீர்மானத்தின் வாசகத்தில் நிருவாக (அரசு) எந்திரம் என்று தரப்பட்டுள்ளது (ப.34). இந்த அரசு என்ற சொல் மூலத்தில் இருந்திருக்குமென நான் நம்பவில்லை. அரசு என்பது நிருவாகத்திற்குரிய மாற்றுச் சொல்லுமல்ல.

1990ம் ஆண்டு ஆற்றிய வானொலி உரையில் 'சாதியத்திற்கெதிரான போராட்டம் சனநாயக மாற்றத்தின் ஒரு பகுதி என்பது மனங்கொள்ளத்தக்கது. அது ஒரு குருஷேத்திரமாகத் தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டது' என்று திரிபுவாதிகளதும் இ.மு.போ.எ.சவினதும் துரோகத்துக்கு நியாயம் கற்பிக்கிறார். அதே போக்கில் டானியல் உட்பட்ட பல படைப்பாளிகளைப் பேர் குறிப்பிடாமல் சமுதாயத்தின் ஆத்மாவை ஒரு நிறைவற்ற உருவகக் காட்சியில் காட்டினர் என்று குற்றஞ் சுமத்துகிறார் (ப.65). வரட்டுத்தனமாக சோசலிஷச யதார்த்தவாதத்தை விளங்கிக் கொண்டுள்ள பிரேம்ஜிக்கு இலங்கையில் அது பொருந்தி வரவில்லை என்பதைக் காலங்கடந்தே உணர்ந்த பேராசிரியர் சிவத்தம்பி அது தவறு என்று சொன்னதைத் தாங்க முடியவில்லை. ஆனாலும் பேர் குறிப்பிடாமல் அவரைத் தாக்குகிறார் (ப.128).

கைலாசபதி என்ற பேரை இந்த நூலிற் காண்பதற்குக் கடும் முயற்சி தேவை. அந்தளவுக்குக் கைலாசபதி முற்போக்கு இலக்கியச் சிந்தனைக்கு அளித்த பங்கை மறைக்க வேண்டிய கட்டாயம் இவருக்கு. மறுபுறம், அகஸ்தியர், டொமினிக் ஜீவா போன்றோர் கைலாசபதியின் அறஞ்சார்ந்த அரசியல் நிலைப்பாட்டைப் பூசி மழுப்பி அவருக்கு உரிமை கொண்டாட முயன்றமையும் கவனிக்கத் தக்கது.

1956ல் எழுதிய ஒரு கட்டுரையில் பாரதியையும் பாரதிதாசனையும் ஒப்பிடும் போது, பாரதியிடம் வலிந்து வர்க்கப் போராட்டப் பார்வையைக் காணுகிற அதே வேளை, பாரதிதாசனின் வர்க்க ஆதிக்க விரோதக் கருத்துக்களை எடுத்தெறிந்து பேசுகிறார். பிரேம்ஜியை மிகவும் உறுத்துவது பாரதிதாசனின் மதவிரோத, பார்ப்பனிய விரோதச் சிந்தனைகள் என்றே தோன்றுகிறது.

1972ம் ஆண்டு எழுதிய கட்டுரையில் ஆறுமுக நாவலரைத் தலையாய ஏகாதிபத்திய கொலனிய எதிர்ப்பாளராகவும் மட்டுமன்றிக் கட்டுரைத் தலைப்பிலேயே "நாவலர் - ஜனநாயக சிந்தனையின் மூலவர்" என்று சான்றிதழ் வழங்குகிறார். ஆறுமுகநாவலரது முற்போக்கான பக்கங்கள் உள்ளன. ஆனால் ஜனநாயகம் அதில் ஒன்று என்று என்னால் நம்ப இயலாது. அப்படி ஒருவர் கூறுவராயின் ஜனநாயகம் பற்றி அவர் எதுவுமே அறியாதவராகவே இருப்பார். ஆறுமுக நாவலர் பொதுப் பிரச்சினையில் எல்லா இன, மத மக்களையும் ஒன்று திரட்டி தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி செய்ததாகவும் ஒரு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அண்டப் புளுகன், ஆகாசப புளுகன் என்று கேள்விப் பட்டிருக்கின்றேன். பிரேம்ஜியை வர்ணிக்க அவற்றிலும் வலிதாக வேறொரு சொல் தேவைப்படும்.




தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைப் பேர் குறிப்பிடாமல் கொச்சைப் படுத்துகிற அதே மனிதரால் முழு இடதுசாரி இயக்கமும் தமிழ்த் தேசியம் பற்றி எதிர்மறை நிலைப்பாட்டை எடுத்ததாக மொட்டையாக விமர்சிக்க முடிகிறது. (ப 253)

இந்த நூலில் 1964முதல் இன்று வரை, (1975ம் ஆண்டில் அரசாங்கத் தயவில் தேசிய ஒற்றுமை மாநாட்டை நடத்தியது போக) இ.மு.போ.எ.ச. என்பது என்ன செய்துள்ளது என்று எதுவுமே இல்லை. இருந்தாற் தானே சொல்ல முடியும். மறுபுறம் திரிபுவாதத்தை நிராகரித்தவர்களே முற்போக்கு இலக்கியத்தைப் போராட்ட இலக்கியமாகவும் மக்கள் இலக்கியமாகவும் முன்னெடுக்கப் பணியாற்றி வந்தனர். அவர்களின் இருப்புக் கூடக் கண்ணிற் படாது காத்துக். கண்ணிற்படுகிறபோது எரிச்சலடைகிற ஒரு திரிபுவாதியிடம் வேறெதை எதிர்பார்க்க இயலும்.?

இந்த நூலில் பிரேம்ஜி பற்றிய பல புகழுரைகள், அவை புகழுரைகள் என்பதற்காகவே சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விடத்துப் பிரேம்ஜியின் கட்டுரைகளிலும் இ.மு.போ.எ.ச. வளர்ச்சிக்காக அவரோடு சேர்ந்து உழைத்தவர்கள் பற்றிய குறிப்புக்களைக் காண்பது அரிதாயுள்ளது என்பதும் கவனிக்கத் தக்கது. குறைந்தளவு அவர்களைத் தனது முன்னுரையிலாவது நினைவு கூர்ந்திருக்கலாம். பெரும்பாலான கட்டுரைகள் எழுதப்பட்ட காலம் குறிப்பிடப்படவில்லை கட்டுரைகள் கால ஒழுங்கிலோ விடய ஒழுங்கிலோ இல்லாமை வருந்தத் தக்கது.

## தளபதிகள் தவறு செய்வதில்லை!

அவர்கள் தவறுகளே செய்வதில்லை, அது
அவர்கள் எதையுமே செய்யாதலாலில்லை.
அவர்கள் செய்கிற எதிலும்
சரியான அனைத்தும் அவர்களுடையதாகவும்
தவறான அனைத்தும் மற்றவர்களுடையதாகவும்
உரிமைப்படுத்தப் படுகின்றன.
அதை விடவும், மற்றவர்கள் செய்கிறவற்றிலும்
சரியானவற்றின் வழிகாட்டலுக்கான உரிமையும்
அவர்களையே சாருகிறது.
தவறானவற்றைப் பகிரப் பலருங்
காத்திருக்கின்றனர்.
எனவே, அவர்கட்கு
எல்லோரையுந் திருத்திக் கொண்டிருக்க
முடிகிறது.
என்ற போதும்,
அதே தவறுகள், நாள் தவறாமல்
திரும்ப திரும்ப நிகழ்கின்றன.
ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு தவறும்
அவர்கட்கன்றி மற்றவர்கட்கே
உரித்தாகுகின்றது.
அவர்கள் தவறுகளே செய்வதில்லை, ஏனெனில்
அவர்கள் தளபதிகள்.
தளபதிகள் தவறுகள் செய்ய அனுமதிக்கப்
படுவதில்லை.
ஒரு தளபதி ஒரு தவறு மட்டுமே செய்ததாகத்
தெரியவரும் போது
எல்லாத் தவறுகளும் அதே தளபதிக்கு
உரித்தாகும்
என்பதால், எவருமறியத்
தளபதிக்ள் தவறு செய்வதில்லை. தவறுகளை
ஏற்பதுமில்லை.
நம் தமிழ் இணையத்-தள-பதிகளுந்தான்.

- சி.சிவசேகரம்

(நன்றி: "வினவு" இணையத்தளம்)

## பரிதாபமான பிறவிகள்

ஏ.ஜே. கனகரத்தினாவின் நினைவாக "ஏ.ஜே. -- தி றூட்டெட் கொஸ்மோபொலிட்டன்" என்ற தலைப்பில் 'தமிழியல்' வெளியீடாக 2008 யூலையில் வந்தது.

அதிலே இடம்பெற்ற ஏ.ஜே. பற்றிய கட்டுரைகள் ஏ.ஜேயின் அரசியலைத் தவிர்க்கிற விதமாகவோ இடதுசாரி அரசியற் கட்சிகளை அவர் தவிர்த்தார் என்று கூறுகிற விதமாகவோ அமைந்துள்ளன. அது போக, ஏ.ஜேயை நேரில் அறியாத இருவரது கட்டுரைகள் நூலில் உள்ளன. அவர்களில் ஒருவரான தமிழவன், ஏ.ஜேக்கும் சமுத்திரன் என்ற பேரில் எழுதி வந்த ஒருவருக்குமிடையில் 'லங்கா காடியன்' எனும் ஏட்டில் நடந்த விவாகத்தில், சமுத்திரன் என்பவரின் மூர்க்கத்தனமான வாதங்களைக் கைலாசபதியின் கருத்துக்களாகத் திரித்துக் கூறிக் கைலாசபதியையும் இடதுசாரிச் கட்சிகளையும் தாக்கியுள்ளார். வழங்கப்பட்டுள்ள ஏ.ஜேயின் ஆக்கங்களிற் சில மிகப் பலவீனமான தெரிவுகள். இது தொகுப்பாளருடைய இலக்கிய உணர்வின் வெளிப்பாடா தெரியவில்லை. ஏ.ஜேயின் அரசியல் பற்றியும் இலக்கிய நோக்குப் பற்றியும் விமர்சகர் சிவசேகரம் எழுதி வெளிவந்த சமனான நோக்குடைய ஒரு கட்டுரையோ சிவசேகரத்தின் ஆங்கிலக் கவிதை நூலுக்கு ஏ.ஜே. எழுதிய விமர்சனப்பாங்கான நீண்ட முன்னுரையோ தொகுப்பாளர் செல்வா கனகநாயகத்தின் கண்ணிற் படாமல் இருந்திருக்க இயலாது. நூலின் தொகுப்போடு சம்பந்தப்பட்ட சிலருக்கும் தெரியாமல் இருந்திருக்க இயலாது.

இடதுசாரி எதிர்ப்புக்கு நம்பகரமான ஒரு இலக்கிய விக்கிரகம் இலங்கையில் இல்லை. எனவே ஏ.ஜேக்கு ஒரு இடதுசாரிக் கட்சி விரோதச் சாயம் பூசப்படுகிறது. பரிதாபமான பிறவிகள்.

- திருமுகன் -

## எழும் சிவப்பு எழும்

*தேர்தல் பிரச்சாரம்*
*இரவோடு தொடங்கும்*
*சேவல்கள் எல்லாம் போதையில் சுருளும்*
*மதுபானக் கடைகளெல்லாம் களைகட்டும்*
*மத்திய சாமம் தேர்தல்*
*அதற்கிடையில்*
*(வீட்டில்) வயிற்றில் அடுப்பெரியும்*
*பானையில் நீர் கொதிக்கும்*
*வறுமை கீதம் பாடும்*
*தேர்தல் முடிவு வரும் - காலையில்*
*சேவல்*
*கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்தும்*
*எப்போதும் ஆளும் கட்சி -- ஒரு சிலரைத் தவிர*
*அடுத்த நாழும் பாராளுமன்றம் கலைக்கப்படும்*
*அதே நிலைமை*
*மாற்றம் ஏதும் இல்லை*
*அதே பட்டினி வயிறு எலும்பு உடல் வெறும் பானை*
*வீறாப்புத் தலைமை*
*மாற்றம் வேண்டி மக்கள் எழுவர்*
*மாலை நேர வானம் சிவக்கும்*
*அதன் தாக்கம் காலையிலும் தொடரும்*
*மக்கள் மனம் மாறும் வரை*
*சிகப்பு இருக்கும்*
*மக்கள் சிகப்புக்கு மாறும் போது*
*பௌர்ணமி வரும்*
*சேவல் ஒழியும் ஊழல் அழியும் வறுமை புதையும்*
*சிகப்பு ஆளும்*
*மக்கள் வயிறு குளிரும்*
*வரும், ஒரு நாள் வரும்!*
*எழும் சிவப்பு எழும்!*
*மக்கள் துன்பம் தீரும்!*

- இராகலை மோகன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS NEWS PAPER IN SRI LANKA
டிசம்பர் ஜனவரி 2010

# புதிய பூமி


இணையத் தளம் : Website: www.ndpsl.org



இரண்டு வருடங்களுக்கு மேல் விசாரணை இன்றி சிறையில் வைக்கப்பட்டுள்ள புதிய - ஜனநாயகக் கட்சியின் முன்னணித் தோழர்களில் ஒருவரான தோழர் சுகேசனன் சிறையில் வரைந்து அனுப்பிய ஒவியம்

## இவர்கள் யாருடைய நலன்களைப் பாதுகாக்க முன் நிற்கிறார்கள் உழைக்கும் மக்களுக்காகவா அல்லது சுரண்டும் சுகபோக வர்க்கத்தினருக்காகவா?







ஆகா என்னே ஐக்கியம்!

இது இரகசியம் !



யூ.என்.பி தலைவரும் ஜே.வி.பி தலைவரும் கட்டித்தழுவும் காட்சி



மஹிந்தவும் பிள்ளையானும் இரகசியம் பகிரும் காட்சி





தமிழ் மக்களின் வாக்குகளை வாங்கிக்கொள்ள பிரதான வேட்பாளர்களும் அவர்தம் அடியார்களும் மேற் சட்டைகளைக் கழற்றி நல்லூரில் பக்திப் பரவசமாக நிற்கும் காட்சி

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.